# செங்கோல் வேந்தர்

ஆசிரியர்
டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்
எம். ஏ., பிஎச். டி.

உ

பதிப்பாசிரியர்
பேராசிரியர். பிளோரம்மாள், எம். ஏ., எம். எட்.,
ம. செ. இரபிசிங், எம். ஏ.



பிலோமினா பதிப்பகம்
5/25, புதுத்தெரு
சென்னை - 600 004
1977

முதற் பதிப்பு—1977 ஏப்ரல்

Chenkol Venthar by Dr. A. C. Chettiar.

© உரிமை: பெரியநாயகி சிதம்பரநாதன்.

Edited by, Prof. Florammal.and M. J. Rabi Singh.

விலை. ரூ. 4-00.

Published by
Philomina Publishers
5/25, New Street
Madras - 600 004

அச்சிட்டோர்
ஒப்புரவு அச்சகம்
சென்னை - 600 018

# நூன்முகம்

பேராசிரியர்
டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம், எம். ஏ. எம். லிட்., பிஎச். டி.
முதல்வர், மன்னர் சரபோசிக் கல்லூரி,
தஞ்சாவூர்.

என் ஆசிரியப் பெருந்தகை அண்ணல் டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்களின் பருவுடல் இன்று இல்லை. ஆனால் அவருடைய நுண்மாண் நுழைபுலத்தால் உருவாக்கப்பெற்ற அறிவுச் செல்வங்கள் அவருடைய பெருமையை, அறிவின் ஆழத்தை, அழியாமல் உலகுக்குப் பறை சாற்றி நிற்கின்றன; தமிழகத்திலேயே ஆராய்ச்சிக் கட்டுரையை முதன் முதலாகப் படைத்துப் புதுமை நெறியில் தரப்பெற்ற டாக்டர் பட்டத்தைத் தம் முயற்சியால் பெற்ற மூதறிஞர் அவர் எனின், அவருடைய முயற்சி, புதுமை வேகம், தமிழ்ப் பற்று, ஆராய்ச்சி நாட்டம், ஆங்கிலப் புலமை ஆகியவை கூறாமலேயே விளங்கும்.

அறிஞர் டாக்டர் அ. சி. அவர்கள் எழுதிக் குவித்த கட்டுரைகள் மிகப்பல. மொழியியல் புலமையும், வரலாற்று நுட்பமும் கைவரப்பெற்ற அப்பேராசிரியர் அவர்கள் அவ்வப்போது சில நூல்களை வெளியிட்டுத் தமிழணங்கைச் சிறப்புச்செய்து மகிழ்ந்துள்ளார்கள். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய பணியால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மொழிப் பற்றும், நாட்டுணர்வும், நுண்ணறிவும், ஆக்கத்திறனும் பெற்றுள்ளார்களெனின் அவரின் பெருமையை நான் எவ்வாறு சொல்ல இயலும்? இன்று அவரால் உருவாக்கப்பட்ட பல மாணவர்களுள் ஒருவர் அவருடைய கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்துச் 'செங்கோல்

வேந்தர்' என்ற தலைப்பில் வெளியிட இருப்பது என்னைப் போல் உள்ள அவருடைய மாணவர்களனைவருக்கும் மகிழ்ச்சியூட்டும் என்பதில் ஐயமில்லை. இந்நூலின் வருவாய் அவருடைய இல்லக்கிழத்தியார் வணக்கத்திற்குரிய திருவாட்டி பெரியநாயகி அவர்களின் நல்வாழ்விற்கு உதவும் என அறிய உள்ளம் பூரிக்கின்றேன்.

குடியாட்சி உலகிற்கு வேந்தனைப்பற்றிய அறிவு எதற்கு என எண்ணத் தோன்றும். தலைவர் எவராயினும் அவர் கொள்ளவேண்டிய குறிக்கோளையே 'செங்கோல் வேந்தர்' என்ற கட்டுரை காட்டுகிறது. தலைமைப் பதவியின் பொறுப்பைக் குன்றின்மேலிட்ட விளக்கெனக் குறிப்பதே செங்கோல் வேந்தர் கட்டுரையாகும்.

"குறுந்தொகை" என்னும் கட்டுரையில் இலக்கியச் சுவைகளை ஆசிரியர் அலசிக் காட்டுவதும், "எம்இல் உய்த்துக் கொடுமோ" என்பது போன்ற தொடர்களுக்கு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுமாறு அவர் குறிப்புப் பொருள்களைச் சுட்டிக்காட்டுவதும் அவருடைய ஆழ்ந்த புலமையைக் காட்டி நிற்கின்றன. நக்கீரர் கவித்திறனை ஆராயும்போது இக்காலப் பொதுவுடைமையர் கருத்தை' நக்கீரரிடம் அவர் காண விழைந்தமை அவருடைய அரசியல் அறிவையும் ஆராய்ச்சி வன்மையையும் புலப்படுத்தும். "கம்பர் மக்கள் மனப்பாங்கை அறியும் பெற்றியர்" என அவர் கம்பன் உளப்பாங்கை எடுத்துக்காட்டுவதும், இராமலிங்க அடிகளின் ஒருமைப்பாட்டை ஆய்ந்து சுட்டுவதும், மறைமலையடிகளை "நிலைகுலையா மலை" என நிறுவுவதும், தாகூரின் கருத்துக்களைத் தமிழ் இலக்கியங்களோடு இணைத்து ஒப்பு நோக்குவதும், பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பில்' தோய்ந்து புரட்சிக் கருத்துக்களைக் கோடிட்டுக் குறிப்பதும் டாக்டர் அ. சி. அவர்களின் பரந்துபட்ட நுணுக்கமான நுண்ணறிவைப் புலப்படுத்தும்.

மொழிக்கலை ஒரு புதிய நெறியாகும். அதன் அடிப்படைகளை நுணுக்கமாக, தெளிவாக, அவர் காட்டியிருப்பது

அவர் மொழியையொட்டிய அளவில் ஒரு 'செங்கோல் வேந்தர்' ஆவார் எனச் சொல்லத் தோன்றும். அக்கருத்தைச் 'சொல்லாக்கம்' என்ற கட்டுரை வழிமொழியும். சிறுகதை என்பதும் தமிழில் தோன்றிய ஒரு புதிய இலக்கிய வகையே. அந்த இலக்கிய வகையை மிக நுட்பத்தோடு எடுத்துக்காட்டியுள்ளமை அவர்க்குப் பிறமொழி இலக்கியங்களில் இருந்த ஆழ்புலமையை எடுத்துக்காட்டும்.

இவ்வாறு பல்வேறு கட்டுரைகளில் வெளிப்படும் அவ்ருடைய அறிவுச் செல்வம் மறையாமல் காப்பதற்காக முயற்சி மேற்கொண்டுள்ள செல்வி. புளோரம்மாள் அவர்கள் பாராட்டுக் குரியவர்கள். மேலும், தொகுத்து நெறிப்படுத்தி அச்சேற்ற உதவிய திரு. இரபிசிங்கும் போற்றுதற்குரியார். இவ்விருவரும் செய்துள்ள பணியினைத் தமிழ் உலகு போற்றும் எனக் கருதுகிறேன். நற்றமிழர்கள் பொருட்செல்வத்தால் இந்நூலினை வாங்கி, அறிவுச்செல்வத்தைத் தாம் பெறுவதோடு, அவர்கள் அருட்செல்வர்களுமாக ஆக்கப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறேன்.

மறைந்த, - ஆனால் மறையாமலிருக்கின்ற - பேராசிரியர் அவர்களை என்றும் நினைந்து அவருடைய தமிழ்ப்பணியைப் போற்றி இந்நூன் முகவழியும் அவருக்கு அஞ்சலி செலுத்துகின்றேன்.

**கா. மீனாட்சிசுந்தரம்**

# நூலைப்பற்றி . . .

என்னுடைய கணவர் அமரர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் எழுதிய சில கட்டுரைகளைச் சேர்த்து, 'செங்கோல் வேந்தர்' என்ற தலைப்பில் ஒரு நூலாக வெளியிடுவதில் மகிழ்வடைகின்றேன். பல கட்டுரைகளைப் பார்த்துப் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து, நெறிப்படுத்தி நூல் வடிவு கொடுப்பதற்குத் துணையாக இருந்தவர் இருவர். ஒருவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என் கணவரிடம் பயின்று, இப்பொழுது சென்னையிலுள்ள ஸ்டெல்லா மேட்டிடுயூனு மகளிர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றும் பேராசிரியர் மிஸ். பிளோரம்மாள் அவர்கள். பிறிதொருவர், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துணைப்பேராசிரியராகப் பணியாற்றும் திரு. ம. செ. இரபிசிங் அவர்கள். இருவர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தஞ்சாவூர் சரபோசி அரசினர் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றும், என் கணவரின் தலையாய மாணவரும், நன்மதிப்பிற்குரியவரும், அவரின் வழித்தோன்றலும் நெருங்கிய நண்பருமாகிய பேராசியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நல்ல முறையில் நூன்முகம் வழங்கியுள்ளார். அன்னார்க்கும் என் நன்றி.

நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய ஒப்புரவு அச்சகத்தாருக்கு நன்றியுடையன்.

கும்பகோணம்
3-4-'77

பெரியநாயகி சிதம்பரநாதன்

# பதிப்பாசிரியர் உரை . . .

தமிழ்ப்பேரறிஞர் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக அமைக்கும் வாய்ப்புக் கிடைத்ததை ஒரு பெரும் பேருகக் கருதுகின்ருேம். அன்னாரின் தன்னிகரற்ற ஆற்றலையும், தன்னலங்கருதாத் தமிழ்த்தொண்டினையும் தமிழர்கள் நன் கறிவர். மொழியின் பல் துறையிலும் புலமை பெற்று, எல்லா நிலையிலும் தன்னிகரற்று மிளிர்ந்து, தமிழறிஞர்களி லேயே தனி நாதனுகத் திகழ்ந்தவர் அவர். தாய் மொழியாம் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒத்த புலமை படைத்த பேரறிஞர். தொடாத இலக்கியத்துறை இல்லை எனும் வகையில் சங்ககாலம் தொடங்கி, தற்கால நாவல், சிறுகதை, மொழியியல் வரையிலும் ஆய்ந்து தனது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தியவர். அன்னாரின் இலக்கியச் செல்வங்களைத் தமிழ் மக்கள் நுகர்ந்து பயன்பெறும் வகையில் இந்நூலைத் தொகுத்துள்ளோம். சங்ககாலம், இடைக்காலம், தற்காலம் என்ற வகையில் கட்டுரைகளைப் பகுத்துத் தொகுத் துள்ளோம்.

எங்களுக்கு இந்த வாய்ப்பை நல்கிய, அன்னாரின் துணைவியாருக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரி வித்துக்கொள்கின்ருேம். பல நிலையிலும் டாக்டர் அ. சிதம் பரநாதன் அவர்களை நினைவுப் படுத்துகின்ற பெருமதிப்பிற் குரிய, எங்கள் ஆசிரியர் டாக்டர் கா. மீனுட்சிசுந்தரம் அவர்கள் இந்நூலுக்கு நூன்முகம் வழங்கியதை இந்நூலுக் குரிய ஒரு பெருஞ் சிறப்பாகக் கருதி மகிழ்வு எய்து கின்ருேம்.

நூல் செவ்வையாக வெளிவருவதற்கு உறுதுணையாக எங்களோடு ஒத்துழைத்த, ஒப்புரவு அச்சக மேலாளர் திரு. ந. அரணமுறுவல், பி. ஓ. எல். அவர்கட்கும், சிறப்புற அட்டைப்படம் வரைந்த ஓவியர் திரு. ரமணி அவர்களுக்கும் அன்புடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

சென்னை
3-4-'77

பிளோரம்மாள்
ம. செ. இரபிசிங்

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| செங்கோல் வேந்தர் | ... | 1 |
| குறுந்தொகை | ... | 6 |
| நக்கீரர் கவித்திறன் | ... | 13 |
| தமிழிலக்கிய மகவு | ... | 21 |
| கம்பன் காட்டும் உளப்பாங்கு | ... | 35 |
| இராமலிங்க அடிகளும் ஒருமைப்பாடும் | ... | 41 |
| நிலைகுலையா மலை | ... | 47 |
| தாகூரும் தமிழிலக்கியங்களும் | ... | 55 |
| அழகின் சிரிப்பு | ... | 67 |
| வையாபுரிப் பள்ளு | ... | 74 |
| சிறுகதை | ... | 81 |
| மொழிக்கலை | ... | 90 |
| சொல் ஆக்கம் | ... | 99 |
| ஆங்கில அகராதிகளில் தமிழ்ச் சொற்கள் | ... | 107 |
| பழமொழிகள் | ... | 115 |

# செங்கோல் வேந்தர்

பழங்காலத் தமிழகத்தில் வாழ்ந்த அரசர்கள் செங் கோல் அரசராக இருந்தார்கள் என்பதற்கும், செங்கோல் செலுத்துபவராகவே இருக்க விழைந்தார்கள் என்பதற்கும் உரிய ஆதாரங்கள் பல கிடைக்கின்றன. சபதம் கூறிய மன்னர்கள் சிலர் தமது சபதம் தவறினால், தம்மைக் குடி மக்கள் கொடுங்கோல் வேந்தர் எனக் கூறி இகழ்வாராக என உரைத்துள்ளார்கள். பொதுவாக, சபதம் தவறினால் இன்னது ஆகுக எனக் கூறுவதிலிருந்து ஒருவருடைய குறிக்கோளும் ஒருவரால் மேலானதாக மதிக்கப்படுவதும் அறியப்படும். உதயணன் கதையில் வரும் யூகியாகிய யௌகந்தராயணன் தன் சபதம் தவறினால், தனது சிகை யை அரிந்துவிடுவதாகக் கூறினான். இது கொண்டு அவன் சிகையினிடத்து வைத்த பற்று அறியப்படும். அதைப்போலவே, ஒருவர் இதனைச் செய்யாது போனால் தனக்கு வேறொரு பெயரிட்டு அழைக்க எனக் கூறும் போது, அவர் தமது தாய்தந்தையர் இட்ட பெயரினிடத்து வைத்த அன்பு அறியப்படும். ஒருவர் மகன்மேல் ஆணை யிடுகிறேன் என்றால், அவர் பெறற்கரும் தமது மகனிடத்து வைத்த பேரன்பு அறியப்படும். எனவே ஒருவன் சபதம் தவறினால் இன்னது ஆவேன் எனக் கூறுவதிலிருந்து அவன் வாழ்க்கையில் விரும்புகின்றனவும் வெறுக்கின் றனவும் இன்ன என்பதை நாம் எளிதில் உணர்ந்து கொள்ளக்கூடும்.

பூதப்பாண்டியன் என்ற அரசன் கூறிய சபதம் ஒன்றில், "என்னுடைய பகைவரை ஆரமரில் அலறும்படி தாக்கித் தேரோடும் அவர்களைப் புறங்கொடுத்து ஓடும்படி நான் செய்யாது விட்டால், நியாயங் கெட்டு மெலிகோல் செய்தேன் ஆகுக" என உரைத்தான். இதிலிருந்து, அவன் செங்கோல் வேந்தனாக இருக்க விரும்பினான் என்பதும் செங்கோலினின்று சிறிதுகூட நழுவ விருப்பமில்லாதவனாய் இருந்தான் என்பதும் அறியப்படும். 'கொடுங்கோலன் என்று இகழப்படுவேனாக' என்று கூறிக் கொடுங்கோலிடத்துத் தனது வெறுப்பை மாத்திரம் அவன் காட்டினான் அல்லன். செங்கோலினின்று சிறிதும் வழுவ விரும்பாத காரணத்தால், 'மெலிகோல் செய்தவனாக இகழப்படுக' எனக் கூறினான். இதிலிருந்து அவனுடைய உயரிய இலட்சியம் இனிது விளங்கும்.

அவ்வாறே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் "என் பகையரசர்களைப் போரில் சிதையும்படி தாக்கி அவருடைய முரசுகளோடு ஒருங்கே அகப்படுத்திச் சிறை செய்யாது போனால், என் குடிமக்கள் 'எங்கள் அரசன் கொடியன்' என என்னை இகழட்டும்" என வஞ்சினம் உரைத்தான் எனப் புறநானூற்றுப் பாடல் இன்றொன்றால் அறிகிறோம்.

"என்னிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக" (புறம் 72)

என்னும் அடிகளால், அவன் குடிமக்கள் கண்ணீர் வடித்துத் தன்னை இகழக் கூடாது எனக் கருதினான் என்பது புலப்படும். குடிமக்கள் அரசனுடைய கொடுங்கோலால் துன்பமடைந்து அதைப் பொறுக்க முடியாது அழுதால், அந்தக் கண்ணீரே அரசனுடைய செல்வத்தை அழித்துவிடும் என்பது ஆன்றோர் வாக்கு. இதனைத்தான் திருவள்ளுவர்,

"அல்லற்பட் டாற்று தழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

எனக் கூறினர். எனவே, தான் கூறியதைச் செய்து முடிக்காது போனல், தன் குடிமக்கள் கண்ணீர் வடித்துத் தன்னைக் கொடியன் எனக் கூறட்டும் எனப் பாண்டியன் சொல்லியதிலிருந்து, அவன் செங்கோலினனாக ஆட்சி செய்து மேன்மேலும் தனது செல்வம் பெருகவேண்டும் என விரும்பினான் என்பது ஊகித்து அறிந்துகொள்ளப் படும்.

கவிஞர்கள் செங்கோல் மன்னரைப் பாராட்டியும் கொடுங்கோல் வேந்தரை இகழ்ந்தும் தத்தம் நூலின்கண் உரைத்தனர். உதாரணமாக, பாலை பாடிய பெருங்கடுங்கோ என்ற கவிஞர் தாம் பாடிய கலிப்பாட்டு ஒன்றில், பாலைவன மணல் சூரிய வெப்பத்தால் கருகிக் காய்ந்து கிடப்பதற்கு உவமையாகக் கொடுங்கோல் மன்னனுடைய கொடுமையால் வாடிக்கிடந்த மக்களைக் குறிப்பிட்டார்.

"கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்"

என்ற பாலைக்கலி (செய்.8) அடிகள் காண்க.

பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனர் கரிகால் வளவனது கூரிய வேல் போன்று காடு கடுமையாக இருந்தது என்றும், அவனுடைய செங்கோல் போன்று அவன் தலைவியின் தோள்கள் தண்ணியனவாக இருந்தன என்றும் குறிப்பிட்டார்.

"திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே"

என்பன அவ்வடிகள். எனவே, உவமைகளில் வைத்து ஆளும் வகையான் கவிஞர்கள் செங்கோலைச் சிறப்பித்தனர் என்பது பெறப்படும். மக்களும் கொடுங்கோல் மன்னர் வாழும்

நாட்டைவிட, கடும்புலி வாழும் காடு நல்லது என மதித்தனர். புலவர்கள் அரசரை நோக்கி, "குழந்தைகளைப் பாதுகாக்கும் தாய்மாரைப் போல நும் குடிமக்களை நீவிர் பாதுகாக்க வேண்டும்" என வற்புறுத்தினர்; குடிமக்களைக் கசக்கிப் பிழிந்து வரிகளை வசூலிப்பதால் தீமையே அன்றி நன்மை விளையாது எனப் பகர்ந்தனர்.

சேரன் செங்குட்டுவன் மக்களை ஆட்சி செய்வதென்பது துன்பமே யன்றி இன்பம் எனக் கொள்ளுதற்கு இல்லை எனக் கருதினான். மக்கள் ஏதானும் ஒரு காரணத்தால் வருத்தமுறின் வேந்தன் வருந்த வேண்டும். மழைபெய்வது குறைந்தால் அரசன் அஞ்சவேண்டும். ஆதலால், உயிர்களைப் பாதுகாக்கும் கடமையையுடைய மேலான குடியிற் பிறத்தல் என்பது துன்பமே யல்லாது தொழத்தகும் பான்மையதன்று எனக் கருதினான். அதனால் ஒரு நாள்,

"மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்"

எனச் சாத்தனார் என்னும் புலவரிடம் கூறினான். மழைவளங் குறைந்தால் அரசனுடைய ஆட்சி தவறிற்று எனக் கூறுவது அக்காலத்து மரபு. அதனால்தான், வெள்ளைக் குடி நாகனார் என்னும் புலவர் கிள்ளிவளவன் என்னும் சோழனைப் பற்றிப் பாடியதொரு பாட்டில் மழை பெய்ய வேண்டிய காலத்திற் பெய்யாது பொய்த்தாலும், நாட்டிலே விளைய வேண்டிய பொருள்கள் விளையாது குறைந்தாலும் அரசாட்சியையே இவ்வுலக மக்கள் பழிப்பர் என எடுத்துக் காட்டி, உழவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையை வற்புறுத்தினர். புறநானூற்றிற் காணப்படும் அப்பாட்டில் (செய்.35)

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்,
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்"

என வரும் அடிகள் சேரன் செங்குட்டுவன் கூறியவற்றோடு ஒப்புநோக்கிப் படிக்கத் தக்கன.

எனவே, செங்குட்டுவன் செங்கோலினனாக இருக்க வேண்டும் என்னும் பெருவிருப்புடையவன் என்பது அறியப்படும். இதனை வற்புறுத்துதற்கு உரிய பிறிதொரு சான்றும் உண்டு. தமிழனை இகழ்ந்த வடவரை வெற்றிக் கொண்டு அவர்தம் முடித்தலையில் கண்ணகி வடிவம் எழுதுதற்கு உரிய கல்லினைத் தான் கொண்டு வரத் தவறினால், தன்குடிமக்களை நடுங்கவைக்கும் கொடுங்கோலன் என் மக்கள் தன்னை இகழ்க என வஞ்சினம் உரைத்தான் என்பதால் இது பெறப்படுகிறது. தன்னுடைய ஆற்றலைத் தன் பகைவரிடம் காட்டி அவர்களை நடுங்க வைக்க விரும்பினனேயன்றி, தன் மக்களை நடுங்கும்படி செய்யும் எண்ணம் அறவே உடையனல்லன் என்பது அவன் சொற்களினாலேயே பெறப்படுகிறது.

"வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண்டு அல்லது
வறிது மீளும்என் வாய்வாள் ஆகின்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது, பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆகுக"

என்ற சிலப்பதிகார அடிகளை (கால்கோள்:13-18) நோக்குக.

# குறுந்தொகை

பழந்தமிழ்ப் புலவர்கள் பாடிய செய்யுட்களைப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என மூன்று பெருந்தொகுதிகளாக அமைந்திருக்கக் காண்கிறோம். குறுந்தொகை அத்தொகுதிகளில் எட்டுத்தொகையில் அடங்கும். இதனை 'நல்ல குறுந்தொகை' எனப் பழமையோர் பாராட்டியிருக்கிறார்கள். இந் நூலில் நானூறு பாடல்கள் உண்டு. நானூறு பாடல்களையும் ஒருவரே இயற்றவில்லை; பலர் இயற்றியுள்ளனர். வேலினையுஞ் சேவற் கொடியினையும் உடைய முருகக் கடவுள் பாதுகாப்பதால், உலகம் இடையூறின்றி இருக்கிறது என்ற கருத்தமைந்த கடவுள் வாழ்த்துச் செய்யுளை முதற்கண் வைத்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் முழுதும் அகத்திணைச் செய்திகளே கூறப்பட்டுள. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபடும் இன்பமும், அவ்வின்பத்திற்கு இடையூறாய் இருப்பனவும், காதல்வெற்றியும், இல்லறவொழுக்கமும் தலைவன் தலைவியிடைப் பிரிவும் பிரிவில் ஆற்றியிருத்தலும், பிரிவில் துயரமுறுதலும், ஊடலும், கூடலும் ஆடவர் மகளிர் மனவுறுதியும் இந்நூலிற் கூறப்படும் சிறந்த செய்திகள். இதனுள் உள்ள பாக்கள் எல்லாம் நான்கு முதல் எட்டடிக்குள் அமைந்தவை. பதின்மூன்றடி முதல் முப்பத்தோரடி வரையில் அமைந்த பாக்களைக் கொண்ட அகநானூறு "நெடுந்தொகை" எனக் கூறப்படுவதை நோக்கிக் குறுகிய அடிகளையுடைய இந்நூல் குறுந்தொகை எனப்படுவதாயிற்று.

அளவில் இது குறுந்தொகையாயினும், சுவையில் நற்றொகையாம். இது நற்றொகையாதலை இனிக் காண்போம்.

ஓர் ஆடவனை ஒரு பெண் காதலிக்கிறாள். மகள் காதல்நோய் உற்றிருப்பதை அறியாமல், பெண்ணின் தாய் குறிபார்த்துக் கடவுளுக்குப் பூசைபோட நினைக்கிறாள். குறிசொல்லும் கட்டுவச்சியைப் பார்த்து அப்பெண்ணின் தோழி 'அந்தப் பாட்டைப் பாடு, இன்னும் பாடு, அவர் மலையைப் பாடிய பாட்டை இன்னும் பாடு' எனக் கூறுகிறாள். பல மலைவளங்களைப்பற்றிப் பாடிய கட்டுவச்சி அப்பெண்ணின் காதலனுடைய குன்றத்தைப்பற்றி இப்பொழுது பாடினளாக, அந்தப் பாட்டை இன்னும் பாடு என்று கேட்குந் தோழி தாயாருக்குக் குறிப்பாகத் தெரிவிக்குஞ் செய்தி ஒன்று இப்பாட்டில் இருக்கிறது. அவர்தாம் தன் அருமைத் தோழிக்குத் தலைவர்; அவராலேயே நோய் உண்டாயிருக்கிறது; அவ்விருவருக்கும் விரைவில் மணம் நடத்துக, வீணுகப் பலியிட வேண்டா என்ற குறிப்பினைத் திறம்படத் தோழி அறிவிப்பதுபோல ஔவையார் பாடியுள்ளார்.

"அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே,
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"

என்பதே அச்செய்யுள். அகவன் மகள் என்பவள் குறிசொல்லுங் கட்டுவச்சி. அவள் வயது முதிர்ந்தவளாய் இருந்ததால் நரைத்த கூந்தலை உடையவள். அந்த நரைத்த கூந்தலுக்குக் கூறிய உவமை அழகுடையது. அவள் கழுத்திற் போட்டிருக்கும் சங்குமணிக் கோவைபோல வெண்மையாய் அழகாய் அந்நரை இருக்கிறது என்பதைக் கூறுந் தோழி 'மனவுக் கோப்பன்ன கூந்தல்' எனக் கூறுகிறாள். "நரைத்த கூந்தலையுடையவளே" என இகழ்ந்ததாகக் கட்டுவச்சி கோபிக்காமல் இருக்கும்பொருட்டு,

அடுத்து "நல்ல நெடிய கூந்தலையுடையாய்" எனக் கூறி விடுகிறாள். 'பாட்டி! அந்தப் பாட்டை இன்னுங் கொஞ்சம் பாடு. இன்னும் ஒரு முறை பாடு' எனத் தோழி கெஞ்சுகிற குறிப்பு பாட்டிலே காணப்படுகிறது. இளம் பெண்ணாயிருந்தால், நடுத்தர வயதுடைய பெண்ணாயிருந்தால், தான் பாடிய பாட்டை இன்னொரு முறை உடனே திருப்பிப் பாடத் தயங்குதல் இயல்பு. வந்த கட்டுவச்சியோ வயது முதிர்ந் தவள், பாடிய பாட்டினைத் திரும்பவும் பாட அருமை காட் டாதவள் என்பதைப் புலப்படுத்தவே, 'மனவுக்கோப்பன்ன நன்னெடுங் கூந்தல் அகவல் மகள்' எனக் கூறப்படுகிறாள். இதைப்போன்ற அழகுடைய செய்யுட்கள் பல குறுந் தொகையிற் காணப்படும்.

அக்காலக் காதலர் ஒருவரை ஒருவர் விட்டு விடுதலை அறியார். தலைமகன் ஒருவன் 'கடல்சூழ் உலகத்தை நான் பெற்றாலும், இவளை விட்டுவிடுதலை நினைக்கமாட்டேன்' என்கிறான். அவன் காதலியும 'நிலம் புடைபெயர்ந்தாலும், நீர் நெருப்பாகி, நெருப்பு நீரானாலும் என் தலைவனை விடேன்' எனக் கூறுகிறாள்.

தலைவன் ஒருவன் தலைவியைத் தன் வீட்டிற்கு அழைத் துப் போகிறான். அந்நேரத்தில், தலைவியின் தோழி தலை வனைப் பார்த்து, 'இவளை நன்றாகப் பாதுகாக்க வேண்டும்' என வற்புறுத்துகிறாள். 'பெற்று அருமையாக வளர்த்த தாய் தந்தையரை விட்டு இவள் உன்னோடு வருகிறாள். நீ நல்லது செய்தாலும், கெட்டது செய்தாலும், உன்பால் வைத்த அன்பால் உன்னையே நம்பும் இவளைக் கைவிடாதே; இவளுக்குத் துயரம் நேரிட்டால் அதனை உன்னையன்றிப் போக்குவார் வேறு எவரும் இல்லை. ஆதலால், உன் வீட்டில் இவளை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.' என்று வற்புறுத்த விரும்புகிறவள்,

"இன்னா செய்யினும், இனிதுதலை அளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமங் களைஞரோ இலளே"

எனக் கூறியதாக, அம்மூவனார் ஒரு செய்யுளிற் கூறியுள் ளார்.

தலைவனுடைய வீட்டிற்குப் போன பிற்பாடு ஒருநாள் தலைவி ஒருத்தி சமையல் செய்கிறாள். பதங்கெடாமல் மோர்க்குழம்பை வைக்க விரும்பிய விருப்பத்தால் தயிரைப் பிசைந்த கையென்றும் பாராது புதிய புடவையில் துடைத்துக்கொண்டு, தாளிப்பு வேலையைச் செய்து, துழாவி யெடுத்துத் தயிர்க்குழம்பைக் கணவனுக்குப் படைக்கிறாள். அவனும், 'இனிதாக இருக்கிறதே, இக்குழம்பு அமிழ்தம்' எனக் கூறி உண்கிறான். அவள் முகத்தில் மகிழ்ச்சி நிலவு கிறது. இக்காட்சியை எல்லாம் அங்கு அப்பொழுது வந்து சேர்ந்த தலைவியின் தாய் அவ்விருவரும் அறியாமற் கண்டு மகிழ்கிறாள்.

தலைவன் ஒருவன் சில நாட்களாக வீட்டிற்கு வருவதில் காலந் தாழ்த்தமையால் தலைவிக்கும் தோழிக்கும் அவனிடத்தில் ஐயம் ஏற்பட்டது. ஒருநாள் தோழி அவனைப் பார்த்து, "முன்பெல்லாம் தலைவி வேப்பங்காயைக் கொடுத்தாலும் வெல்லக்கட்டி என்று பாராட்டினீர்; இப்பொழுதோ, குளிர்ந்த இனிய தண்ணீரைத் தந்தாலும் வெந்நீரெனக் கூறி வெறுக்கின்றீர்! உம் அன்பு இவ்வாறிருந்தது!" எனக் கூறி அவனை நல்வழிப்படுத்துகிறாள் என்பதுபோன்ற பாட்டொன்று காணப்படுகிறது.

"வேம்பின் பைங்காய் என்தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர்; இனியே,
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்.
வெய்ய உவர்க்கும் என்றனிர்,
ஐய! அற்றால் அன்பின் பாலே!"

என்பதே அது.

"பலநாள் என்னோடு பழகினதால் நான் உமக்குப் புளிப்பு ஆனேன் போலும்! என்னை வெறுப்பதாய் இருந்

தால் என் தாய் வீட்டிலே கொண்டுபோய் விட்டுவிடுக'' என்று கேட்க விரும்புகிருள் இன்னொரு தலைவி.

"நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனை யாயினெம் இல்லுய்த்துக் கொடுமோ''

என்றதாக அப்பாட்டு வருகிறது. இத்தலைவி நீ கோபித்தால் நான் தாயார் வீட்டுக்குப் போவேன் என்று சொல்லவில்லை. "எங்கள் வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்ப்பாயாக'' எனக் கூறுகிருள். உய்த்தல் என்ற சொல்லிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தல் என்பது பொருள். வீடு வரையிற் கொண்டுபோய் விட்டுவிட்டு உட்புகாமலே தலைவன் ஓடிவருதல் முடியாது. ஏனென்றால், தலைவி 'இல்லுய்த்துக்கொடு' எனக் கேட்கிருள். ஆதலால், வீட்டிற் கொண்டுசேர்த்து என் தந்தையிடம் என்னை ஒப்படைப்பாயாக எனக் கூறுகிறவள் 'கொடு' எனக் கூறுகிருள். இதில் எத்துணை நயம் இருக்கிறது! "தாய்வீடு போகிறேன்'' என்ருலே "போகாதே'' எனத் தலைவன் தடுத்து விடுவான். ஆதலால், தலைவி தாய்வீடு போதல் இல்லை. "உடன் வா'' என்றதால் உடன் செல்லுகின்றவன் தலைவியின் மனத்திலுள்ள பிணக்கத்தை வழியில் மாற்றிவிடக் கூடும். ஆதலாலும், தாய்வீடு போதல் இல்லை. வீட்டிற் கொண்டுபோய் விடுத்த அளவே அல்லாமல், தலைவியின் தந்தையிடம் அவளைச் சேர்ப்பித்துவரத் தலைவன் கூசுவான், நாணுவான். அஞ்சுவான். ஆதலாலும் தாய்வீடு போதல் இல்லை. எனவே, "எம் இல் உய்த்துக் கொடுமோ'' என்று தலைவி கூறியது வெறும் மருட்டல். உண்மையில், தாய்வீடு திரும்ப அவளுக்கு ஆசையில்லை. கணவனுடன் இருக்கவேண்டும் என்பதே அவள் விருப்பம். ஆனல், கணவனைத் தன்வழிப்படுத்தவே இச்சொல் எழுகிறது. "எம் இல் உய்த்துக்கொடுமோ'' எனக்கூறி "என்னைத் தகப்பனுரிடம் சேர்த்துவிட்டுத் திரும்புக, உமக்கு அங்கு வேலையில்லை'' என்பாள் போல, "எம் இல்'' என வைத்துப்

பேசிய இதனை நினைக்குந் தோறும், "நவில்தொறு நூனயம் போலும்" எனத் திருவள்ளுவர் எடுத்தாண் உவமையின் நயம் மனத்தைக் கொள்ளைகொள்ளுகிற

காமங் காரணமாகவே தலைவி தலைவனுடன் இருக்க விரும்புகிருள் என்பதன்று. காம நிகழ்ச்சிகள் இல்லாத பொழுதும் கணவனுடன் இருத்தலில் ஒரு தனியுவகை மச ளிருக்கு உண்டு என்பது.

"காமம் ஒழிவதாயினும்...எம்
தொடர்புந் தேயுமோ நின்வயி னானே"

என ஒரு பெண் கூறியதுபோலக் கபிலர் பாடிய ெ ளால் விளங்குகிறது.

தலைவன் ஒருவன் பொருளீட்டி வருவதாகக் கூ பிரிந்துபோனுன். அவன் இன்னநாளில் வந்துவிடுவேன் எ குறிப்பிட்ட பிற்பாடே தலைவி அவன் போக இசைந்தா அந்த நாள் வந்துவிட்டது; தலைவன் வரவில்லை. தலைவிே அவனுக்கு யாதோர் இடையூறும் வரலாகாது என வேண் கின்ருள். இஃதன்ரோ தமிழ்நாட்டுப் பெண்களி பெண்மை, விரும்பப்படுந்தன்மை, பெட்பு எனச் சிறப்பித்து கூறப்படுவது! அவ்வியல்பினை யறிந்த கபிலர், "கடவு கொடியோரைத் தண்டிக்கும் என்பார்கள். என் தலைவர் இந்நாளில் வருவதாக உரைத்து வராததற்குத் தக்க காரணம் இருத்தல் வேண்டும். ஆதலால் அவர் கொடியரல்லர். என் முகவாட்டம் என் இயல்பால் நிகழ்ந்ததே அல்லாமல், அவர் வராததால் விளையவில்லை" என்ற கருத்தை வைத்து ஒரு செய்யுள் செய்துள்ளார்.

இன்னெரு தலைமகன் மனைவியைப் பிரிந்து கடல் கடந்து போயிருக்கிறுன். அவன் மனைவி எவ்வாறு ஆற்றி யிருக்கிருள் என்பதைப் பெருஞ்சாத்தனர் என்னும் புலவர் தெரிவித்துள்ளார். அவன் சென்றிருக்கும் நாட் டது கடலின் அலைகள் தலைவி இருக்குஞ் சிற்றூரின் முன்னிடம் வரையில் வந்து படுவதாலும், நெடுந்தொலை

வில் அவன் இருந்தாலும் தலைவியின் நெஞ்சிற்கு அணிமையில் இருப்பதாலும் அவள் வருந்தாதிருக்கிருள் என்ற செய்தி.

"கானல் நண்ணிய சிறுகுடி முன்றில்
திரைவந்து பெயரும் என்ப நத்துறந்து
நெடுஞ்சேண் நாட்டார் ஆயினும்
நெஞ்சிற் கணியர் தன்கடல் நாட்டே"

என்ற செய்யுட்பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. தம்மைப் பிரித்து வைத்திருக்கும் கடலிலேயே ஓர் ஆறுதல் காணுந் திறம் இங்கே நோக்கத் தக்கது. அலைகள் ஆரவாரம் செய்வதைப் பார்த்து, "நீங்கள் என் கணவனைப் பிரித்து வைத்து ஏளனஞ் செய்கின்றீர்" என வெகுளாது, அங்குப் படும் அலைகளே இப்பட்டினம்வரை வந்து திரும்பியதால், "பிரிந்துள்ள தலைவர்க்கும் எனக்குமிடையே ஒரு தொடர்பினைத் திரும்பவும் ஆக்கியது அலையே" என அமைதி கொள்ளும் மனநிலை பாராட்டுதற்குரியது. இவைபோன்ற நயமுடைய செய்யுட்கள் பலவற்றைக் குறுந்தொகையிற் படித்து மகிழலாம்.

# நக்கீரர் கவித்திறன்

நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்ற தமிழ்ப்பெருமகனார் நக்கீரர் என்று தமிழ்மக்கள் அறிந்துள்ள அளவு அவருடைய செய்யுட்களின் திறனை அறிந்திலர் என்று கூறுவது புனைந்துரை ஆகமாட்டாது. நக்கீரர் திருமுருகாற்றுப்படையேயன்றியும் நெடுநல்வாடை போன்ற அரிய தொடர்நிலைச் செய்யுட்களை இயற்றியவர் என்பதையும் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய தொகைநூல்களில் வரும் அருமையான செய்யுட்கள் சிலவற்றின் ஆசிரியர் என்பதையும் இன்னும் பலர் அறிந்துகொள்ளவில்லை. காரணம் நக்கீரருடைய நயமுடைய செய்யுட்கள் எளிய நடையில் யாவருக்கும் விளங்கக்கூடிய முறையில் அதிகமாக எடுத்து விளக்கப்படாமையே ஆகும்.

நக்கீரர் இக்காலப் பொதுவுடைமையர் கருத்தையொத்த கருத்தினை ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே இயம்பிவிட்டார். உலகில் மக்களாய்ப் பிறந்தார் எல்லாம் ஒத்தவர்கள் என்ற கருத்தினையும் அவரவருக்கு இயன்ற வகையில் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டுமென்பதையும், அவரவருடைய தேவைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் பொருள்கள் கிடைக்கப்பெறுதல் வேண்டுமென்பதையும் நக்கீரர் அன்றே அறிந்திருந்தார். பேரரசு நடாத்திய பெருமையுடையோருக்கும் உறக்கமின்றித் தொழிலை உன்னிப்போடு செய்த தொழிலாளருக்கும் உண்பதற்கு

நாழி அரிசியும் உடுப்பதற்கு இரண்டு உடுக்கையும் தானே தேவை எனக் கேட்டார் அவர். மற்றன எல்லாம் ஒக்கு மல்லவோ என்றார். நாமே அனைத்தையும் தின்று உடுத்தித் துய்த்து மகிழ்வோம் என்று உள்ளவர்கள் உலகில் இழக் கின்றவை பலவல்லவோ என்றார். இக்கருத்து அவர் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றிற் காணப்படுகிறது. தலைவி ஒருத்தி தலைவனைப் பிரிந்திருந்த வேளையில் ஏற்பட்ட பசலைநோய் விரைவில் நீங்கத் தக்கதே என்ற கருத்தினை அவர் தெரிவிக்க முற்பட்ட குறுந்தொகைச் செய்யுள் ஒன் றில், கடமை உணர்ந்தவனுடைய செல்வம்போல அவள் பசலை நோய் தங்குதற்குரியதன்று எனக் குறிப்பிட்டார். கடமையை உணர்ந்தவன் தன் உடைமையைத் தானும் துய்த்துப் பிறருக்கும் பயன்படுதுவான். ஆதலால் தன் செல்வப்பொருளைப் புரள விடுவான் என்பதும், அதுகாரண மாகப் பணம் அவன் கையைவிட்டு நீங்கும் என்பதும், அவன் கையைவிட்டுப் பணம் நீங்குதலைப் போல அவளது நோயும் நீங்கிவிடும் என்பதும் அவரால் அங்கே குறிக்கப்பட்டவை.

அவர் காலத்தில் வாழ்ந்த மக்களது செல்வச்செழிப் பினையும் அவர் சிற்சில பாடல்களில் உணர்த்தியுள்ளார். எடுத்துக்காட்டாக அகநானூற்றில் வரும் பாடல்களைக் குறிப்பிடலாம். அச்செய்யுட்களில் ஒன்றனுள் அவர் பாண் மகள் ஒருத்தியைப்பற்றிய சொல்லோவியம் தந்துள்ளார். அவள் தன்னுடைய தந்தையார் காலைநேரத்திற் பிடித்து வந்து தந்த பெரிய கொம்பினையுடைய வாளைமீனை விற்கச் செல்கிறாள் என்றும், விற்ற வகையில் கிடைக்கவேண்டிய பணத்தைப் பெருந்தொகையாக்கிப் பெறுகிறாள் என்றும் அவர் கூறியுள்ள கருத்திலிருந்து பல்வேறு இனக்கருத்துக் கள் கிளைக்கின்றன. அவளோ அழகிய சொற்களைச் சொல் லும் பாண்மகள். அவள் தெருவே செல்லும்பொழுது அவள் உந்தி தெரியும்படி ஆடை சரிந்து கிடக்கிறது. அவ்வுந்தி யின் அழகிலிருந்து அவள் அழகினை ஓர்ந்துகொள்ளுதல் கூடும். அவள் செல்லும் தெருவோ நீண்ட கொடிகள் அசையும் பெரிய தெரு. அந்தத் தெருவில் கள் விற்போர்

நிறைய உண்டு. அந்தத் தெரு வழியே செல்கிறவள் வாளை மீனை விற்றுக் கள்ளைக் கொள்ள விரும்பாமல் மேலே கடந்து செல்கிருள் என்ற குறிப்பு பாட்டின்கண் உள்ளது. அத் தெருவிற் பழைய செந்நெல்லைக் குவித்து நிறைய வைத் திருப்பவர்கள் உண்டு. அவர்களிடம் வாளைமீனை விற்று நெல்லைத் தன் அன்றைய தேவைக்கு என வாங்காமல் திரும்பு கிருள் என்ற குறிப்பும் இங்கே இருக்கிறது. அதனுல் அவள் இயல்பாகவே செல்வம் ஓரளவுடைய குடி ஒன்றினைச் சார்ந்தவள் என்பதும், அன்றன்றைய தேவைக்கு நெல்லைப் பெற்று வரவேண்டிய நிலையில் உள்ளவள் அல்லள் என் பதும் குறிப்பிக்கப்படுகின்றன. இவற்றிற்கு மாருக அவள் அரும்பெறல் முத்துக்களைப் பெற்றுத் திரும்புகிருள். ஒவ்வொரு முத்தின் விலையோ அதிகம். எனினும், ஒரு முத் தைப் பெறுதற்குரிய அளவு வாளைமீனை அவள் நாடோறும் விற்கவில்லையாயினும், சில நாட்கள் வாளைமீனை ஒரே வீட்டிற் சேர்த்து சேர்த்துக் கொடுத்துப் பணத்தை நிறுத்தி வைத்திருக்கிருள் ஆதலால், சில நாட்கள் கழித்துப் பிற்பாடு முத்துக்களோடு நல்ல அணிகலனைப் பெறக்கூடிய அளவிற் சேமிப்பு செய்யக் கூடியவாறு தகுதியும் மனவுறுதியும் அவள் உடையவள் என்பது எத்துணை நயம்படக் கவிஞர் நக்கீரராற் காட்டப்பட்டுள்ளதென்பது அடியில் வரும் அகநானூற்றுப் பகுதியால் தெரியவரும்:

"...தன்ஐயர்
காலைத் தந்த கனைக்கோட்டு வாளைக்கு
அவ்வாங்கு உந்தி அஞ்சொற் பாண்மகள்
நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகிற்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பு................................"

சில சொற்களாற் பல அரிய கருத்துக்களைப் பெருங் கவிஞர்கள் அமைத்துத் தந்துவிடுவார்கள் என்பதன்

உண்மை இப்பாடற் பகுதியால் நன்கு விளங்குகிறது. “அவ்வாங்கு உந்தி அஞ்சொற் பாண்மகள்” என்ற சில சொற்களால் ஓர் அழகிய, தேனூறுஞ் சொல் பேசுகின்ற ஒரு வடிவத்தை நம் கண்முன்னே கவிஞர் உருவாக்கி விட்டார். “நெடுங்கொடி நுடங்கும் மறுகு” என்றமையால் இன்னின்ன பொருள் இந்த இந்தக் கடையில் விற்கப்படு கிறது என்பதை விளக்கிக்காட்டும் பெருந்தெரு ஒன்றனுள் அவள் செல்கிறாள் என்பது குறிக்கப்பட்டுள்ளது. “நறவு ம்றுகில்” என்றமையால் பலர் தாளாற்றிய பொருள் கொண்டு கள் குடித்துச் சென்றார்கள் ஆக, அவள் உர நெஞ்சுடன் அக்கடைகளுள் எதனையும் எட்டிப்பாராமல் நெடுகச் சென்றாள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. “பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளா” என்று கூறிய வகையால் நகர மாந்தரின் செல்வச் செழிப்பும் பற்றாக் குறையின்மையும் எடுத்து இயம்பப்பட்டது. கழங்கினை ஒத்த ஆணிமுத்துக்களையும் நல்ல அணிகலன்களையும் அவள் பெறக் கூடிய அளவு பயன் நிரம்பிய ஊர் அது என்பதை எவ்வளவு இனிமையாக இப்பகுதியினுள் இக்கவிஞர் மொழிந்துள் ளார் என்பதை நினைத்து நினைத்து இன்புறுதல்கூடும்.

அக்கால மக்கள் எதற்காக உடலுழைப்பு உடையவர் களாக இருந்தார்கள் என்பதை இவர் ஒரு பாட்டில் விளக்கி உள்ளதை நாம் இன்றும் கண்டு பின்பற்றிச் செயலாற்று தல் கூடும். ஒருவர் தொழிலைச் செய்வது எதற்றாக? உறவினர்கள் வறுமை உடையவர்களாய் இருப்பின், அவர் களுடைய வறுமையைப் போக்கி அவர்களைத் தாங்கும் பொருட்டும், உற்றார் உறவினர் குடும்பத்தார் அனைவரும் வயிறார உண்ணும்பொருட்டும், நட்பும் பகையும் கொள்ளா மல் நொதுமலராய் உள்ளவர்களைத் தன்வயப் படுத்தி நண்பர்களாக ஆக்கிக் கொள்ளும்பொருட்டும் ஒருவர் பொருள் ஈட்டும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்ற கருத் தினை அகநானூற்றுச் செய்யுள் ஒன்றனுள் அமைத்து அவர் பாடியுள்ளார்.

அப்பாட்டினுள் தலைவி ஒருத்தியது நெற்றியின் மணத்திற்கு உவமையாக அவர் கூறியதொன்று நினைக்கத்தக்கது. பகல் அங்காடியின் நறும்மணம் போல அவள் நுதல் மணம் இருந்ததென்று குறிப்பிட்டுள்ளார். பாண்டிய மன்னனுடைய மதுரையம்பதியிலுள்ள நாளங்காடியின் நறுமணம் போல அவள் நெற்றியின் விரை உள்ளது என்று கூறியிருப்பதுகொண்டு எவ்வளவு துப்புரவாக அங்காடிவீதியை அக்காலத் தமிழக மக்கள் பேணினர் என்பது எண்ணத் தக்கது.

தலைவி வேறொருத்தியைப்பற்றி இவர் வேறொரு அகநானூற்றுப் பாடலிற் பேசியுள்ளார். அவள் செல்வத் தாய் வீட்டில் திருமணம் செய்து கொள்ள விரும்பாமல் தலைவனுடைய சிறிய ஊரில் அமைந்த சிறு குடிலிற் போய்ப் பொருந்திய செய்தியைநினைந்து கூறுகின்ற செவிலித்தாயது கூற்றுப் போன்று அமைந்த அகநானூற்றுச் செய்யுளில், அவளுடைய தலைவன் வறியவன் எனினும் இவளைப்பெறுதற்கு உரிய பெருந்தகுதி உடையவன் என்பதைப் புலப்படுத்தி, சிறப்பும் சீரும் சிற்றூர் பெற்றிராவிட்டாலும், அவளோடு பொருந்திய உழுவல் உள்ளத்தையுடைய அத் தலைமகனுக்கு அவள் பொருந்தியவள் என்பதைப் புலப்படுத்தி உள்ளார். தலைவியினுடைய தாய்வீடு செல்வம் கொழிக்கும் வீடு ஆயினும், அங்குத்தங்க விரும்பாமல் தலைவி புல் வேயப்பட்ட தலைவனுடைய சிறு குடிசையில் வாழ்வதையே பெரிதாக மதித்தாள் என்பதையும் புலப்படுத்தியுள்ளார். ஒற்றைத்தூணையுடைய முற்றத்தோடு கூடிய வீடு அது; ஒரே ஒரு பசு கட்டப்பட்டுள்ள வீடு அது; பெரும் பொருள்கள் இல்லாத வறுமனை அது. ஆயினும், அவ்வீட்டினுள்ளே உறைவிடமாகக் கொள்வதற்கு மகிழ்ச்சி கொண்டாள் அத்தலைவி என்பதை அழகுற அச்செய்யுள் காட்டுகின்றது. அத்தலைவி தலைவனுடைய வீடு செல்லுதற்குமுன் வருந்தி இருந்ததொரு நேரத்தில் இயற்கைப் பொருட்களிற் சில அவளோடு கலந்து உறவாடி எவ்வாறு

பிரிந்திருந்தன என்பதைக் கவிஞர் சுட்டிக்காட்டி இருக்கும் அழகினை ஆங்கில ஆய்வுரையாளரோ வடமொழி ஆய்வுரையாளரோ காணின், வியப்புற்றுப் பாராட்டுவர் என்பது உறுதி. தலைவனுடைய வருத்தத்தைப் பிற பொருள்களின் மேல் சார்த்தி உரைத்திருக்கும் கவிநயம் நினைக்குந்தொறும் நினைக்குந்தொறும் இன்பம் விளைக்கிறது.

"... செந்தார்க்
கிள்ளையும் தீம்பால் உண்ணா மயிலியற்
சேயிழை மகளிர் ஆயமும் அயரா
தாழியும் மலர்பல அணியா"

என்ற பகுதியில், தலைவியின் வருத்தத்தை நோக்கிக் கிளிகளும் பால் குடிக்கவில்லை, என்பதையும், உடனிருந்த தோழியர் விளையாட முற்படவில்லை என்பதையும், பூந்தாழிகளில் மலர்கள் பூக்கவில்லை என்பதையும், கவிஞர் சொல்லியுள்ளார். இவ்விடத்தில், கிளிகளின் கழுத்தில் மாலை போன்ற அழகுடைய வண்ணம் உண்டு என்பதையும், பால் மிகவும் இனியதாக இருந்தும் கிளிகள் தலைவியின் துயர்காரணமாகத் துயருற்றிருப்பதால் குடிக்க விரும்பவில்லை என்பதையும், அவளுடைய தோழிமார் அனைவரும் மேனியழகும் சாயலும் செல்வச்செழிப்பும் உடையவர்கள் என்பதையும் கவிஞர் எத்துணை நயம்பட உரைத்துள்ளார். இவற்றிற்கு மேல், "தாழியும் மலர்பல அணியா" என்று இவர்கூறிய இடத்தில் இயற்கைப்பொருட்களில் கவிஞர்க்கு உள்ள ஈடுபாடு எவ்வளவு இனிதின் விளங்குகின்றது! பூஞ்செடிகளையுடைய மண்சட்டிகள்கூட 'இத்தலைவியின் நோய் காரணமாக மலர் அணிய விரும்பவில்லை என்றவாறு இவர் உரைத்திருக்கின்ற திறம் வியக்கத்தக்கது. இப்பாடலை அகநானூற்றில் 369-ஆம் பாடலாகக் காணலாம்.

திருமுருகாற்றுப்படையில்,

"மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறன் மள்ள

அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
..............................................
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்று டகவத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!

என நக்கீரர் முருகனைப்பரவுதலாகப் பாடியுள்ள பகுதி இன்று தமிழ்மந்திரம் போலச் சொல்லிப் பூசிப்பதற்கு உரியதாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நெடுநல்வாடையில் ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களாகிய கூதிர்காலத்தைப் பற்றி இக்கவிஞர் வருணித்துள்ள பகுதி இன்றும் ஒத்திருக்கக் காண்கிறோம். பெரும் பனி நலிய வாட்டுதலையும், பலர் கொள்ளிக்கட்டை கொண்டு தீக்காய்வதையும், மக்களுடைய தாடை புடைத்துக்கொண்டு அடித்துக்கொள்வதையும், விலங்குகள் மேய்ச்சலைக்கூட மறந்து கிடப்பதையும், பறவைகள் செயலற்று மடிந்து வீழ்வதையும், கறவைப்பசுக்கள் கன்றுகள் முட்டிப் பால் கொள்வதைத் தவிர்க்க முற்படுவதையும் கவிஞர் அழகுற எடுத்து இயம்பியுள்ளார். குன்றே குளிர்ந்து வந்தால் ஒத்த கூதிர்காலம் அது என்று இவர் கூறியுள்ளார். அப்பகுதி நேரிற் கண்டு இன்புறத்தக்கது. தலைவனைப் பிரிந்துள்ள தலைவி தன் பிரிவுத் துயரால் வருந்துகிறவளுடைய கண்களிலிருந்து தோன்றும் நீர்த்துளிகளைச் செவ்விய விரல்களால் அழித்துத் தெறிக்கின்ற நிலையையும், செயல் மேற்கொண்டு வினைக்களம் சென்றுள்ள தலைவன் நள்ளிரவி

லும் பள்ளி கொள்ளாமல் ஆர்வத்தோடு செயலாற்றிய திறத்தினையும் கவிஞர் வருணித்துள்ள வித்தை நெடுநல் வாடை நூலைக் கொண்டே அறிதல் வேண்டும்.

நக்கீரர் செய்யுட்களைப் படிக்கப்படிக்கத் தமிழின்பத் தில் ஒருவர் திளைப்பர் என்பது திண்ணம்.

பா. இராசு, எம்.ஏ., எம். எட்.
"காவேரி இல்லம்"
17. G, பேட்டை மேல வடக்குத் தெரு,
'சிவகாமி நகர்'
கும்பகோணம் - 612 001

# தமிழிலக்கிய மகவு

தமிழிலக்கியத்தே ஆங்காங்கே காணப்படும் மகவினைப் பற்றிய செய்திகளுட் சில ஈண்டுத் தரப்படும். அவற்றைக் காணும் அன்பர்கள் அவைபோன்ற பிறவற்றையுங் கண்டறிந்து மகிழ்வார்களென்னுங் கருத்துடனே இக்கட்டுரை எழுகின்றது. மக்களில்லாதவர் பொன்னுடையரேனும், புகழுடையரேனும் மற்றென்னுயடையரேனும் உடையரல்லர் என்னும்நளவெண்பாக் கருத்தை அறியார் தமிழிலக்கியமறிந்தாருள் இரார் என்பது ஒருதலை. அக்கருத்தைத் திருவள்ளுவர் தம் அரிய நூலினுங் காணலாம். ஒருவன் பெறக்கூடிய பேறுகள் பலவற்றுள் அறிவறிந்த மக்களைப் பெறுதலே பெரும்பேருக வள்ளுவரால் வாழ்த்தியுரைக்கப் பட்டுள்ளது. அதனையே புறநானூற்றுச் செய்யுளொன்றும் தாங்கி நிற்கின்றது. அச்செய்யுள் பாண்டியன் அறிவுடை நம்பியால் அருளப்பட்டது. அதன்படி, படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் பெருஞ் செல்வத்தை உடையரேனும், அறிவை இன்பத்தான் மயக்குகின்ற மக்களையில்லோர் பயனற்ருேர் ஆவர் என்பது அறியப்படுகின்றது.

இங்ஙனம், மகவினை யில்லார்க்கு இல்லை பலன் என இவையுரைப்பதற்கேற்ப, மகவினையுடையார்க்கு உள்ள பலனை அந்நூல்களும் வேறு பிற நூல்களும் விதந்தோதக் காண்கின்ருேம். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" என்ருர் வள்ளுவனுர். மக்களது மெய்யைத் தாம் தீண்டுதல்

பெற்றோர்க்கின்பம் என்றும், மக்கள் தமது மெய்யைத் தீண்டுதலும் பெற்றோர்க்கு இன்பம் என்றும் கொள்ளக் கூடிய முறையில் இக்குறட்பகுதியை வைத்த வள்ளுவரின் வாய்மையை என்னென்பது! தனது மக்களைப் பிரிந்து சில் லாண்டு சென்று பின் அவரைக் காணலுற்ற நளன் ஓடிவந்து அவரை யெடுத்து வீரப் புயத்தணைத்து 'மக்காள் நீர் என் மக்கள் போல்கின்றீர்; யார் மக்களென்றுரைத்தான்' எனப் படிக்கின்றோம் அன்றோ? அவன் அவரைத் தனது வீரப் புயத்தே விரும்பியணைத்தகாலத்துஉற்றஇன்பத்தையாவரே சாற்றவல்லார்? புறநானூற்றிலும் மக்கள் உடலுறுதலால் வரும் இன்பம் உரைக்கப்பட்டுள்ளது. சோழன் குளமுற் றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்தன் பகைவருடைய செய லாகக் கோவூர்கிழார் ஒரு பாட்டு பாடியுள்ளார் (புறம் 41). அதனுள், அப்பகைஞர் தத்தம் பூங்கட் புதல்வரை முத்திச் செல்லும் செய்தி செப்பப்பட்டுளது. புதல்வர் உடலுறு தலால் வரும் இன்பம் என்பது ஒன்று இலதேல், போருக்குப் புறப்படும் அவர் அப்புதல்வரை முத்திக்கொண்டு சென் றிரார் அன்றோ? அதிலும், உறங்கிக்கொண்டிருக்கும் மகா ரது கண்ணை முத்திப்போகார் அன்றோ? இனி, குழவி ஞானசம்பந்தரும் அழைத்தவருடைய செழுமுகங்களைத் திரு நகையால் மலர்வித்தும், வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர் மேற் செல உகைத்தும், உருகி மனங்கரைந்து அலையுமாறு உடனணைந்து தழுவியும், பெருகிய இன்பினைப்பெருக அளித்த தாக அன்றோ சேக்கிழார் பெருமானும் வாக்களித்திருக்கின் றார்! மேலும், பள்ளியிலிருந்து கொண்டுவரப்பட்ட தமது பிள்ளை கறியமுதாகுமே எனுங்கருத்தால் திருவெண்காட்டு நங்கையார் அதனை உச்சிமோவாது, மார்பின்கண் அணைத்து முத்தமுண்ணாதிருந்தார் என்றும், பின்னர்க் கறியான சீரா ளன் பரமரருளால் ஓடிவந்த காலையில் அவனையெடுத்துத் தழுவித் தமது கரமுன் அணைத்துக் கணவன் சிறுத்தொண் டனார் கையிற் கொடுக்க, அவரும் கையில் எடுத்துக் களி கூர்ந்தார் என்றும் அப்பெரியாரே உரைக்கக் காண்கின்றோம். இதனாலும் மகவினது உச்சிதனை முகத்தலாலும், அதனை

மார்பிலணைத்து முத்தமுண்ணலாலும், எடுத்துத் தழுவலாலும், கையில் வாங்கிக்கொள்ளலாலும் வருவதோர் ஊற்றின்பத்தை உற்றுர் உளர் என்பது தெளிவாகின்றது. இவற்றையெல்லாம் கவிஞர் பாரதியாரும் தமது "கண்ணன்—என் குழந்தை" என்ற தலைப்பின்கீழ்த் தந்துள்ளார்.

"சின்னஞ் சிறுகிளியே — கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
... ... ... ...
உச்சிதனை முகந்தால்—கருவம்
ஓங்கி வளருதடி
கன்னத்தில் முத்தமிட்டால் — உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா
உன்மத்த மாகுதடி"

என்னும் அடிகளை நோக்குக.

மெய்தீண்டலால் வரும் இன்பம் இன்னணம் இயம்பப்பட்டுள்ளதுபோல், மகாரின் மழலைமொழியால் வரும் இன்பமும் மொழியப்பட்டுளது. தத்தம் மக்களுடைய மழலைச் சொற்களைக் கேட்டிராதவர் அன்றோ குழலினிது யாழினிது என்று கூறுவர் என்கிறுர் நாயனுர். "யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா பொருளறி வாரா ஆயினும் தந்தையர்க்கு அருள்வந்தனவால் புதல்வர்தம் மழலை" என உரைத்துள்ளார் ஔவைப்பிராட்டியார். புதல்வர் தம் மழலை இனிது என்றுராயினும், இனம்பற்றிப் புதல்வியார் மழலையும் இனிது என்றுர் எனக்கோடலே சிறப்புடைத்து. ஆனுல், "மகாரின் மழலை யாழொடு ஒவ்வாவிட்டாலும்" என்று பொருள்படும்படி "யாழொடுங் கொள்ளா ஆயினும்" என்று கூறிய அவர் வாக்கு நாயனுரின் வாக்குக்கு ஒவ்வாது என்பதில் ஐயமுண்டோ? பிள்ளை யொன்றும் பெற்றிலா அப்பிராட்டியார் தம்பிள்ளை சொல்லைக் கேட்டிருக்க முடியாதன்றோ? தம் பிள்ளை சொல்லைக் கேளாத

அவர், 'மழலை யாமொடு பொருந்தாவிட்டாலும்' என்று சொல்லின்மையால் தாமே நாயனர் குறளுக்குக் கரியாயினரன்றோ?

மக்களது சிறு குதலையைக் கேளாத செவியும் செவியோ என்ற கருத்து நளவெண்பாவில் வருதலையுங் காண்கிறோம். "காரணமின்றி நகைக்கும்பொழுது சிறிதே தோன்றும் அரும்புபோலும் பற்களோடும், பேச முயல்கின்ற இனிய மழலைச்சொற்களோடும் மடிமீதிருக்க வருகின்ற தம் புதல்வர் மேலுள்ள புழுதி தம்மேற் படிந்து அழுக்காகப் பெறுகின்றவர்களே நல்வினையாளர்கள்" என்று துஷ்யந்தன் கூறியதாகச் சாகுந்தல நாடகத்தே காண்கின்றோம். பாரதியாரும் "சொல்லும் மழலையிலே கண்ணம்மா, துன்பங்கள் தீர்த்திடுவாய்" என்று பகர்ந்துள்ளார்.

மகவினைக் காண்டலாலும் ஓர் இன்பம் உண்டு என்பது உய்த்துணர் வகையான் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று கொண்டு அறியப்படுகிறது. தனக்குப் பிறந்த தவப்புதல்வனைக் கண்டும் அதியமானது சினம் தணியாதிருந்தது. அதைக்கண்ட ஔவையார் சொல்லியது இது. "செறுவர் நோக்கிய கண் தன்சிறுவனை நோக்கியுஞ் சிவப்பானவே." இதனல், சிறுவனை நோக்குதலால் ஓரின்பம் உண்டாதலில்லை என்பது கருத்தன்று. மற்று, அதியனது பகைவர்மாட்டு வெகுளி பெரிதாக இருந்தது என்பதே கருத்து. இப்பகுதியிலிருந்து, சிறுவனைக் காணின் சினம் தணியும், அஃது இக்காலை அங்ஙனம் ஆகாதது வியப்பே என்பதே பெறப்படும். குழந்தையைக் காண்பதால் ஓரின்பம் உண்டாம், அவ்வின்பத்தின்முன் வெகுளி நில்லாதாகும் என்ற இக்கருத்தே பாரதியாராலும் ஓதப்பட்டுள்ளது. அதனை "முல்லைச் சிரிப்பாலே—எனது மூர்க்கந் தவிர்த்திடுவாய்" என்பதனல் அறிக.

இனி, மகாரின் படம் சிலவற்றைக் காண்போம். சாகலாசனர் என்னும் புலவர் அகநானூற்றுள் தந்துள்ள ஒன்றில் ஒரு குழவியின் கையும் வாயுமே வருணிக்கப்பட்டுள.

ஆயினும், அவற்றுலேயே ஒரு குழந்தை தென்படுவது போற்ருேற்றுகிறது. அக்குழந்தையின் கை தாமரை யிதழை யொத்திருக்கிறதாம். தாமரையிதழ் என்றவுடன் அதன் சொரசொரப்பு கைக்குமுண்டோ என்னும் ஐயம் களைய வேண்டி, தாமரையின் உள்ளிதழ் என்று கூறப் பட்டிருக்கிறது. அதிலும், உள்ளிதழ்க்கு அயலே உள்ள இதழையொத்தன அக்கைகள் என இயம்பப்பட்டுள்ளன. அதனுல், கைகளின் வெண்சிவப்பு நிறமு மென்மையும் பெறப்பட்டன. மேலும், அக்கைகள் இலக்கணக்குறை யற்றவை எனக் கூறப்பட்டுள்ளன. அஃதாவது அவை எல்லா இலக்கணமும் நிரம்பியவை என்றவாறு. அதன் வாய் அழகிது என்று சொல்லப்பட்டுள்ளது. பவளத்தை ஒரு புறமும் அவ்வாயை ஒருபுறமும் வைத்துநோக்கினுல் பவளம் 'இதன்முன் நான் நிற்கத்தக்கேனே' என்று மருண்டு ஓடிவிடும் அத்துணைச் சிவப்பு நிறமுடையது வாய் என்ற வாறு. அவ்வாயினின்று தோன்றுஞ் சொற்களோ தேனினும் இனியவை. அவை நகைப்பை விளைவிக்கத்தக்கவை. காரணம், குழவிசொல்ல நினைக்கும் சொல் நாக்கொடு சேர்ந்து வராமையே. அம்மா என அழைக்க நினைக்கும் குழவி 'மா' என்று கூறுகிறது. அப்பா என விளிக்க நினைந்து 'பா' எனவே கூறுகின்றது. இவையெல்லாம் அமையாவென்று அவ்வாண்குழந்தை பொன்னுல் ஆகிய அணி வேறு தாங்கி நிற்கிறது. இக்குழந்தையைக் கண்டால், பெற்ருேரின் பகைவர்கூட எடுத்தணைத்துமுத்திக் கொள்ள விரும்புவார் என்பதில் ஐயமுண்டோ? இக்குழந்தைப் படத்தைக் கீழ்வரும் அடிகள் காட்டுகின்றன:—

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி யயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலங்தொடிப் புதல்வன்".

மற்ருேர் குழந்தையின் படத்தைப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று காட்டுகின்றது. அம்மகவு பெரிய இடத்

இலே பிறந்து வளர்ந்து வருகிறது. அடிமேல் அடிவைத்துத் தளர்ந்து தளர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக நடக்கிறது. நடக்கும் பொழுதே தனது சிறிய கையை இப்படியும் அப்படியும் நீட்டுகிறது. நீட்டிக்கொண்டே உள்ளிடம் சேர்கிறது. அங்கே அதன் தந்தையார் உண்ண உட்கார்ந் திருக்கிறார். அருகேவந்து கையை உண்கலத்தில் இடுகிறது. இட்டுத் தோண்டுகிறது. தோண்டினதைத் தரையிலே நழுவவிடுகிறது. அதனையே மீண்டும் எடுத்துக் கலத்திற் போடுகிறது. சிறிதெடுத்து வாயாற் கௌவுகிறது. பின் அக்கையையே மீண்டும் கலத்தில் இட்டுத் துழாவுகிறது. கொஞ்சம் சோற்றை எடுத்து வாயிற் கொள்கிறது. கைக் கெட்டியதெல்லாம் வாய்க்கு எட்டி விடுகிறதா? சில சோறு கீழே விழுந்து விடுகின்றன. அவற்றுள் சில அதன் மார்பி லேயே விழுந்து கிடக்கின்றன. போதாக்குறைக்குத் தந்தை யாருக்குவேறு, சோறு ஊட்டவும் தொடங்கிவிடுகின்றது. அது அவர் வாயிற்பாதி உடம்பிற்பாதியாய்ச் சேர்கிறது. தந்தையார் உடனலக்கலை நன்றாகக் கற்றவர். குழவியோ அழுதகண்ணீர் துடைத்த கையொடு, தவழ்ந்து நடந்து புழுதிபடிந்த கையோடு கொடுக்கிறது சோற்றை. பெறுவதா விடுவதா என்ற ஆராய்ச்சியே கிடையாது அப்பெரியார்க்கு. அவருடைய அறிவெல்லாம் எங்கேயோ போய்விடுகிறது. அவர் அறிவைக் குழந்தையின் இன்ப அன்பு மயக்கிவிடு கிறது. ஆ! இக்குழந்தையின் பெருமை என்னே!

இன்னொரு மகவினை மகாவித்துவன் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தந்திருக்கிறார்கள். அதனையுங் காண்போம். அக்குழந்தை தெருவிலே விளையாடிக் கொண்டிருக்கிறது. கள்ளங்கபடு வந்து இன்னுங் குடிகொள்ளாத பேதை அக் குழந்தை. தெருவில் திருவிடைமருதப்பர் உலா வருகின்றார். அவர் யாவர் எனக் கேட்கிறாள் அச்சிறுமி தன் அன்னையை. "நம்மையெல்லாம் ஆட்கொண்டு நாம் வேட்டவை யளிக்க அம்மையொடும் வரும்அப்பர் அவர்" என்னும்விடையைபெறு கிறாள். உடனே சிறுமி அவர் முடியில் உள்ள அம்புலியை

வாங்கித்தருமாறு வேண்டுகிறாள். கேட்ட அன்னை அஃது அவ்விடம் விட்டுப் பெயர்ந்தால் வேறெங்கும் உருவொடு நிற்கமாட்டாது என்று கூறுகிறாள். பின் அவர் கையி லுள்ள மானை வாங்கித்தருமாறு கேட்கிறாள் சிறுமி. அன்னை நகைத்து அம்மானின் முழக்கத்தால் அண்டமெல்லாம் உதிருமே எனக்கூறி வாயையடக்குமாறு பணிக்கின்றாள். சிறுமியோ அடங்காது மற்றொன்று கேட்கிறாள். இப்போது தன் மரப்பாவைக்காக அவரது தோள்மீதுள்ள தொடையை வாங்கித்தருமாறு வேண்டுகிறாள். வேண்டுவதோடு இப் பொழுது நிற்க மனமில்லை அவளுக்கு. ஏதேனும் ஒவ்வோர் ஏதுக்காட்டிக் கேட்டதெல்லாம் மறுக்கப்பட்டதைக் கண்ட அவளுக்கு இதுவும் கிடைக்காதோ என்ற ஐயமே பெரிதாகி விடுகிறது. அதனால், தாயின் முன்றானையைத் தொட்டு அலைக்கலுறுகிறாள் கேட்குங்காலே. தாய் பார்க்கிறாள். சமாதானம் கூறிப் பயனொன்றும் விளையாது என நினைத்துச் சமாதானம் ஏதோ கூறுவாள்போலக் கூறி, முனிவாள்போல் முனிந்து "வாய்தன்னை அடக்கு" என்று அடக்கிச் செல்கிறாள். அம்மகவும் வீட்டினுள்ளே புகுந்து விடுகிறது அழுது கொண்டே. இக்குழவிப்படத்தால், அதன் கண்டதைக் கேட்கும் இயல்பும், கேட்ட ஒன்றைப் பெறுவிட்டாற் றுணியைப் பிடித்திழுத்துத் துன்பந்தரும் இயல்பும் செவ்வனே தெளியப்படுகின்றன.

மகாரின் பண்புகள் இன்னும் சிலவற்றையும் தமிழிலக் கியத்தில் நாம் காணலாம். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமானுடைய மக்களை யானை இடறும் பொருட்டு விடுமுன் கோவூர்கிழார் பாடியதாக ஒரு பாட்டு புறநானூற்றிற் காணப்படுகிறது. அதிலிருந்து அப்புன்றலைச் சிறுவரிருவரும் தாய் தந்தையரிடமிருந்துபிரித்துக்கொணரப் பட்டமையை நினைத்து அழுதுகொண்டிருந்தனரென்றும், அவ்வழுகையைச் சற்றுநேரங் கழிந்தபின் மறந்தனர் என்றும், அங்ஙனம் மறப்பதற்குக் காரணமாயிருந்தது அவரை இடற நிற்கும் களிற்றைக் கண்டமையே என்றும் பின் மன்றினைச் சுற்றிப்பார்த்து வெருவி யழுதனர் என்றும்

அறிகிறோம். இதனால் சிறுமகார் தாய் தந்தை சுற்றம் இல்லாவிடத்தே அழுவரென்பதும், விளையாட்டுப்பொருளைக் கண்டால் சற்று நேரம் அழுகையை அகற்றுவரென்பதும் மீண்டும் அவ்விளையாட்டுப்பொருள் ஒரு பொருளாகாது பழைய அழுகை வருதலுமுண்டென்பதும், பழக்கமில்லாத மன்றிலோ வேறிடத்திலோ சேர்க்கப்பட்டால் அவர்களுக்கு அச்சமுண்டாமென்பதும் அறியப்படுகின்றன.

மகாரின் மற்றொரு பண்பினை "மண்ணியல் சிறுதே"ருள் காண்கிறோம். அயல்வீட்டுக் குழந்தையுடன் அக்குழந்தைக்கு உரிய பொன்வண்டி கொண்டு விளையாடி வந்த உரோகசேனன் என்னுஞ் சிறுவன் பொன் வண்டியை எடுத்துக் கொண்டு அக்குழந்தை தன்வீடு சேர்ந்தபிறகு வருந்தியழுதான் என்றும், தனக்கும் பொன்வண்டியே வேண்டுமெனத் தன் அன்னையின் தோழி இரதசேனிகையிடம் விரும்பி யுரைத்தான் என்றும், அவள் ஒரு மண்வண்டி செய்து கொடுக்கப் பெறாது மறுத்து அழுது கொண்டிருந்தானென்றும் அறிகிறோம். அச்சிறுவனை யெடுத்துக்கொண்டு இரதசேனிகை வசந்தசேனை யெனும் அவனது மாற்றாந் தாயிடம் செல்ல, அவள் உசாவியறிந்து தன் அணி கலன்களைக் கழற்றிக் கொடுத்துப் பொன்னியல் வண்டி பெறுமாறு சொல்ல, அச்சிறுவன் பெற்றுக்கொள்ள மறுத்தான் என்றும் அறிகிறோம். இவ்விடத்தில் அச் சிறுவனின் உயரிய அறிவு ஆசிரியரால் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. வசந்தசேனையை அவன் முன் பார்த்திராதவன் ஆதலால், அவள் தன் அழுகைக்குக் காரணம் வினவியதும் 'அவள் யார்' என இரதசேனிகையைக் கேட்கிறான். அவள், 'உன் தாய்' என்ன, அவன் 'என் தாயாயின் எப்படி அலங்காரமுடையளாயினாள்? என்று கேட்கிறான். அதற் குள்ளாக, வசந்தசேனை தனது அணிகளைக் கழற்றி "இப்பொழுது நான் உன் தாயாயினேன், இவ்வணிகலன் களைப் பெற்றுக்கொள்" என்று கூறுகின்றாள். சிறுவன் 'நீ அழுவதால் நான் பெற மாட்டேன்' என்று கூறுகின்றான். அச்சிறுவனுக்குத் தந்தை சாருதத்தர் முன்னர்ப் பெருஞ்

செல்வராயிருந்து அக்காலை வறிஞராயுள்ளது தெரியும். தந்தை வறியராயிருக்கத் தாய் எப்படி அவ்வளவு அணி கலன்களை அணியக்கூடும் என்ற ஐயம் அவன் அறிவுக்குத் தோன்றுகின்றது. வசந்தசேனையோ இவன் சொற்களால் ஒருபுடை மகிழ்ந்து தன் அணிகளைத் தந்து "தாயாயினேன்" என்கிறாள். அணிகளைக் கழற்றிவிட்டமையால் அலங்கார மற்றவள் ஆனதோர் காரணம் பற்றியே தான் தாயாயினா தாகவும், அவ்வணிகலப் பொருளை அவனுக்குக் கொடுத்து விட்டதாலும் தாயானதாகவும் கருத்துத்தோன்றும்படி அவள் கூற்று உளது. அழுதுகொண்டு கொடுப்பவரிடம் வாங்கக்கூடாது என்ற எண்ணம் அச்சிறுவனிடம் தோன்றியதும் அவன் பண்பொன்றை உணர்த்தும் அன்றோ!

நளன் தன் மக்களோடும் மனைவியோடும் காடு செல்லக் கருதிச் சென்று கொண்டிருக்குங்கால், சிறிது தொலை சென்றதும் அவனுடைய மக்கள் வருந்தி "எம் தாயே, எம் தந்தையே, வழியானதெல்லாம் கடந்தோமா?" என்றாராம். இதனாலும், மகாரின் இயல்பினுளொன்று அறியப்படும். அது, சிறுவர் நடந்து வருங்கால் விரைவிலேயே 'வீடு வந்து விட்டதா, ஊர் வந்து விட்டதா' என்று கேட்பதனோடு ஒக்கும்.

இன்னணம், சேயைப்பற்றிக் கூறிவருங்கால், சேய்க்கும் தாய்க்குமுள்ள தொடர்பு ஒன்று புலப்படுகின்றது. அவனைத் தமிழிலக்கியமெங்கும் பரக்கக்காணலாம். தாய் ஏதோ காரணம் பற்றி அடிக்கும்போது கூட, குழந்தை 'அன்னாய்' என்றோ 'அம்மா' என்றோ அவளையே அழைக்கின்றது. இக்கருத்தை அம்மூவனார் என்ற புலவரொருவர் குறுந் தொகைப்பாட்டு ஒன்றுள் வைத்தமைத்திருக்கின்றார். அப் பாட்டு வருமாறு :

"தாயுடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு
அன்னா யென்னுங் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்

நின் வரைப்பினள் என்றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ இலளே".

இக்கருத்தையே தாங்கி நிற்கிறது குலசேகராழ்வார் பாசுரம் ஒன்றும். "அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவடன் அருள் நினைந்தே அழுங்குழவி யதுவேபோன்று இருந்தேனே" என்பதை நோக்குக.

இனி, அழுங் குழந்தைக்கே யன்றியும் அழாத குழந்தைக்கும் பாலூட்டுவள் தாய் என்னுங் கருத்தினை மணிவாசகரும், அவர் வாசகத்தே ஈடுபட்ட வள்ளலாரும் தத்தம் தோத்திரங்களில் தந்துள்ளார்கள். உறங்கிக்கொண்டிருக்கும் சேய் நா வற்றிப்போமோ என ஐயுற்றுத் தாயானவள் பாலூட்டுகின்ருள் அதனை யெடுத்தணைத்து என்பது கண்கூடு. அதனைத்தான் மணிவாசகர் "பால்நினைந்து ஊட்டுந் தாய்" என்றமையான் ஓரிடத்து ஓதினர். அதனையே விரித்துரைத்தார் வள்ளலார்: "அழுத பிள்ளைக்கே பாலுணவளிப்பள் அன்னை என்பார்கள், அழ வலியில்லாக் கொழுதுநோர் சிறுகுழவிக்குங் கொடுப்பள்; குற்றமன்றது மற்றவள் செயலே," மற்றுமோர் அருமையை அடிகள் கண்டு அளித்துள்ளார்கள். அதாவது, தாய்க்குப் பால் மாறி விட்டாலும் சேய் கேட்காது பல்விட்டுச் சுவைத்துப் பார்க்கும் என்பது. அதனை, அவ்வடிகளின்

........."நின் கருணை யென்மேல்தான் மாறினும் விட்டு நான் மாறிடேன் பெற்ற தாய்க்குப் பான் மாறினும் பிள்ளை பால்மாறுமோ? அதிற் பல்விடுமே" என்ற அடிகளான் அறிக. உணமையிலும், இங்ஙனம் தாய்க்குப்பால் வற்றியிருந்த காலத்தும், கேளாது பல்விட்டுச் சுவைத்துச் சுவைத்துத் துளியளவும் பால்காணுது அழுத குழவியும் உண்டு என்பது புறநானூற்றுச் செய்யுள் ஒன்ருல் வெளியாகிறது. பெருந்தலைச் சாத்தனுர் என்னும் புலவரின் மனைவி பசியால் உழந்து வாடி வதங்கியிருந்தன்ரென்றும், அவள் வறுஙிலைச் சுவைத்தொறும் சுவைத்தொறும்

அவளது மகவு அழுதது என்றும், அஃதழுவதைக் கண்டு அவள் அழுதழுது வருந்தினள் என்றும் அப்பாட்டினால் அறிகின்றோம். இதற்கெதிராக "பாலோடு விம்மிப்பெருத்த நகிலை"ப் பெற்றிருந்த பெண்டிரும் உண்டு என்பதற்குச் சான்று கலித்தொகைச் செய்யுட்களிற் கிடைக்கின்றது. இவற்றையெல்லாம் ஒருபுறம் வைத்து, மற்றொருபுறமாக நாமெல்லாம் மகார் என்றும், நமக்கெல்லாம் தாயாவான் இறைவனென்றும், அவனருளே தாய்ப்பாலென்றும், அருளை நாடி அழ வல்லரல்லா நம்முட் சிலர்க்கும் அவனருள் கிட்டு மென்றும், விம்மி விம்மிக் கொள்ளும் மகாரிலரே என அவன் அருளொடு வருந்தி நிற்பது உண்டென்றும், அவனருள் ஒருகால் மறைந்து கடுமையே தோன்றுவ தாயினும் அவனையே "அம்மையேயப்பா" என அழைத்தல் முறையென்றும் கண்டு கோடல் கற்றறிந்த மாந்தர் கடன்.

"செருநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச் சிறுவரைப் பயந்த செம்மலோர்" இம்மையின்பமும் மறுமையின்பமும் எய்துவர் என்று பல நூல்கள் தமிழ் மொழியிற் கூறக் காண்கின்றோம். மறுமையுலகத்தைப் பொறுத்தது எவ்வாறாயினும், இம்மையில் மகாரால் வரும் பயன் பெரிதாக உளது என்பதில் ஐயமில்லை. அவரால் "இவர்தந்தை என்னோற்றான் கொல்" எனும் இசைமொழி யுண்டாகிறது பற்பல வேளைகளில். அஃதன்றியும், வேறு சில பயன் களும் உள எனக்காட்டுவன போலுள சில இலக்கியப் பகுதிகள். தலைவியின் ஊடலைத் தீர்க்க வல்ல மருந்தினுள் ஒன்று புதல்வனோடு தலைவன் புகுதரல் என்று தொல் காப்பியம், இறையனார் களவியல் முதலிய இலக்கணங்களால் உணர்கிறோம். கண்ணுடை மணியாரொடு நீ வர ஊடற் சிவப்பொழிந்து மலர்ந்தனவே" எனத் தோழி தலைவற்குக் கூறிய கூற்றாக வரும் கோவையாரடிகளைக் காண்க.

தலைவன் ஒருவன் பரத்தையிடஞ் சென்று திரும்பி வருகின்றான். அவன் வந்து நிற்பது தெரியாமல் குழவியுடன் விளையாடுகிறாள் தலைவி. "ஞாயர்பால் நீ கற்ற சொல் சில

சொல்லு, அவை எனக்கு அமிழ்தொக்கும்'' எனக் கூறுகிருள் தன் குழவியை நோக்கி அத்தலைவி. அப்படி அவள் பாராட்டப் பாராட்ட அம்மகவு 'அத்தா அத்தா' என்கிறது. குழந்தை தனது அப்பரைக்கண்டு அங்ஙனம் கூறுவதை வேறு பக்கம் நோக்கியிருக்கும் அவள் அறியாள். அதனல், ''இவனையும் என்னையும் மறந்துவிட்டுப் போயிருக்கும் அவர் இவன் வாயினின்றும் போகின்ருரில்லை. ''அத்தா, அத்தா என்றுதான் இவன் அழைக்கிருன்'' என்று சொல்லிக்கொள்கிருள். சற்றுப் பொறுத்துத் தலைவனை அவள் கண்டு நாணுகிருள். ''நான் செய்யாதவற்றை நீ சொல்லிச் சினவுதலாகாது'' என்கிருன் அவன். ''பரத்தையால் மாசுண்ட நீ என் முன் நில்லாதே, செல்'' எனக் கவல்கிருள் அவள். ''யான் குற்றஞ் செய்யவில்லையே எனக் கூறியும் தேருயாயின் இவனை யான் கொள்வேன்'' எனக் கூறி அவன் தன் மகவினை எடுத்துக்கொண்டு உள்ளே செல்கிருன். கன்று உள்ளவிடத்துச்செல்லும் பசுவைப் போல், அவள் தன் மகவு சென்ற இடத்தைச் சார்ந்து விடுகிருள். இம்மகவு அவள் ஊடலைத் தீர்க்க உதவியவாறு என்னே!

இன்னொரு நாள் தலையணை மந்திரம் நிகழ்கிறது. தலைவி தன் மகவுக்கு அறிவுரை கூறிக்கொண்டிருக்கிருள். தலைவன் பரத்தையின் பிரிந்து சென்று வந்தவன் ஒருபால் கேட்டுக் கொண்டிருக்கிருன். ''என் செம்மால், வனப்பாலும் நடுவு நிலைமையாலும் ஈகையாலும் உன் தந்தையை நீ ஒத்திரு. ஆனல், 'பிரியின் வாழேன்' என்றுரைத்துப் பின் தன்னேடு ஒன்றினரைப் பிரியவிட்டு வதைப்பதில் மாத்திரம் உன் தந்தையைப்போல் இராதே'' என்பது அவள் அறிவுரை. அதனைக் கேட்டுக்கொண்டிருக்கும் மகன் நகைக்கிருன் தன்னெதிரே தந்தையைக் கண்டு. அவளறியாள் அதனை. பின், அறிந்தவுடன் நாணுகிருள். ''தவறு செய்திலாத என்பால் ஏது தவறு? நீ கேளாயாயின் புதல்வனைக்கொடு'' என்கிருன் தலைவன். கொடுக்க மனமில்லாதவளாய் அவள் உள்ளாள். புதல்வனே

சரேலெனத் தந்தை மார்பிற் பாய்ந்து விடுகிறான். "நான் எப்படி வளர்த்தாலும் அன்பிலாத் தந்தைபால் இவனுக்கு உள்ள அன்பைப் பார்த்தாயா" என்று கூறிக்கொண்டே அவளும் அவர்கள் சென்றவிடமே செல்கின்றாள். இக் குழந்தை தந்தைக்கு நல்லுரை புகட்டவும் உதவியா யிருந்தவாறு என்னே! இவற்றையொத்தவை கலித் தொகையில் பலவுள.

இன்னொரு மகவு தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடிக் கொண்டிருக்கிறது. யாரோ ஒருத்தி அப்பக்கஞ் சென்றவள் சுற்றுமுற்றும் பார்த்து அவனை எடுத்தணைத்து உச்சிமோந்து 'என்னுயிரே வருக' என்கிறாள். ஒரு குரல் அவளைத் திடுக்கிடச்செய்கிறது. "ஏன் மயங்குகிறாய்? நீயுந் தாயே இவற்கு" என்பது அது. திரும்பிப் பார்க்கிறாள். வீட்டு வாசலண்டை ஒளிந்திருந்தே பார்த்துவந்த அம் மகவின் தாயினது குரல் அஃது என்பதைக் கண்டு களவொடு பட்ட கள்வனைப்போல நாணி நிற்கிறாள். பின் எப்படியோ சென்றாள். தலைவன் வந்தான் தன் வீட்டிற்கு, தலைவி குற்றஞ் சாட்டினாள். அவன் "உன்னை யொழியப் பிறரை அறியேன்" என்றான். "ஆமாம், இவளும் நல்லவள் தான். உம்மையொழியப் பிறரை அறியாள்" என்றாள் தலைவி. "அவளா? எவள்" என வினவினான் அவன். அவள் "தெரியாது போலவா கேட்கிறீர்? எனச் சினந்து முன் நிகழ்ந்ததை உரைத்தாள். தலைவனோ ஓர் அசட்டுச்சிரிப்புச் சிரித்துத் தலைகுனிந்தான். இன்னணம், தந்தையின் திருட்டு வெளியாவதற்குக் காரணமாயிருப்பவும் மகவினாற் பயனில்லை யென யாரே பகர வல்லார்?

இன்னொரு பெரியவர் ஒருநாள் வெளியே புறப்பட்டார். அவர் குறித்திருந்தது ஒரு பரத்தை வீடு என்பது அவர் மனைவிக்குத் தெரியும். அவர் தேரில் ஏறி உட்கார்ந்தார். உள்ளிருந்து குழந்தை தளர்ந்து தளர்ந்தோடி வந்து "அப்பா நானும்" என்றது. அதற்குள், தேர் சிறிது தொலை சென்றிருக்கும். குழந்தையின் மொழியைக்கேட்ட

வுடன் தந்தையார் தேரை வீட்டுக்குத் திருப்பச் சொன்னார். இறங்கி வந்து, குழந்தையை யெடுத்துப் புல்லி "செல் அப்பா உள்ளே" எனச்சொல்லிப் பார்க்கிறார். மகன் கேட்கிறானில்லை. என் செய்வார் பெரியவர் பாவம்! அவனைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு உள்ளே வருகிறார். உள்ளே உள்ள அம்மைதான் குழவியைக் கிள்ளிவிட்டது, தந்தை வெளியே செல்கிறாரென்று. எங்கே தனது வேலை தெரிந்துவிடுமோ என்று சட்டென ஒரு கோலொடு இப்பொழுது வருகிறாள். "என்னடா, பயலே, இப்படியா போய்த்தடுக்கிறது அவரை? வெளியிலே என்ன வேலையோ! என்ன அவசரமோ!! போகிற அவரைப் போய்த் தடுக்கவும் ஆயிற்று!", என்று அடிக்க வருபவள் போற் கூறுகிறாள். தந்தையார் குழவியாருக்கு வருந் துன்பத்தைக்கண்டு, போவதை ஒத்தி வைக்கிறார். பின்னர்ப் போகவுமில்லை. ஆ! இக்குழந்தை தாய்தந்தைக்குச் செய்த உதவியை நினைத்து உருகாமல் இருக்க முடியவில்லை. குழந்தையாற் பயனென் என்பார் பார்க்கட்டும் இத்தகைய விளையாட்டுகளை! இதற்காகத்தானே, இவ்விரண்டையும் அக நானூற்றுப்பாடல்களிலே வைத்தளித்துள்ளார்கள்! மற்ற தமிழ் நூல்களையும் காணின், இவரனைய மகாரைக் காணாதிருக்க முடியாதென்பது திண்ணம். அவர்தம்மை அன்பர்களே கண்டறிந்து மகிழ்வார்களாக!

# கம்பன் காட்டும் உளப்பாங்கு

தலைசிறந்த கவிஞர்களிற் சிலர் மக்களின் உளப்பாங்கை நன்கு அறிந்திருந்தனர் என்பது சில காவியங்களால் விளங்குகின்றது. கம்பர் தாம் எழுத எடுத்துக்கொண்ட காவியத்தில் வரும் மக்களுடைய மனப்பான்மையினை நன்கு அறிந்தவர் என்பதற்குத் தசரதனை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

தசரதன் வயதான காலத்தில் அவைகூட்டித் தன் மகன் இராமனிடத்தில் அரசினை ஒப்படைத்துவிட்டுக் காட்டிற்குச் செல்ல எண்ணினான். அதனை வசிட்டர் முதலியோர் ஒப்புக் கொண்டனர். இராமனை அழைத்து அவனிடம் தன் கருத்தினைத் தெரிவித்து அவன் இசைவினையும் தசரதன் பெற்றுவிட்டான். பிறநாட்டு அரசினர்க்கும் இராமனுக்குப் பட்டம் சூட்டுவிக்கும் செய்தியைக் குறித்து ஓலை எழுதி அனுப்பிவிட்டான்.

இந்தச் சூழ்நிலையில், கைகேயி பெற்றிருந்த பழைய இரண்டு வரங்களில் ஒன்றினால் தன் மகன் பரதன் அரசு எய்துதல் வேண்டுமென்றும்; மற்றொரு வரத்தினால் இராமன் காடடைதல் வேண்டுமென்றும் கூறியபொழுது தசரதனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தான் கருதிய எண்ணம் குலைந்துவிட்டதே என்று மிகவும் உளைகிறான். கைகேயியோ எவ்வாறாவது தன் மகனுக்கு அரசினைப் பெற்று இராமனை நாட்டினின்றும் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தை வலுவாகக் கொண்டு விட்டாள். அதனால், தசரதன்

கெஞ்சினாலும் வேண்டினாலும் புரண்டாலும் அவள் தான்கொண்ட முடிவினின்று மாறாமல் ஒரே கடைப்பிடியாய்க் கடைசிவரை நிற்கத் துணிந்துவிடுகிறாள். தன் எண்ணம் தடைப்படுத்தப்பட்ட தசரதன் கைகேயியை நோக்கிக் கெஞ்சிக் கேட்டுக்கொள்தலும், அவள் மனம் இரங்காத நிலையிற் பெருஞ் சீற்றமுற்று அவளை எற்றுவேன் பற்றுவேன் எனக் கூறுதலும், அதற்கும் அவள் அசையாமல் சோராமல் நிற்கின்ற நிலைநோக்கிச் செயலற்றுத் தப்பி ஓட நினைத்தலும் ஆகிய செய்திகளை மக்களுடைய உளப்பாங்கிற்கு ஏற்பக் கம்பர் எடுத்துக் காட்டி இருக்கிறார் என்பது கம்பராமாயணத்தில் கைகேயி சூழ்வினைப்படலத்தால் அறியப்படுகிறது.

இவ்வடிப்படையிற் கம்பர் இந்தக் கடைப் பகுதியை எடுத்துத் தீட்டியிருப்பது பாராட்டுதற்குரியதாய் உள்ளது.

கைகேயி கூனியால் உள்ளம் திரிக்கப்பட்டவள். தன் படுக்கையைவிட்டு வெறும் நிலத்தில் படுத்துக் கூந்தலை விரித்துக் கிடந்தபொழுது, அவளை நோக்கி நற்செய்தி சொல்ல வந்த தசரதன், அவள் நிலையைக் கண்டு அஞ்சித் தழுவி எடுக்கிறான். கைகேயியோ அவன் கையை உதறித் தள்ளிவிட்டு மண்ணில் விழுந்து புரண்டு பேசாமல் பெருமூச்சுவிடுகிறாள். தசரதன் 'உன்னை இகழ்ந்தவன் எவராயினும் அவர் பெயரைச் சொல்லு, அவரை மடிவிப்பேன்' என்று கூறுகிறான். கைகேயியோ 'என்னிடத்தில் அருள் உண்டானால் பழைய வரங்களை இன்று பரிந்தளிக்க வேண்டும்' என்கிறாள். தசரதன் அவள் கருத்தினை உணராமல் 'உளம் உவந்தது செய்வேன், ஒன்றும் நோவேன்' என்று கூறி ஆணையிடுகிறான். அவள் கருதுவது இன்னது என்று அறியாமல் தருவேன் என்று அவன் வாக்களித்தல் அடிப்படையில் தப்பு. எனினும், சொன்ன சொல்லினைக் காப்பாற்றுதல் வேண்டும் என்ற கருத்தினால் மனம் இடையே ஊசலாடினாலும், சொன்ன சொற்படி நடக்கக் கடைசியில் முடிவு செய்துவிடுகிறான். இதனைத்தான் கம்பர் அழகுபட எடுத்துக்காட்டியுள்ளார்.

கைகேயி 'நீர் அன்று தருவதாய் ஒப்புக்கொண்ட வரங்கள் இரண்டினையும் ஈக' என்று சொல்லி இரக்கிறாள். இந்நிலையில், கைகேயி தன்னைத் தாழ்த்திக் கொண்டு தசரதனை உயர்த்திவைத்துப் பெருமைப்படப் பேசுகிறாள் என்பது 'ஈக' என்று அவள் கேட்டமையால் விளங்கும். தசரதன் அவளுடைய வஞ்சனையை உணராமல் 'இப்பொழுதே சொல்; ஈவேன்!' என்று கூறுகிறான். கைகேயி இராமன் வனமாள வேண்டுமென்றும் பரதன் நாடாளவேண்டுமென்றும் பகன்று நிற்கிறாள். இவ்வாறு கூறியமையால் கம்பர் அவள் அஞ்சவில்லை என்பதைத் தெளிவாக்கிவிட்டார். பதினான்கு ஆண்டுகள் இராமன் காட்டிற் கழித்தல் வேண்டும் என்ற செய்தியை மறைந்து நின்று சொல்லாமல், கூறிவிட்டு ஓடாமல், சொல்லி ஓரிடத்திலேயே துணிவாக நின்றாள் என்ற செய்தியைப் 'புகன்று நின்றாள்' என்றமையால் கம்பர் புலப்படுத்தியுள்ளார். பின்னரும், அரசனுடைய அல்லல் கண்டும் அவள் அஞ்சவில்லை என்றும், உளம் நையவில்லை என்றும் அவள் நாணவில்லை என்றும், தெரிவிக்கின்றார். மேலும் உளம் தடுமாறாமல் இருந்தாள் என்றும், மரம்போன்ற நெஞ்சினை உடையவள் ஆயினாள் என்றும் கூறுகின்றார். தசரதனோ மகன் காட்டிற்குச் செல்லவேண்டுமென்ற சொல்லைக் கேட்டுத் தாங்க மாட்டாதவனாய் நிலத்தில் விழுகிறான், விம்முகிறான், உயிர்ப் படங்கி ஓய்கிறான், கீழேவிழுந்து புரளுகின்றான். புரளுதற்குக் காரணம் தன் மகன்மாட்டு அவன் வைத்த அன்பும் மனைவி கைகேயினுடைய உளப்புன்மையை நினைத்தலும் ஆம். குழந்தைகள் ஏதாவது ஒரு பொருளைப் பெற்றோர்களிடம் கேட்டுப் பெறாதுபோயினாற் காலை உதைத்துக்கொண்டு புரளுதற்குக் காரணம்வேறு விதத்தில் தம்முடைய கோபத்தைப் பெரியோரிடம் காட்ட முடியாமையாகும். அது போலவே தசரதனும் கைகேயியை ஒன்றும் செய்யமாட்டாதவனாய்க் கீழே கிடந்து புரளுகிறான். ஆயினும், அடுத்த நிமிடத்தில் வெகுளி பிறக்கிறது. அவளை நோக்கி, 'ஏன் இப்படித் திகைத்துப் போயினாய்?' எனக் கேட்கிறான்.

அவளோ 'நான் திகைக்கவில்லை, அவ்வரங்களைத் தந்தால் இன்று கொள்வேன்; தரவில்லையானால் உங்களிடம் வசை நிற்கும்படி செய்துவிட்டு மாள்வேன்' என்று அச்சுறுத்து கிருள். அரசன் சிந்தை திரிந்து திகைத்து அயர்ந்து வீழ்ந்து விடுகிருன். அவனுடைய செமிப்புக் கருவிகள் வேலை செய்ய வில்லை. 'கொடியவளே' எனக் கூறுகிருன். 'அறமானது இவ்வளவு கொடியதாக இருக்கிறதே' என்று ஒரு நிமிடம் கருதி ஊசலாடுகிருன். 'உண்மையென ஒன்று இருப்ப தாலன்ருே அதனை நான் பாதுகாக்கவேண்டியிருக்கிறது' என்று நினைக்கிருன். இங்கே அவனுடைய மனப்போ ராட்டம் காட்டப்படுகிறது. தன் விருப்பத்தினின்று தடைப் படுத்தப்பட்ட தசரதன் தடையாக நின்ற கைகேயியைத் தாக்கக் கருதுகிருன்; கையைப் புடைக்கிருன்; வாயைக் கடிக்கிருன். கைகேயியிடம் கைவரிசையைக் காட்டமுடி யாமற் 'பெண்கள் எல்லோரையும் அழித்துவிட்டுச்சாவேன்' என்கிருன். இவ்வாறு கருதும் தசரதன் அடுத்த நிமிடம் தப்பி ஓடப்பார்க்கிருன். கைகேயியின் கால்மேல் விழுகிருன். 'எல்லோரும் சொல்லத்தக்க புகழினைக் கொள்ளாது பழி யைத் தேடுவது எதற்காக?' எனக் கைகேயியைக் கேட்டுப் பார்க்கிருன். 'கண் வேண்டுமானுலும் தருவேன்' பெண்ணே, வன்மைக் கைகயன்மானே, பெறுவாயேல் மன்னே கொள் 'நீ மற்றது ஒன்றும் மற' எனப் பன்னிப்பன்னி இரக்கிருன். அவளைப் புகழுவதால் அவள் ஒருபடி இறங்கமாட்டாளா என எண்ணுகிருன். கைகேயியோ உளம் தடுமாறவில்லை; 'முன் ஞல் கொடுத்துவிட்டு இப்பொழுது இல்லை என்ருல், வாய் மையைப் பாதுகாக்கிறவர்களுள் தலையாக நீர் எண்ணப் படுவது எவ்வாருகும்?' என்று கூறி நினைவுபடுத்துகிருள். வாய்மையைப் பேண வேண்டும் என்ற உணர்ச்சி வந்த வுடன் தசரதன் ஆவி புழுங்கி அயர்கிருன். இருந்தாலும், மூதல்மகன்மாட்டு வைத்த அன்பினுல் கைகேயிடம் கோபத் தைக் காட்டிவிடுகிருன். மறுகணம் அவளைப் பார்த்து இரக்கிருன். 'ஒரு வரத்தால் ஆட்சியைத்தந்தேன், மற்ருெரு வரத்தை மாத்திரம் விட்டுவிடு' எனக்கெஞ்சுகிருன். அவள்

'தந்த வரத்தைத் தவிர்க என்றல் நல் அறமாமோ?' என நினைவுபடுத்துகிருள். வாய்மை என்ற சொல் கேட்டவுடன் மீண்டும் மண்ணிடை விழுகிருன். அடுத்த நொடியில் அவளை நோக்கி வெகுளுகிருன். 'எனக்கு மாத்திரம் அறத்தை நினைவுபடுத்துகிருயே; உன்னைப் போல் தான் மகளிர் எல்லாம் முன்னர்க் கணவரைக் கொன்றுகொண்டு இருந்தார்களோ? என்னைக் கொல்கின்ருயே; கொடியவளே;' என்று திட்டுகிருன். 'ஒரு பெண்ணுல் எனக்கு முடிவு வந்தது என்று உலகத்தில் சொல்லப்படுமே; அது பொருந்துமா?' எனக் கேட்டுப்பார்க்கிருன். இவ்வாறெல்லாம் முன்னுக்குப்பின் பொருந்தாத சொற்கள் பல சொல்லி இன்னலுறுகிருன். மீண்டும் புரளுகிருன். அவன் கொண்ட கோபத்தால் சுரப்பிகள் வேலைசெய்யவில்லை.

கைகேயி அவன் புரளுகிறபொழுது, அவனை நோக்கி 'முன்ஞல் தந்த இரண்டு வர்த்தையும் பெற்ருல் சரி; இல்லையாஞல் உயிரைப் போக்கிக் கொள்வேன்' என்று அச்சுறுத்துகிருள். உண்மையைப் பாதுகாக்கத் தன் உயிரை மாய்த்துக் கொண்ட சிபியினுடைய செய்தியை நினைவுபடுத்துகிருள்.

'வரத்தைக் கொடுத்துவிட்டுப் பிறகு வருத்தப்படுவதில் என்ன பயன்?' என்று கேட்கிருள். இந்நிலையில் 'ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்' என்று கடைசியில் தசரதன் கூறிவிடுகிருன். இராமன் காட்டிற்குப் போவதில் தசரதனுக்கு விருப்பம் இல்லை. ஆயினும், உண்மையைப் பாதுகாக்க வேண்டி, சொன்ன சொல்லைப் பாதுகாக்க வேண்டி, விருப்பம் இல்லாததொன்றைச் செய்துவிட மனத்தைத் திடப்படுத்திக் கொள்கிருன். இதுதான் தசரதனுடைய மனநிலையை அறிந்து கம்பர் தீட்டியுள்ள ஓவியம்.

இந்தக் காட்சியில் தசரதன் தன் மகன் இராமன் மேல் வைத்த அன்பு ஒருபுறம் தெளிவாகிறது. மறுபுறம் மனைவிக்குக் கொடுத்த சொல்லைக் காக்கவேண்டுமே என்ற எண்ணம் உடையவனுய் இருக்கிருன் என்பது

புலனுகிறது. சில நிமிடங்களில் மகன்மாட்டு வைத்த அன்பு பெருகித் தோன்றுகிறது; சில நிமிடங்களில் உண்மையின் கண் ஆர்வம் பெருகித் தோன்றுகிறது. இவ்விரண்டு நிலை களுக்கு இடையே அவன் மனம் ஊசலாடுகிறது என் பதைத் திறம்படக் கம்பர் எடுத்துக்காட்டிப் போகின்ற போக்கு படித்து இன்புறத்தக்கது. பொதுவாக ஒருவர் பெறக் கருதிய பொருளைப் பெறமுடியாது தடைப்படுத்தப் பட்டால் எவ்விளைவுகள் உண்டாகும் என்று உள நூல்களிற் கருதப்படுகின்றனவோ அவ்விளைவுகள் தசரதனைப் பொருத்தும் விளைந்தன என்பதைக் காணு கின்றபொழுது கம்பர் மக்கள் மனப்பாங்கை அறியும் பெற்றியர் என்பது விளங்கும். எண்ணக் குலைவு ஏற்படுகிற பொழுது, அவ்வெண்ணத்தைக் குலைப்பவர்மீது கோபம் வருதல் இயல்பு; அன்றி, கோபிக்கக் கூடிய தன்மை இல்லை யென்ருர், எதிரியைத்தாக்கக்கூடியதன்மை இல்லையென்ருர் தப்பிப் பிழைக்கக்கூடிய வழியைத் தேடுதல் இயல்பு. தசரதன் சில நேரங்களிற் கைகேயியைத் தாக்க எண்ணு கிருன். சில நேரங்களில் அவளிடத்திலிருந்து தப்பிப் பிழைக்க எண்ணிப் புகழ்ந்து பார்க்கிருன். முடிவில் அவன் மனம் விரும்பாத ஒன்றைச் செய்யத் துணிந்து அதனைச் செய்துவிடுகிருன். இதுதான் கைகேயி சூழ்வினைப் படலத்தில் எடுத்துக் காட்டப்படும் நிகழ்ச்சி. இந்நிகழ்ச் சியை உளநூல்வழி ஆராய்ந்து பார்த்தால் இன்பம் விளைகிறது. இக் கண்கொண்டு கைகேயி சூழ்வினைப் படலத்தை மறுமுறை படித்தால் புது நயங்கள் தோன்று மென்று கருதுகின்றேன்.

# இராமலிங்க அடிகளும் ஒருமைப்பாடும்

1823ஆம் ஆண்டில் தோன்றி 1874 வரை தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த இராமலிங்க அடிகள் சாதி சமய மத வேறுபாடுகளின்றி மக்கள் ஒற்றுமையுடையவராய் வாழ வேண்டுமென்று விரும்பியவர். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய குறிக்கோளாக ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை அடிகளாரால் கொள்ளப்பட்டிருந்தது. சுத்த சன்மார்க்கத்தின் பெருந்தடைகளாகிய சமயங்கள் மதங்கள் வருணங்கள் ஆசிரமங்கள் ஆகியவை மனத்தில் பற்றுதவண்ணம் அருள் புரிதல் வேண்டுமென்று அவர் இறைவனிடத்தில் அடிக்கடி விண்ணப்பித்தது உண்டு. உலகிலுள்ள உயிர்களுக்கு விளையக் கூடிய இடையூறுகளெல்லாம் விலக வேண்டுமென்றும், அவற்றை விலக்குவதற்கு வேண்டிய ஆற்றலை அளிக்க வேண்டுமென்றும் அவர் இறைவன்பால் வேண்டியவர்.

"யாரே யென்னினும் இரங்குகின் றூர்க்குச்
சீரே யளிக்குஞ் சிதம்பர சிவமே"

என்று பாடிய ஆன்மநேய உணர்ச்சியுடையவர்.

"சாதிமதஞ் சமயமெனுஞ் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச் சேறுடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்"

எனத் தம் பொருந்தாமையைக் கூறி முறையிட்டுக் கொள்பவர்.

"ஆண்மக்கள் பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்தி லும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேச மார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் — என்னும் பேதம் நீங்கி எல்ல வருந் தம்மவர் களாய்ச் சமத்திற் கொள்ளுதல்" ஜீவ ஒழுக்கம் என்று விளக்கந்தந்தவர்.

சுத்த சன்மார்க்க வேண்டுகோளாக அவர் பாடிய பாடல்களில்

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்!"

என்று கூறியுள்ளார் என்பது அவர் அடியவர்கள் அனை வரும் அறிந்த செய்தி. மன்னுயிரெல்லாம் தன்னுயிர்போல் எண்ணும் இவ்விந்தைப் பெரியார் கொலையும் புலையும் தவிர்த்தல் வேண்டுமென்றும், நையாதவாறு உயிர்களைக் காத்தல வேண்டுமென்றும் விரும்பினர் என்பது நாம் அறிந்ததே அன்றோ!

எல்லாச் சமயங்களையும் ஒரு நிகரனவாக எண்ண வேண்டுமென்ற அவருடைய மேன்மைக் கருத்து அவர் அரு ளிய அருட்பாக்களிலெல்லாம் ஊற்றெடுத்து ஓடுகிறது.

"எச்சார்பு மாகியுயர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்த்தே
எவ்வுலகுஞ் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்"

என்று அவர் கூறியவிடத்தில் எல்லோருக்கும் இன்பம் விளை யுமாறு செய்தல் வேண்டு மென்பதும், சாதி சமய விகற் பங்களை எவ்வுலகத்தவர்களுக்கும் பொதுமை உண்டாக்க வேண்டுமென்பதும் அவரால் விரும்பப்பட்டன என்பது

தெளிவு. அக்கருத்தினை நோக்கினல், பகைவராயினும் அவர்களுக்குக்கூட இன்பம் தர வேண்டுமென்று விரும்பி யவர் அவர் என்பது பெறப்படும். ஆயினும், தம்மை அடுத்த வர்களுக்கு மிக்க இன்பம் விளையுமாறு செய்தல் வேண்டு மென அவர் விரும்பினர் என்பதும் உறுதி. உயிர்கள் அனைத்திற்கும் இதம்புரிதல்வேண்டுமென அவர் பாடினர் எனினும், 'எனை அடுதார் தமக்கெல்லாம் இன்பு தரல்வேண் டும்' எனப் பாடினமையின், அவரது உட்கருத்து அறியப் படும். அவ்வாறே, எவ்வுயிரும் இன்பம் அடைதல் வேண்டு' மென்று இன்னோர் இடத்திற் கூறிய அவ்வள்ளலார், "எனை அடுத்தார் சுகம் வாய்ந்திடுதல் வேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

இவ்வகையில் திருவருட்பிரகாச வள்ளலார் கவிஞர் இரவீந்தர நாத தாகூரோடு ஒப்புநோக்கத்தக்கவர். 1891 முதல் 1641 வரை வங்காளத்தில் வாழ்ந்த தாகூர் இராம லிங்க அடிகளோடு நேர்த் தொடர்பு பெறுவதற்கு முன்னே லேயே மறைந்துவிட்டார் என்றாலும், அடிகளாருடைய கருத்தினை யொத்த சில கருத்துக்கள் தாகூருடையனவாக உள. உலகில் எச்சமயத்தவரும் போற்றும் கடவுள் முடிவில் ஒருவரே என்பதை இவ்விரு பெரியாரும் வற் புறுத்தியுள்ளனர். உலகத்தில் தோன்றிய பல்வேறு சமயப் பெருங்குரவர்களுக்குக் கடவுள் அருள் கூடியிருக்கிறது என் பதை இருவரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். கடவுள் ஒரு வரே எனினும், உபநிடதம் போன்ற இந்தியா தேசத்தின் ஆன்மிக நூல்களினல் கடவுளை அடைதற்கு வழி சொல்லப் பட்டிருக்கிறவாறு மேலைநாட்டு ஆன்மிக நூல்களிற் சொல் லப்படவில்லை எனக் கவிஞர் இரவீந்தரநாத தாகூர் கூறியும் எழுதியும் வந்துள்ளார். அவ்வாறே, இராமலிங்க அடிக ளும் எல்லாச் சாதியினரிடத்திலும், எல்லாச் சமயத்தினரி டத்திலும், எல்லா மதத்தினரிடத்திலும் பொதுமை நோக்கு டையவராக இருந்தாரேயாயினும், தமிழ் மொழி வழியாகத் தான் சாகாக் கல்வி சிறப்பாக அறியப்படும் என்றும், ஏனைய மொழிகளைக் காட்டிலும் தமிழ் மொழிக்குச் சிறப்பு

உண்டு என்றும் கருதினர் என்பது அவருடைய சத்தியப் பெரு விண்ணப்பத்தினல் தெளிவாகிறது.

"இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரமாசத்தையும், பெரு மறைப்பையும், போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது பயிலுவதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழியொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்"

என்று அவர் கூறியதிலிருந்து தமிழ் மொழியினிடத்தில் அவருக்குள்ள மதிப்பு அறியப்படும். தமிழைப் பற்றி ஏனைய இடங்களில் அவர் கூறியிருப்பன —

"கடவுள் அருளாணையால் கற்பிக்கப் பட்டதும்—எப்பாஷைகளுக்கும் பிதுர்பாஷை என்று ஆன்றோர்களால் கொண்டாடப் பட்டதும், —இனிமை யென்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான, தமிழ் என்னும் இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழி"

"ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம், என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல் - பெரும்பாலும் - கற்பதற்கு எவ்வளவு சுருக்கமாயும் - ஒலியிலே சாயும்—கட்டென்னுஞ் சந்தி அதிசுலபமாயும், - எழுதவும் கனி செய்யவும் மிக நேர்மையாயும், - அக்ஷர ஆரவாரம், - சொல்லாடம்பரம், போதுபோக்கு, பெருமறைப்பு முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தசுகளையும் தன் பாஷையுள்ளடக்கி இருப்பதும் ஆகிய தமிழ்"

இக் கருத்தினுடைய வள்ளலார் ஒருமைப்பாட்டுணர்ச்சியை நூலிற் பல இடங்களில் வற்புறுத்தினு ராயினும் அவ்வொருமைப்பாடு அடித்து உதைத்து வன்முறையினால் மேற்கொள்ளும்படி செய்யப்படுதலாகாது எனக் கருதியவர் அவர். அவர் அருளிய உபதேசப் பகுதியில் இந்த ஒருமை அன்பினால், தயவு என்னுங் கருணையினால் உண்டாகும்படி செய்ய வேண்டியதெனத் தெளிவாக்கியிருக்கிறார். தம்மிடத்தில் ஒருவன் வசப்படாமல் முரட்டனாய் இருந்தால் அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன் என்றும், மிரட்டிச் சொல்லுவேன் என்றும், தெண்டன் விழுந்து சொல்லுவேன் என்றும், அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன் என்றும், அல்லது ஆண்டவனை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன் என்றும் கூறியுள்ளார் என்பது நினைவிற்குக் கொண்டுவரத்தகக்கது. இந்தக் கருத்தினோடு கவிஞர் இரவீந்தர நாத தாகூர் கருத்து ஒத்திருக்கிறது. அவரும் ஒருமைப்பாடு வேறு என்றும், ஒருருவாக்குதல் வேறு என்றும் அடிக்கடி எடுத்து இயம்பியுள்ளார். ஒன்றை யொன்று விழுங்கிவிடாமல் ஒன்றுபோல் மற்றொன்று உடன் இருக்கும்படி, உடன் வாழும்படி செய்வதுதான் ஒருமைப்பாடு என்று நன்கு விளக்கியுள்ளார். அடிமைப் படுத்தி ஒற்றுமை ஏற்படுத்தலும் கட்டாயப்படுத்தி ஒற்றுமை ஏற்படுத்துதலும் போலியொற்றுமை என்றும், ஒட்டு ஒற்றுமை என்றும், உண்மை ஒற்றுமையன்று என்றும் அவர் எடுத்துக் கூறியுள்ளார். கவிஞர் இரவீந்தரர் கூறியுள்ள ஒரு கதை வேடிக்கையானது. ஆட்டுக் குட்டி ஒன்று தற்காப்புக் கொள்ளாமல் கடவுளிடத்தில் முறையிட்டதாகவும், கடவுள் அவ்வாட்டுக் குட்டியைப் பார்த்து, "நீ செயலின்றி இருப்பதைப் பார்த்தால் உன்னை நான்கூட விழுங்கக் கூடாதா? என்றுதான் தோன்றுகிறது எனக் கூறினார்" என்றும் அக்கதை சொல்லுகிறது. எனவே ஒருமைப்பாடு நேய உணர்ச்சியினால் ஆக்கத் தக்கது என்பதும், பகைச் செயல்களினால் ஆக்கவொண்ணாதது என்பதும் அறியப்படும். தாகூர் பன்மை

யில் ஒருமைகாண விழைந்தார்; பன்மையை ஒருமையாக்கி விட நினைக்கவில்லை. அவ்வாறே, இராமலிங்க அடிகளாரும் உலகத்தி லுள்ள ஒற்றுமை வேற்றுமைகளிடையே எவ்வாறு அன்பினால் ஒருமைப்பாட்டினை விளக்க முடியும் என்று ஆய்ந்தாய்ந்து முயன்றவர் என்பது அறியத்தக்கது.

"ஒற்றுமை வேற்றுமை யுரிமைக ளனைத்தும்
அற்றென வகுத்த அருட்பெருஞ் ஜோதி"

என்று அருட்பெருஞ்ஜோதி அகவலில் வள்ளலார் அருளி யதை நினைவுகூர்வோமாக!

# நிலைகுலையா மலை

தன்னேர் இல்லாத தனிப்பெருந் தலைவராய் விளங்கி மக்கட்குப் பெரிய அறிவுப் பணியாற்றிய மதிப்பிற்குரிய செம்மல் மறைமலை அடிகளார் தம் வாழ்நாளில் தமிழர்களுக்குச் சிறந்த நல்லறிவு கொளுத்தி வாழ்ந்தவர் என்பது தமிழ்நாடு அறிந்த உண்மை. அவர் 1950 செப்டம்பர் 15 ஆம் தேதி மறைந்தார். 15-7-1876இல் தோன்றிய அவர் ஏறத்தாழ 74 ஆண்டு உயிருடன் இருந்த காலத்தில் தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும் பண்டைத் தமிழ்மக்களின் உயர்வினையும் எடுத்துக்காட்டி, இக்காலத் தமிழ்மக்கள் சீர்திருந்த வேண்டிய முறைகளை விளக்கி வந்தார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சில ஆண்டுகள் அவர் துலங்கியபொழுது (நாவலர்) சோமசுந்தரபாரதியார், (டாக்டர்) பி. சுப்பராயன், டி. கே. சிதம்பரநாத முதலியார் போன்றவர்கள் அடிகளாரின் சிறந்த மாணவர்களாய் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. "பரிதிமாற் கலைஞர்" என்று தம்முடைய பெயரைத் தனித் தமிழ்ப் பெயராக மாற்றிக்கொண்டு தமிழ்மொழியிடத்து மட்டிலாப் பற்றுக்கொண்டு வாழ்ந்த திரு வி. கோ. சூரிய நாராயண சாத்திரியாரோடு கிறித்தவக் கல்லூரியில் உடனிருந்து தமிழ்ப்பணியாற்றும் வாய்ப்புப்பெற்றார் மறைமலை அடிகள்.

"கீழ்நாட்டு மக்கள் வசியம்" (The Oriental Mystick Myna) என்ற தலைப்பிலும் "அறிவுக் கடல்" (The Ocean

of Wisdom) என்ற தலைப்பிலும் இரண்டு ஆங்கில இதழ்களை வெளியிடும் பொறுப்பேற்று, அவ்விதழ்கள் வாயிலாகத் தமிழ் அறியா மக்களுக்குத் தமிழ் மொழியின் மேன்மைபற்றியும் தமிழ் மக்களின் உயர்வுபற்றியும் எடுத்துக் கூறிவந்த பெருமை மறைமலை அடிகளைச் சாரும்.

மறைமலை அடிகள் வேதாசலம் என்ற இயற்பெயர் உடையவர். அவர் தம் பெயரைத் தனித்தமிழ்ப் பெயர் ஆக்குதற்காக மறைமலை அடிகள் என மாற்றி வைத்துக் கொண்டார் என்பது பலர் அறிந்த செய்தி. அவ்வாறு மக்கள் பலரும் தத்தம் பெயரை மாற்றி வைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதை எதிர்பார்த்தவர்.

தமிழ்நாட்டில் பிறமொழிக் கலப்பினால் தமிழர்தம் பண்டைய பெருமிதம் குலைந்து விட்டதென்றும், அதனை மீட்டும் நிலையில் நிறுத்துதற்குத் தக்க வழிகள் காணவேண்டுமென்றும் அவர் விரும்பினார். தமிழ்மக்கள் பிற மொழிகளுடைய ஆளுகைக்கு அடிமையாகித் தன்மானம் அற்றவர்களாகி விட்டது குறித்துக் கலங்கினார். பழைய தமிழகத்தில், அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில், எல்லாம் தமிழ், எங்கும் தமிழ் என்ற நிலை இருந்து வந்ததால் தமிழ்நாடு மாண்புற்று இருந்ததென்று அவருடைய நூல்களிலும் சொற்பொழிவுகளிலும் எடுத்துக் காட்டினார். ஆட்சிமொழி தமிழாக அக்காலத்தில் இருந்ததால் பெருமை குன்றாத நிலையில் தமிழ்நாடு செழித்திருந்ததென்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தார். அரசியல் வினைமொழி தமிழாகவும், அரசர்மொழி தமிழாகவும், மக்கள்மொழி தமிழாகவும் இருந்தமையால் நாடு பீடுற்றிருந்த நிலையைப் புலப்படுத்தி வந்தார். ஏட்டிலும் பேச்சிலும், நாட்டிலும் வீட்டிலும், இசையிலும் கூத்திலும், மணவினையிலும் பிணவினையிலும் முழுதும் தமிழாக இருந்த காரணத்தால் நிலையாக இருந்த தமிழர்தம் சிறப்பினை எடுத்து எடுத்துக்காட்டி வந்தார். இடைக்காலத் தமிழகத்தில் புகுந்த பிற நாகரிகக் கலப்பினால், புகுத்தப்பட்ட

பிறமொழிக் கலப்பினால் தமிழ்நாடும் தமிழ்மொழியும் எவ்வளவு சீர்குலைந்தன என்பதைச் செப்பிவந்தார். பழங் காலத் தமிழகத்தின் மாண்பினை மக்கள் அறிந்துகொள்வ தாலும் இக்காலத்தில் அவருக்கு வாய்த்துள்ள அவல நிலையினை ஓர்ந்து கொள்வதாலும், வருங்காலத்தில் தமிழ் மக்கள் பண்டைய பீடுபெற்று எவ்வாறு உய்தல்கூடும் என்பதை எடுத்து விளக்குவனவாக அவருடைய நூல்களும் பேச்சுக்களும் அமைந்திருந்தன. இக் காரணங்களால் அவரை "நிலை குலையா மலை" எனத் தமிழறிஞர்கள் போற்றிவந்தனர்.

பிற மொழிகளைப் படிக்கக்கூடாது என்பது மறைமலை அடிகளாரின் நோக்கமன்று. தமிழ்மொழி அளவே நில்லா மல், பயனுள்ள பிறமொழிகளைக் கற்றுக்கொள்ளுதல் நல்ல தென்று கருதியவர் அவர். ஆங்கிலத்தையும் வடமொழியை யும் நன்கு கற்றுத்தேர்ந்து நூல் பல இயற்றும் தகுதி வாய்ந்தவராய் அவர் திகழ்ந்தார் என்பது யாவரும் அறிந்த செய்தி. ஆனால், பிற மொழிகளுக்கு அடிமையாகி விடக் கூடாது என்பது அவரது உயரிய குறிக்கோள். ஒப்பிட்டுப் பார்த்து உவத்தற்கும், பிறமொழிச் செல்வங்களைத் தமிழில் கொணர்தற்கும் உரிய அளவில்தான் பிறமொழி அறிவு அவரால் வேண்டப்பட்டது. பிறமொழி கற்கத் தொடங் கிய உடனேயே சிலர் அம்மொழிக்கு அடிமையாகி விடுகின் றனர் என்பது இன்றும் கண்கூடு. பிற மொழிகளில் நல்ல புலமை வாய்ந்த மறைமலை அடிகளார் அம்மொழிகளுக்கு ஆளாகி விடாமல், அவற்றை ஆளும் தகுதி உடையவராய் இருந்தார் என்பதுதான் அவருக்குரிய சிறப்பு. வடமொழி யில் காளிதாசரால் எழுதப்பட்ட சாகுந்தல நாடகத்தை அவர் அருமையாகத் தமிழில் மொழிபெயர்த்து எழுதியுள் ளார். அன்றியும், சாகுந்தல நாடகம் பற்றிய ஆராய்ச்சியை வடமொழியாளரும் வியக்கும் வண்ணம் தமிழில் தந்துள்ள பெருமைக்குரியவராக அவர் உள்ளார். இந்நூல்களும், மறைமலை அடிகளாருடைய பிற நூல்களும் சென்னைச்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் அழகாக வெளியிடப்பட்டுள்ளன. வடமொழி நாடகத்தை மொழி பெயர்த்து இருப்பினும், தமிழ்க்காப்பிய நலனை ஒப்பிட்டுப் பாராட்டும் பெற்றியராக அவர் இருந்தார் என்பதை நாம் நினைவு கூர்தல் வேண்டும். வடமொழியாளர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர்களுடைய கருத்துக்களை உணர்ந்து கொண்டு அவற்றின் மிக்க சிறப்பு வாய்ந்தனவாக எவ்வாறு தமிழர்தம் கருத்துக்கள் அமைந்து இருந்தன என்பதை எடுத்துக்காட்டித் தமிழ்மக்களை வீறுபெறச் செய்தவர் அம்மறைத் திருவாளர்.

தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுதலால் விளையும் தீமைகளை நன்கு கண்டவர் மறைமலை அடிகளார். 100-க்கு 50 அல்லது 60 விழுக்காடு வடமொழிச் சொற்களைத் தமிழில் சிலர் கலந்து எழுதி விட்டமையால், அவற்றைப் படித்த பிறமொழியாளர்கள் தமிழின் தனித்தன்மையை உணராராய், தமிழ் தனித்து இயங்க மாட்டாத மொழி என்று கருதலாயினர். தலை என்றும், கண் என்றும், காது என்றும், பல் என்றும் நல்ல தமிழ்ச்சொற்கள் இருப்பவும், சிரஸ், நேத்திரம், கர்ணம், தந்தம் என்னும் வடமொழிச் சொற்களைத் தமிழர்கள் தம் பேச்சிலும் எழுத்திலும் வழங்குவதால் தம் இனிய தமிழ்மொழிக்குச் செய்யும் தீமையை உணர்ந்தார் அல்லரே என வருந்தினர். அருந்தமிழ்த்தாயின் அழகான உடலத்திற் காணப்படும் அம்மைத்தழும்புகள்போல் அல்லவோ இவை உள எனக் கவன்றுர். தமிழ் பிறமொழிக் கூட்டுறவின்றித் தனித்து இயங்க முடியும் என்பதையும், தமிழ் வடமொழிக் குடும்பத்தின் வேறுன மொழிக்குடும்பத்துத் தாய் என்பதையும், டாக்டர் கார்டுவேலர் போன்ற பேரறிஞர்கள் ஐயமற ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள் வெளிப்படுத்தி இருந்தும், தமிழ் பிறமொழிச் சார்பின்றி வாழமுடியாது என்றும், தமிழ்தானும் ஏனைய இந்திய மொழிகளைப்போல் சமக்கிருதத் தாயின் வழி வந்த மொழி என்றும் வீணுகப் பலர் இக்காலத்திலும் மொழிந்து வருகி

ஞர்கள். அவர்களுக்கு அறைகூவுவது போல், பிறமொழிக் கலப்பின்றி எழுதித் தமிழ் தனித்தியங்கி ஒளியோடு திகழும் என்பதை நிறுவிய மாப்பெருமை மறைமலை அடிகளாருக் குரியது. அதற்காக அப்பெரியாருக்குத் தமிழநாட்டவர் என்றென்றும் கடமையுடையர்.

தமிழமொழியின் வரலாற்றினை மறித்து நோக்கினல் 19-வது நூற்ருண்டில் இருந்ததைவிட 15-16—வது நூற்ருண்டுகளில் எவ்வாறு பிறமொழிக் கலப்பு குறைவு என்பதையும், 15–16 வது நூற்ருண்டில் இருந்ததைக் காட்டிலும் 8-9—வது நூற்ருண்டுகளில் எவ்வளவு குறை வாகப் பிறமொழிச் சொற்கள் கலக்கப்பட்டன என்பதையும் 2 அல்லது 3 ஆம் நூற்ருண்டுகளில் அவ்வளவைக் காட்டி லும் எவ்வளவு குறைந்த வகையில் பிறமொழிக் கலப்பு இருந்தது என்பதையும்: கி. மு. 4–5ஆம் நூற்ருண்டுகளில் பிறமொழிக் கலப்பு 100-க்கு 2 அல்லது 3 விழுக்காட்டிற்கு மேல் இருந்ததில்லை என்பதையும் அறிதல் இயலும். அவ்வாறே வரலாற்றுக் காலத்தில் பின்தள்ளிப் போகப் போக ஒரு விழுக்காடுகூட பிறமொழிச் சொற்கள் கலவாமல் இருந்தகாலம் தமிழகத்தில் உண்டென்பதை நேர்மை அறி வுள்ள எவனும் ஒத்துக் கொள்வான் என்று திருமணம் செல்வகேசவராய முதலியார் கூறிய ஆய்வுரையை இன்று நாம் நினைவுக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

தொல்காப்பியத்தில் வடமொழிச் சொற்கள் வழங்கு தற்கு இடம் தரப்பட்டு இருக்கிறது ஆதலால், நாமும் நிறையக் கலந்து விடலாம் என்று சிலர் இக்காலத்தில் பேசுகிற பேச்சு பொருந்தாது. தொல்காப்பியர் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு கூறுபாடு களை ஒப்புக்கொண்டமையினல் அவர் காலத்தில் வட மொழிச் சொற்கள் ஓரளவு தமிழில் வந்து வழங்குவதுண்டு என்பது தெரியவரும். எனினும், வட சொல்லுக்கு 4-வது அல்லது கடைசி இடந்தான் கொடுக்கப்பட்டிருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இயற்

சொல், திரிசொல் எனக் கூறுபவை முழுதும் தமிழ் என்றும் அச்சொற்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டது என்றும் நாம் அறிந்துகொள்ள வேண்டாமா? அறிந்து கொள்வோமானால், கணக்கின்றி, தேவையின்றி வடமொழிச் சொற்களை நம் எழுத்துக்களில் கலக்க மாட்டோம். பிற மொழிக் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற இடங்களில் அம் மொழிச் சொற்களைக் கடன் வாங்கி ஆளுதலால் பெருங் குறை ஏற்படாது. ஆயினும், தொட்டதற்கு எல்லாம் பிற மொழிச் சொற்களைக் கட்டாயமின்றிக் கடன் வாங்கிப் பெருக்குவது பொருந்தாது. பிறமொழிச் சொற்களை அடுக் கடுக்காக அப்படியே கடன் வாங்கி விட்டவர் பெரும்பாலும் சோம்பலினால்தான் அவ்வாறு செய்துள்ளனர். இந்நிலை மாற வேண்டுமென்று கருதியவர் மறைமலை அடிகளார். அன்றியும், பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும் பொழுது தமிழ் மொழியின் ஒலி இயலுக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டுமென்றும் மன்றாடினார். வடமொழிச் சொற்களை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால், வடமொழி எழுத்துக்களை நீக்கித் தமிழ் எழுத் துக்களால் எழுதிக்கொள்ள வேண்டுமென்று தொல்காப் பியர் செய்த வரையறையை எடுத்துக்காட்டி, அந்நெறியில் ஒழுக வேண்டுமென்று பணித்தார் இப்பெருந்தகையார்.

1937-லும், 1948-லும் இந்தி கட்டாயமாகப் புகுத்தப் படும் நிலையிலிருந்த பொழுது, அவ்வாறு செய்தலாகாது எனத் துணிவுடன் எடுத்து அறைந்தார் மறைமலை அடி களார். தமிழ்மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்த மாபெரும் கடற்கரைக் கூட்டத்திலே தலைமை தாங்கி அரசாங்கத்துக்கு அறைகூவியவர் மறைமலை அடிகளார். தம்முடைய அரும் புதல்வர் மறை. திருநாவுக்கரசரையும், மருமகளாரையும் இதுகாரணமாகச் சிறைசெல்ல வாழ்த்தி வழியனுப்பிய வீரத்தந்தையார் மறைமலை அடிகளார்.

தமிழர்கள் தத்தம் வீட்டில் நடைபெறும் வினைகள் எல்லாவற்றிலும் தமிழ்மொழியையே கைக்கொள்ள

வேண்டுமென்றும், தமிழ்க்கலையையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பாதுகாக்க வேண்டுமென்றும் தமிழ் நாட்டுக்கோயில்களில் தமிழ்மொழி வாயிலாக வழிபாடு இயற்றப்பட வேண்டுமென்றும் அடிக்கடி வற்புறுத்தினர் அப்பெரியவர். அவர் இயற்றிய "தமிழர் மதம்" போன்ற நூல்களினால் அவரது கருத்து தெளிவாகப் புலப்படும். தமிழர்கள் இறைவழிபாட்டு உணர்ச்சி உடையவர்களாய் இருக்க வேண்டுமென்பதையும், இக்காலத்தில் கோயில்கள் ஒழுங்குற நடத்தப்படவில்லை என்ற காரணத்தால் கடவுள் வழிபாட்டினையே விட்டுவிடக்கூடாது என்பதையும் அவர் அஞ்சாது எடுத்துப் பெருமேடைகளிற் கூறிவந்தார். அவருடைய நடைக்கு எடுத்துக்காட்டுக்களாகச் சில பகுதிகள் அடியில் தரப்படுகின்றன :-

## 1. பிறமொழிக் கலப்பு

"தமிழ் முன்னோர் தமது தமிழ்மொழியைப் பிறமொழிக் கலப்பின்றித் தூயதாய் எல்லா வளனும் நிரம்ப வளர்த்து வழங்கி வந்தவாறுபோல, இஞ்ஞான்றைத் தமிழருந் தமிழ் மொழியைத் தூயதாய் வளனுற வளர்த்து வருதல் வேண்டும். ஒவ்வொரு மக்கட் குழுவினருந் தமது மொழியைத் தம்முயிரினுஞ் சிறந்ததாக வைத்துப் பேணி வருகையில், இஞ்ஞான்றைத் தமிழர்மட்டுந் தமிழ்மொழி யுணர்ச்சி சிறிதுமில்லாக் கயவர்களாய் இருக்கின்றனர். அவருள் அத்தி பூத்தாற் போற் றமிழ் கற்பார் சிலருந் தமது மொழிப்பெருமையை யுணராமல், இறந்துபோன வட மொழிச் சொற்கள் சொற்றொடர்கள் கதைகளையும், நேற் றுண்டான நாகரிகமில்லா மொழிகளின் சொற்கள் சொற் பொருள் வழக்குகளையும் ஒரு வரைதுறையின்றி யெடுத்துத் தமிழிற்புகுத்தி அதனைப் பாழ்படுத்தி அவ்வாற்றால் தம்மை அப்பிற மொழியாளர்க்கு அடிமைப்படுத்திக் கொள்ளுத லுடன் அவ்வடிமை வாழ்க்கையையே தமக்கொரு பெருமை வாழ்க்கையாகவும் பிழைபட நினைந்து இறுமாந்து ஒழுகு கின்றனர். தன்னைப் பெற்ற தாயைக் கொல்லுந் தறுகணன் போலத் தன்னை அறிவுபெற வளர்த்துப் பெருமைபடுத்திய

தமிழைச் சீர்குலைக்கும் போலித் தமிழ்ப்புலவரைப் பின்பற்றி நடவாமல் தமிழை யுள்ளன்புடன் ஓம்பித் தூய தாய் வழங்கும் உண்மைத் தமிழாசிரியர்களைப் பின்பற்றி நடத்தலிற் றமிழ் நன்மாணவர் அனைவருங் கருத்தாயிருத்தல் வேண்டும்.''

## 2. காதல் மணம்

''பெண்ணின் கருத்தையுங் காதலையும் அறியாமற் பிறர் புணர்த்தப் புணரும் போலி மணமே அன்பும் இன்பமும் இன்றி இந்நாளில் நடைபெற்று வருகின்றது. இதனாற் பெண்ணுக்குக் கற்பொழுக்கம் நிலையாமையோடு, ஆணும் பலவாறு பிழைபட ஒழுகிப் பிணிப்பட்டு வாழ்நாள் குறுகப் பெறுகின்றது. ஆகவே சாதி குலம் பிறப்புப் பொருள் பட்டம் நிலை முதலான காரணங்களைப் பெரிது பாராட்டிக் காதலன்பைக் கருதாமற் செய்யும் போலிமணத்தை அறவே ஒழித்துவிடல் வேண்டும். வேறெந்தக் காரணத்தையும் ஒரு பொருட்டாக நினையாமற் பெண்ணும் ஆணுங் காதலன்பாற் கூடுங் கூட்டத்திற்கே முதன்மை தரல்வேண்டும்.''

## 3. கடவுள் வழிபாடு

''முழு முதற்கடவுள் ஒன்றேயன்றிப் பல இல்லை என்னும் உறுதியில் ஒரு சிறிதும் நெகிழலாகாது. அம்முழுமுதலும் ஒளி வடிவாய் என்றும் எவ்விடத்தும் எல்லாவுயிர்களின் அகத்தும் புறத்தும் விளங்கியபடியாய் நிற்கும் நிலையினைக் கருத்தூன்றி நினைந்துவரல் வேண்டும். மக்களாவார் தம் போன்ற மக்கள்வடிவில் வைத்தே முழுமுதற்கடவுளை வாழ்த்தவும் வணங்கவும் விழைவு மீதூர்ந்து நிற்றலால், ஒளிவடிவிற் காணப்படும் சிவந்த நிறமே அப்பன் வடிவென்றும், அதிற் காணப்படும் நீலநிறமே அம்மை வடிவென்றும் உணர்ந்து, அவையிரண்டும் பிரிவின்றி ஒருங்கு விரவி நிற்கும் அம்மையப்பர் உருவிலே கருத்தைப் பதியவைத்து, அதனையே எக்காலும் வாழ்த்தியும் வணங்கியும் வருதல் வேண்டும்.''

# தாகூரும் தமிழிலக்கியங்களும்

கவிஞர் இரவீந்திரநாத தாகூர் அண்மைக் காலத்தில் வாழ்ந்த இந்தியக் கவிஞர்களுள் தலைசிறந்த ஒருவர் என்பது பலரறிந்த செய்தி. அவர் உயரிய பெருங்குடி மரபிற் பிறந்து செல்வச் சிறப்பொடு வாழ்ந்தவர் என்பதும், செல்வத்தில் தருக்கிச் செருக்கிவிடாமல் இரக்க உணர்ச்சியொடு மக்கள் அனைவரையும் அன்பினால் அணைத்துத்தழுவும் இயல்பினர் ஆயினார் என்பதும் அவரைப்பற்றிக் கூறத்தக்க சிறப்புக்கள். வைதீகமும் பழமையும் மேலிட்டிருந்த காலத்திலும் இடத்திலும் மக்களிடையே தோன்றிய அம் மாபெரு வீரர் தம் காலத்திய குறுகிய மனப்பான்மைகளுக்கு இடந்தராமல், சில வேளைகளிற் செருக்குற்ற தம் காலத்தவரோடு இகலி அன்பினாலும் கருணையுள்ளத்தாலும் தம் காலத்தைக் கடந்தவர் என்பது அறியப்படும்.

அவரோடு ஒத்தகாலத்தில் வாழ்ந்து அவரோடு நேர்த் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் தமிழ்நாட்டுக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் இருந்தாரென்றும், தாகூரின் உயரிய நோக்கங்கள் அவர் மனத்தை ஈர்த்தன என்றும் அறிகின்றோம். தாகூர் இயற்றிய கட்டுரைகளாகிய "சப்பானுடைய ஆவி", "கல்வி கற்பிக்கும் மொழி", "ஜாதி", "அடங்கி நட", "சிறிதும் பெரிதும்" என்ற வற்றை விறுவிறுப்பான தமிழ் நடையில் பாரதியார் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். "காளிதாசன்" என்ற புனை பெயரில் அவர் 1921இலேயே இரவீந்திரருடைய பெருமையைப்பற்றித் தமிழ்மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது: "தோன்றிற் புகழொடு தோன்றுக என்றார் திருவள்ளுவர். தன் பொருட்டாகச் சேர்க்கப்படும் கீர்த்தி ஒரு கீர்த்தி ஆகுமோ? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்பவனுடைய புகழே புகழ். இரவீந்திரர் இந்தியாவைப் பூலோக குரு என்று பூமண்டலத்தார் கண்முன்னே நிலைநாட்டிக் கொடுத்தார். அவருடைய திருவடி மலரடி வாழ்க". இரவீந்திரர் ஆஸ்திரியா நாட்டில் வியன்னா என்னும் நகரத்திற் பத்திரிகை ஆசிரியர்களாலும் பொதுமக்களாலும் ஒருங்கே வரவேற்கப்பட்டதைக் குறிப்பிட்டு எழுதும் பொழுது இவ்வாறு பாரதியார் எழுதியுள்ளார். இதைப் பற்றிய குறிப்புக்களில் ஒன்று இலண்டனிலிருந்து வெளியாகும் 'அப்சர்வர்' என்ற பத்திரிகையில் 1921 ஜூன் 26ஆந் தேதி வெளியானதை ஒட்டிக் காளிதாசன் என்ற புனைபெயரிற் பாரதியார் 1921 ஆகஸ்ட்டு 25இல் இவ்வாறு எழுதினார். எழுதிய கட்டுரையின் தொடக்கமே,

"மன்னற்குத் தன்தேசமல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்று இருந்தது.

பாரதியார் நாட்டுக் கல்வியைப்பற்றி எழுதியுள்ள பாடல், இரவீந்திரர் எழுதியதன் மொழிபெயர்ப்பாகும். மக்களை நோக்கி,

"சோம்பி நீரும் வழிநடை பிந்தினீர்,
நின்று அவிந்தன நுங்கள் விளக்கெலாம்"

என்றும்,

"இருளை நீக்கி ஒளியைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டுவாய்"

என்றும்,

"ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்திருக்கும்
மக்களே எழுக"

என்றும்,

"தீய நாச உரக்கத்தி லிருந்து மருள நீக்கி
எழுந்து களிப்பூட்டி ஒளி துணையாகப்
பண்டைக்காலப் பொருட்களைச் சென்று
தேடி அறிய வேண்டாமோ?"

என்றும் பாரதியார் கேட்டுள்ள நாட்டுக் கல்வியைப்பற்றிய பாடல் இரவீந்தரரின் உணர்ச்சியை நன்கு எடுத்துக்காட்டியுள்ளது. "ஆங்கிலப் பயிற்சி" என்ற தலைப்பில் அவர் இயற்றியுள்ள பாடலில் இரவீந்திரரின் போக்குக் காணப்படுகிறது என்பதை ஒருவர் கூறுதல்கூடும். சேரன் தம்பி சிலப்பதிகாரத்தை இசைத்ததையும், தெய்வ வள்ளுவன் வான்மறையைச் செய்ததையும் பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள் பாரளித்துத் துறந்ததையும் அறியாமல் வேறு தேசங்களில் வரலாறுகளை ஆங்கில வழியாக அறிந்து விழிகுழி எய்தும்படி வீறு இழந்துள்ள அக்கால மாணவர்களைக் கருத்திற் கொண்டு பாரதியார் பாடிய பாடல்கள் பலர் நினைவில் உள்ளன.

பாரதியார் கண்ணனைத் தந்தையாக, தாயாக, ஏவலனாக, மனைவியாக, தோழனாகக் கருதிக்கருதிப் பாடிய பாடல்களில் தாகூரின் போக்குக் காணப்படாமல் இல்லை. விண்மீன்களில் கடவுளைக் காண்டலைவிட மனிதனுடைய ஆன்மாவில் கடவுளைக் காணுதல்கூடும் எனத் தாகூர் கருதினார். "கடவுளுடைய வீணையில் பல நரம்புகள் உள்ளன; அவற்றுள் சில இரும்பு நரம்புகள்; சில செம்பினால் ஆனவை; சில பொன் நரம்புகள்; மனிதன் கடவுளுடைய வீணையின் பொன் நரம்புகள்" என்று தாகூர் எண்ணிய எண்ணத்தின் எதிரொலி பாரதியாரின் பாடல்கள் பலவற்றுட் காணப்படுகின்றது. "பாரதி-அறுபத்தாறு" என்ற தொகுதியிற் காணப்படும் பாடல் ஒன்றினுள் இவ்வுண்மை,

"சாமி நீ, சாமி நீ, கடவுள் நீயே
தத்துவமசி, தத்துவமசி, நீயே அஃதாம்
பூமியிலே நீ கடவுள் இல்லையென்று
புகல்வது நின்மனத்துளே புகுந்த மாயை"

என்றவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எழுதுகோலிலும் எழுத்திலும் கடவுளைக் காணலாம் என்ற பாரதியார், மாதர் தீங்குரற்பாட்டினில், மாதர் எழிலில், மங்கையர் ஒயிலில், மனைவியின்கண், மக்களிடம் கடவுளைக் காணலாம் என்று அடிக்கடி பேசியுள்ளார். தன் மனைவியை அடிமைப் படுத்தவேண்டு மென்ற எண்ணத்தால் தாய்க்குலத்தை இழிவு செய்வதைக்கூடக் கருதாமற் பொதுவாக மாதர்களை நூலோர்கள் இழிவுசெய்துள்ள மடமையைக் கொளுத்துதல் வேண்டுமென்ற அளவிற்குக்கூடப் பாரதியார் சென்றார். ஆணிலும் பெண்ணிலும் உள்ள ஆன்மா ஒன்றே என்ற பண்டைய உண்மையைத் தாகூரும் பாரதியாரும் தம் காலத்திற் புதுமெருகிட்டு மக்களிடம் வற்புறுத்தினர்.

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து சில பாடல்களை அழகுற மொழிபெயர்த்துள்ளார். அவை நேர்மொழி பெயர்ப்பு அல்ல; கீதாஞ்சலியை அடியொற்றி எழுதப்பட்டவை. அதனால், கவிமணியின் பாடல்கள் தமிழிலேயே முதலில் தோன்றிய பாடல்கள் போல் இனிமையாகவும் நயமாகவும் அமைந்துள.

"என்றுமெனை அழிவிலாப் பொருளா யியற்றினை
ஈதுனது திரு வுள்ளமே
ஈடற்ற கலயிது கவிழ்த்திக் கவிழ்த்தியுயிர்
ஏனோ திருத்தி வைப்பாய்"

"நன்றுதவு கொடை கோடி இக்குழவி
கைகளில் நாளும்நீ அள்ளி யிடினும்
நான்குறைகள் சொல்லி அருள்வேண்டா
திருந்திடேன் ஞானஒளி வீசு மதியே"

என்று அவர் பாடியுள்ளவற்றைப் பார்த்தால் இவை தனி அமைப்புக்கள் என்பதுபோலத் தோற்றும். கவிஞர் இரவீந்திரர், "என் பாட்டில் நீ மகிழ்ச்சி கொள்கிறாய் என்பதை அறிவேன். உன் முன்னிலையில் நான் பாடகன் என்ற வகையில்தான் வருகிறேன் என்பதை அறிவேன்" என்று கூறினார். இதனைக் காட்டிலும் இனிமையாகக் கவிமணி

"ஏத்தி இசை பாடத் தொடங்குவேன் நீயும்
அதில் இன்புறுவை என்பதுணர்வேன்"

என்று கூறினார். உன்னை ஏத்தி இசையில் பாடத் தொடங்குவேன்" என்றும், "நீயும் அது காரணமாக இன்புறுவாய் என்பதையும் அறிவேன்" என்றும் கவிமணி பாடியபொழுது,

"அர்ச்சனை பாட்டே ஆகும், பாடுக"

என்று சுந்தரரை நோக்கி இறைவன் கூறியமை அவர் நினைவிற் கட்டாயம் இருந்திருக்கும். கவிஞர் தாகூர் "உன்னைப்பற்றிப் பாடும் மகிழ்ச்சிப் பெருக்கில் என்னை மறந்து கடவுளாகிய உன்னை நண்பன் என்று அழைக்கிறேன்" எனக் கூறினார். கவிமணி அதனை ஒட்டிப் பாடுவார்,

"நானும் என் களிமயக்கால் நண்பன்
என்றே அழைக்கின்றனன், என்னையாள்
நாதனே! ஞான பரனே!

எனப் பாடினார். இவ்வாறு கடவுளை நண்பனாகக்கொண்டு அழைத்தல் என்பது தமிழ்நாட்டிற் புதுவதாக வந்த கருத்தாக இல்லை ஆதலாலும், கவிஞர் தாகூரினுடைய 'கீதாஞ்சலி'ப் பாடலைப் படித்தபொழுது திருவாசகத்தில் வந்துள்ள மாணிக்கவாசகரின் 'மாணிக்கவாசகம்' கவிமணியின் நினைவிற்குக் கட்டாயம் வந்திருக்கும் ஆதலாலும், இப்பாடற் பகுதியைத் தேசிகவிநாயகம் எளிய இனிய வகையில் மொழிபெயர்க்கும் ஆற்றல் உடையவராயினர்.

"தோழா போற்றி! துணைவா போற்றி!

என்பது 'போற்றித் திருவகவல்'. திருச்சதகத்தில்,

"மையிலங்கு நற்கண்ணி பங்கனே
வந்தெனைப் பணிகொண்டபின் மழக்
கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருகின்றலேன்"

என மாணிக்கவாசகர் கூறினார். ஒருகாலத்திற் கடவுள் அவருக்கு அரியவராக இருந்தார் என்பதும், பின்னர் ஆட்கொள்ளப்பட்ட பிறகு எளியவராகிவிட்டார் என்பதும் இப்பாடற் பகுதியிற் கூறப்பட்டுள்ளன. குழந்தையின் கையின்கண்ணதாகிய பொற்கிண்ணம் குழந்தையின்கையில் இருத்தலால், குழந்தைக்கு அஃது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளியவர் கடவுள் என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளது. கடவுள் மனிதனுக்கு எளியவராகிவிட்டாலும், தன் அருமையை அவன் உணராமல் எப்போதாவது இழந்துவிடுவானோ என எண்ணிக் கடவுள் மனிதனோடு சுற்றிக்கொண்டே இருக்கின்றார் என்ற குறிப்பும் இவ்விடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தையின் கையிலுள்ள பொற்கிண்ணத்தைத் தவறிக் குழந்தை கீழே போட்டு நசுங்க வைத்து விடுமோ என்ற எண்ணத்தால் குழந்தை தளர்நடை போட்டுச் செல்லும் இடத்துக்கெல்லாம் உடன்செல்லும் தாயைப் போலக் கடவுளும் நம்முடன் உள்ளார் என்ற குறிப்பு மிக்க நயத்தோடு இவ்விடத்திற் புலப்படுத்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைக்குத் தெரிந்தவைதாமே? அதனால், கவிஞர் தாகூரின் பாடலை மொழிபெயர்க்கும் பொழுது எத்துணை எளிமையோடு நயமாக மொழிபெயர்த்துவிட்டார் என்பது புலப்படும்.

"தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்,"

என இறைவன் சுந்தரரை நோக்கிக் கூறியதாகச் சேக்கிழார் கூறியுள்ளார். சுந்தரரும்,

"தன்னைத் தோழமை தந்தருளி"

என்றும்,

"ஏன்றனை ஆள் தோழனை"

என்றும்,

"என்னுடைய தோழனுமாய்"

என்றும் கூறியவை நினைவுகூரத் தக்கவை. இவற்றை யெல்லாம் கற்றறிந்த கவிமணிக்குத் தாகூர் வாக்கின் அருமை எளிதில் விளங்கி விட்டது எனக் கொள்ளுதல் வேண்டும்.

"சரத் காலம்" என்ற தலைப்பில் கவிமணி பாடியுள்ள நான்கு பாடல்கள் இரவீந்தரரின் "தோட்டக்காரன்" என்ற தலைப்பில் வரும் சிலவற்றின் மொழி பெயர்ப்பு. "சோதரரே, ஒருவரும் வீடு திரும்ப வேண்டாம், இந்தக் காலையில்; ஒருவரும் வேலைக்குச் செல்லவேண்டாம்; வெள்ளத்தில் நுரை போலச் சிரிப்பு காற்றில் மிதக்கிறது; நாம் காலையைப் பயனில் பாட்டில் கழிப்போமாக" என்று தாகூர் கூறிய கருத்துடைப் பாட்டைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

"நீலநெடு வான்முகட்டைத் தாக்கி நிற்போம்
நிரந்தோடி வெளியிடத்தைக் கொள்ளை கொள்வோம்
வேலையிது காலையெதும் செய்ய வேண்டாம்
வீட்டினுக்கு யாவருமே திரும்ப வேண்டாம்
மேலெழுந்த பெருவெள்ள நுரையே போல
விளங்குமெழிற் சிரிப்பொளி மிதக்கு தம்மா
சீலமிகு சோதரரே கூடி இன்று
தெம்மாங்கு பாடிவிளை யாடு வோமே"

என வைத்துப் பாடியுள்ளார். இப்பாட்டினுள் "வேலையிது காலையெதும் செய்ய வேண்டாம்; வீட்டினுக்கு யாவருமே திரும்ப வேண்டாம்" என்பது போன்ற அடிகளைச் சுவைப்

பதற்கு இன்று நம்மிடையே திரு. டி. கே. சி. அவர்கள் இல்லையே என்பது ஒரு குறைதான்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை "கவி தாகூர்" என்ற தலைப்பில் எட்டுப் பாடல்கள் தந்துள்ளார். அவை அனைத்தும் தாகூரின் புகழைப் பரவுவன. "திங்களின் கதிர்களோடு கதிரவன் ஒளி சேர்ந்தால் ஒப்ப, அந்தணர் அமைதியோடு அரசனின் ஆண்மை சேர்ந்தது சுந்தரக் கவிகள் பாடும் சொல் வளம் உடைய தாகூர் இடத்தில்" என்று ஒரு பாட்டிற் கூறியுள்ளார். தாகூர் பாடல்களை வங்காளியர் எல்லாச் சீமைக்கும் சிறப்புறப் பரப்பினார்கள். தமிழரும் தமிழின் மாண்பை அவ்வாறு பரப்பி வளர்ப்பரோ என்றார் இராமலிங்கம்.

"சாந்திநிகேதன்" என்னும் தாகூரின் கலை நிறுவனத்தை நாமக்கல் கவிஞர்

"கலைகளின் வழியே தெய்வக்
கருணையைக் காண்ப தென்னும்
நிலையினைப் படிக்க வென்றும்
நிறுவிய நிலையம் ஈதாம்
சிலைதரல் ஆடல் பாடல்
சித்திரம் நடிப்ப ரங்கம்
பலவித வித்தை எல்லாம்
பயிலுதற் கிடமாய் நிற்கும்"

என்று உளமாரப் பாராட்டியுள்ளார். அதுவே அல்லாமல் "கவிஞன் கனவு" என்ற தலைப்பில் நாமக்கல் கவிஞர் பாடிய ஆறு பாடல்களிற் கவிஞர் தாகூரின் போக்குக் காணப்படுகிறது என்று ஒருவர் கூறுதல்கூடும்.

"கண்ணுக்குத் தெரியாத காட்சிகள் காண்பேன்
காதுக்குக் கேளாத கீதங்கள் கேட்பேன்
எண்ணிக்கை யில்லாத இன்பங்கள் நுகர்வேன்
எல்லாரும் இன்புற எங்கெங்கும் பகர்வேன்"

என்ற பாட்டு ஓர் எடுத்துக்காட்டு.

கீதாஞ்சலியிலிருந்து சில பாடல்களைக் கவிஞர் பெரிய சாமி தூரனும் மொழிபெயர்த்துள்ளார். "வாழிய" என்ற தலைப்பிலும், "மழை கண்ட மயில்" என்ற தலைப்பிலும், "நிலாப் பிஞ்சு" என்ற அவரது கவிதைத் தொகுப்பிற் காணப்படும் சில பாடல்கள் தாகூர் கவிதைகளை அடி யொற்றி எழுதப்பட்டவை.

"எங்கிருந் தோநீ வந்தனை; என்முன்
கங்குலைப் போக்கி நின்றனை; ஆகா;
இடியும் புயலும் எனக்கருள் புரியநீ
எடுத்தபே ரறத்தின் கொடியெனக் கண்டேன்
வாழிய தருமம் வாழிய கருணை!
வாழிய உன்றன் மருள்விளை யாட்டே!"

என வந்துள்ள பகுதி தூரனின் கவியாற்றலை நமக்குக் காட்டுகின்றது. "மழை கண்ட மயிலில்" வரும்

"காதலனை இதுகாறும் காணேன்,
காணுவேன் என்றாடும் உள்ளம்"

என்ற அடிகளிலுள்ள கவித்துவத்தைப் படித்துப் படித்துச் சுவைத்து மகிழலாம்.

அவர் இயற்றியுள்ள "ஓடக்காரன்" என்ற பாட்டி லுள்ள உருவகம் கவிஞர் தாகூரின் உருவகத்தைத் தழு விய து எனக் கூறலாம்.

"காணவும் கூசினேன் கலக்கியே வெள்ளம்
பாறையில் மோதிடப் பகரொணுத் தொல்லைகள்
மீறிய தந்தோ வேதனை பொறுக்கிலேன்"

எனத் தொடங்குகிறது "ஓடக்காரன்" பாட்டு.

"ஈன்றதாய் போலவே என்னையும் காத்து
அன்புடன் ஓடம் செலுத்திடும் ஐயனே;
உன்னுடை வாழ்க்கை உரைப்பாய் எனக்கே"

எனக் கேட்டதற்கு விடை

"பேரும் எனக்கிலை; பித்தராய்ப் பலரும்
ஊருடன் பேரும் ஒன்றல இரண்டல
ஆயிரம் கூறுவர்; அவையெலாம் பொய்யே"

"என்னைப் பெற்றோர் யாருமே இல்லை;
என்றுமே யானும் பிறந்ததும் இல்லை"

என்ற அடிகளுட் சொல்லப்பட்டுள்ளது.

"உன் கைத்தலம் பிடித்த காதலி யாரோ? என்ற வினவிற்கு விடை,

'பெண்மணி, நீ யென் உத்தமக் காதலி
உணர்ந்திலை இன்னுமோ'

என்ற விடை கிடைத்தது.

"இருள் திரை மாயமாய் விலகிட
ஓடும் யாறும் ஒன்றையும் காணேன்"

என அப்பாட்டை முடிக்கின்ற தூரனுடைய உள்ளத்தில் தாகூரின் உருவகங்கள் ஊடுருவிச் சென்றிருந்தன என ஊகித்தல் கூடும்.

தூரன் மாணவராய் இருந்தபொழுதே, ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன், பொங்கல் வாழ்த்தாகச் சில பாடல்களைப் பாடினார். அப் பாடல்களில் தாமே பாடிய சிலவும் தாகூரின் "விடுதிப் பறவைகள்" என்ற தலைப்பிலுள்ள பாடல்கள் சிலவும் அமைந்திருந்தன. அவை "பட்டிப் பறவைகள்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன.

"கவிதையே, உன்னை நான்தானே
எழுதினேன்? என்று கூறி
எழுத்தாணி பெருமை கொள்கிறது"

என்றும்,

"தாமரை மலரைப் பார்த்துக்
காகிதப்பூ சொல்கிறது :- நீ
நாளைக்கு வாடி விடுவாயே!"

என்றும்,

"பகலாகவே இருக்கக்கூடாதோ என்று
தேன்வண்டு ஆசைப்படுகிறது"

"இரவாகவே இருக்கக்கூடாதா என்று
குள்ளநரி ஆசைப்படுகிறது"

என்றும்;

"மின்னல் ஒளியைக் கண்டு மகிழ
ஆசைகொண்டவன் இடியின்
முழக்கத்திற்கும் தயாராக
இருக்கவேண்டும்"

என்றும் தூரன் இயற்றிய உரைடைக் கவிகள் தாகூரின் உரைநடைக் கவிதை சிலவற்றை அடியொற்றி இருக்கின்றன என்று சொல்லுதல் இயலும்.

"மேகமாக இருக்கக் கூடாதா
என்று பறவை ஏங்குகிறது;
பறவையாக இருக்கக் கூடாதா
என்று மேகம் ஏங்குகிறது"

"உனக்குப் பசியில்லையென்பதனால்
உன் உணவைக்
குறை சொல்லாதே"

"கடவுளுக்குப் பெரிய
இராச்சியங்களின்மேல்
சலிப்பேற்படுகிறது;
ஆனால் சிறு மலர்களின்மேல்
ஒருநாளும் சலிப்பில்லை"

"கடவுளுக்கு இன்னும் மனிதனிடம்
சலிப்பேற்படவில்லை என்ற

சேதியுடன் ஒவ்வொரு குழந்தையும்
உலகில் தோன்றுகிறது ”

என்றும் அவரே மொழிபெயர்த்துள்ள தாகூரின் கவிகள் தூரன் சிந்தையைவிட்டு அகலவில்லை போலும்!

தாகூரினுடைய கதைகள் சிலவற்றைத் திரு. சீநிவாசாச் சாரியாரும், சுப்பிரமணிய பாரதியாரும் பல்லாண்டுகளுக்கு முன்னரே மொழிபெயர்த்து வெளியிட்டனர். திரு. வ. வே. சு. ஐயர் அவர்களாலும் தாகூர் தமிழ்நாட்டில் அறியப் படலாயினர். தாகூருடைய சிறுகதைகளையும் புதினங்களையும் மொழி பெயர்த்து வெளியிட்டமைக்காக அறிஞர்கள் த. நா. குமாரசாமி, த. நா. சேனுபதி, திரு வாளர்கள் வி. ஆர். எம். செட்டியார், ஏ. கந்தசாமி, டி. எஸ். பார்த்தசாரதி, திருவாட்டியார் அரங்கநாயகி அம்மாள், தஞ்சம்மாள், சாவித்திரி அம்மாள் ஆகியோ ருக்குத் தமிழகம் பெரிதும் கடமையுடையது. எனவே, இவற்றையெல்லாம் தமிழ்மொழி வழியாகப் படித்தறிந்து மேன்மேலும் கவிஞர் தாகூரை நன்கு அறிந்து கொள்வ தற்குத் தமிழ் மக்கள் வாய்ப்புடையவராக உள்ளனர். ஆதலால், வருங்காலத்தில் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற தமிழக விழுமிய கருத்தினை விளக்கமாகப் பரப்பிய தாகூருடைய கருத்துச் செல்வங்கள் நாட்டிற்குப் பெரிதும் துணைநின்று பயன்தரும் என்பது உறுதி.

# அழகின் சிரிப்பு

இக்காலத் தமிழ்மக்கள் கருத்திற்குத் தக அவர்தம் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உதவும் வகையிற் கவி இயற்றுவோருள் தலைசிறந்து விளங்குபவர்களில் பாரதிதாசன் ஒருவர். சுப்பிரமணிய பாரதியாரை அடியொற்றி அவர் பாராட்டும் வண்ணம் கவி எழுதத் தொடங்கியதால் 'பாரதிதாசன்' எனப் பெயர் வைத்துக்கொண்டனர். கனக சுப்புரத்தினம் அவர்கள் பொழிந்துள்ள பொன்னும் மணியும் பற்பலவாகும். நன்றி மறவாப் பெற்றி வாய்ந்த தமிழ்மக்கள் உள்ள நம் நாட்டில் அவருக்கு நிலைபெறு தலையுடைய புகழுண்டாயிருப்பது கண்கூடு. தமிழ்மணம் வீசும் எந்தவிடத்திலும் அவர் பாட்டு இசைக்கப்படாது இருப்பதில்லை. "இன்பம் எனப்படுதல்தமிழ் இன்பம் எனத் தமிழ் நாட்டினர் எண்ணுக" என்றார். "வெள்ளம்போல் தமிழர் கூட்டம்; வீரங்கொள் கூட்டம் அன்னார் உள்ளத்தால் ஒருவரே மற்று உடலினாற் பலராய்க் காண்பார்; கள்ளத்தால் நெருங்கொணாதே என வையங் கலங்கக் கண்டு துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம் சொக்கும் நாள் எந்த நாளோ?" எனப் பாடித் தமிழரிடை ஒற்றுமையை வற்புறுத்தியுள்ளார். "செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்", "பொங்குதமிழர்க் கின்னல் விளைத்தால் சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு", "தமிழினை இகழ்ந்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" போன்ற வீரவுரைகளை அழகாக வழங்கியுள்ள பாரதிதாசருக்கு தமிழகம் என்றும் கடப்பாடுடைத்து.

அவருக்குத் தமிழ்மொழியில் உள்ள பற்றிற்கும் ஆர்வத்திற்கும் எல்லையில்லை. அவர் பாடல்களைப் படிக்கிற அன்னியனும் தமிழன்பன் ஆகிவிடுவான்.

"தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங் கண்டதில்லை"

"தமிழென்று தோள் தட்டி ஆடு—நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு"

"தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்"

"தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்"

"உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே"

எனவரும் அடிகள் போன்றவற்றைப் பாடக்கேட்கும் தமிழர் வீரத் தமிழர் ஆகிவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழிசை உள்ளம் உருக்குவதைத் குறித்துத் "தமிழுணவு" என்னும் பாட்டிலே அழகாக அவர் கூறியுள்ளார். "வண்ணத் தமிழ்ப்பதம் பண்ணிற் கலந்து என்றன் நெஞ்சையும், வானத்தையும் குளிர் நீரையும், நிலவையும், தமிழர் குலத்தையும் ஒன்றெனச் செய்ததுவே" என்றும், "தமிழ் வளர்க கலை யாவும் தமிழ்மொழியில் விளைந்தோங்குக" என்றுங்கூறிய இடங்களை நோக்குக.

உலகில் ஒற்றுமை வேண்டும் என்பதையும், மக்கள் தம்முடைமையைத் தனியுடைமையாய் மதிக்காது பொதுவுடைமையாக மதிக்கவேண்டும் என்பதையும், "உலக ஒற்றுமை", "முன்னேறு", "உலகம் உன்னுடையது", "புதிய உலகுசெய்வோம்" முதலிய தலைப்புகளில் அழகாக எடுத்து இயம்பியுள்ளார்.

பெண்கள் விடுதலைக்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும் உரியமுறையில் அவர் பாடலுட் பல அமைந்துள்ளன. அவற்றைப் படிப்போர் காதல் மணங்களைத் தடைப்படுத்தக் கூசுவர். கைம்பெண் மறுமணத்தை மறுக்க

முன்வரார். இவை உண்மையென்பதை "மாந்தோப்பில் மணம்", "காதற் குற்றவாளிகள்", "காதல் மகத்வம்", "காதலைத் தீய்த்த கட்டுப்பாடு" என்னும் தலைப்புக்களில் வரும் பாடல்களைத் துய்ப்போர் அறிவர்.

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தாற் பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?"

இவ்வடிகளை அறியா இளைஞர் இல்லை.

பெண்களுக்காக மிகவும் பரிந்துபேசும் இக்கவிஞர் மறைவாக மயிலிடம் கூறியது வெளியாகிவிட்டதே! பெண்ணினம் யாது செய்யுமென்பதை அறியேன். பிறர் பழி தூற்றுதிருந்து பாரதிதாசனைப் பொய்யாக்குவாரா? அன்றி, இவர் ஏதோ காவியப் பித்துபிடித்த நேரத்தில் பாடிவிட்டார் என்பாரா? அவர் மறைவாகக் கூறியதை நோக்குங்கள்:

"அழகிய மயிலே, அழகிய மயிலே
நீயும் பெண்களும் நிகர் என்கின்றார்
நிசம் அது நிசம் நிசம் நிசமேயாயினும்
பிறர்பழி தூற்றும் பெண்கள் இப்பெண்கள்
அவர்கழுத் துன்கழுத் தாகுமோ சொல்லாய்."

அரிவையார் அறிவிலார் என்பதை மறுத்தெறிய "வீரத் தாய்" என்பதில் வரும், விசயராணி வரலாறு ஒன்றே போதும்:

"அரிவையர் கூட்ட மெல்லாம்
அறிவிலாக் கூட்டம் என்பாய்
புரிவரோ, விசயராணி புரிந்தஇச்
செயல்கள் மற்றோர்?"

பெண்ணுலகம் அன்னையும் ஆசானும் ஆருயிர்க் காப்பாளு மாக வேண்டுமென்று கவிஞர் விழைகிறார். கஞ்சியும்

பறித்துக் காதலும் பறித்தாரோ ஆடவர் எனக் கலங்கு கிறார். "ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர் தேடு வதும், ஆடவர்க்குச் சேவித்திருப்பதும், அஞ்சுவதும் நாணுவதும், ஆமையைப்போற் கெஞ்சுவதும் ஆகக் கிடக்கும் மகளிர் குலம் மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஒரு பகுதி" என இரங்குகிறார். "மாதர்தம் உரிமை மறப்பது மாண்பா?, மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா ஆய்ந்துபார்?" என்கிறார்.

கல்வி இல்லாத ஆடவரும் மகளிரும் வாழ்வதால் வீடு எவ்வாறு இருண்டதாக இருக்கும் என்பதை இருண்ட வீட்டில் நன்றாக எடுத்துக் காட்டியுள்ளார். பகல் பன்னிரண்டு மணிக்குப் பழங்கல அறைக்குட் பதுங்கியிருந்த கிழ எலிகள் வீட்டின் பல இடங்களிலும் தோன்றி ஆடல்பாடல் அரங்கு செய்த விதத்தை எடுத்துக்காட்டி யுள்ளார். வீட்டிற் காற்று வீசுந்தோறும் மோட்டுவளை யில் மொய்த்த ஒட்டடை பூமழையாகப் பொழிகின்ற தரை யில், ஊமைக்குப்பைகள் உம் என்று மேலெழும் என்று கூறிய இடத்தில் இருண்ட வீட்டின் இயல்பினை உண்மை யிற் படமாக்கிவிட்டார்.

"அறிவே கல்வியாம்; அறிவிலாக் குடும்பம்
நெறிகாணாது நின்ற படிவிழும்
சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம்
வித்தால் விளைவன மேன்மை, இன்பம்
செல்வம் கடல்போல் சேரினும் என்பயன்?
கல்வி இல்லான் கண்ணிலான் என்க."

இதற்கு நேர்மாறாக, "குடும்பவிளக்கில்" கல்வி அறிவு உடையவர்கள் எவ்வளவு இனிமையாகவும் அழகுபடவும் இல்லறம் நடத்துகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டியுள் ளார். பெண்கட்கும் கல்வி வேண்டும் என்பதைப் பல பாடல்களால் வற்புறுத்தியுள்ளார். காட்டாய இரண்டு அடியில் வருவன:—

"பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுதற்கே
பெண்கட்குக் கல்விவேண்டும்
மக்களைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே"

"கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம். அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறி வுடைய மக்கள்
விளைவது நவில வோநான்?

பண்டங்களைப்பற்றி எழுதுவதில்கூட கவிப்பண்பினைக் காட்டியுள்ளார். எல்லாரும் அறிந்த ஊறுகாய் கவிஞர் சொற்களால் படிப்போர் வாயினில் நீர் ஊறும்படி செய்யு மாறு அமைக்கப்பட்டுள்ளது என்பது அடியில் வரும் அடிகளால் விளங்கும்:—

"வைத்தவரை உண்டுபின் வையாமைந் துன்பம்
உற்றிடச்செய் ஊறுகாய் ஒன்றல்ல கேட்பாய்நீ
இற்றுத்தேன் சொட்டும் எலுமிச்சை—வற்றியவாய்.
பேருரைத்தால் நீர்சுரக்கும் பேர்பெற்ற நாரத்தை
மாரிபோல் நல்லெண்ணெய் மாறாமல்—நேருறவே
வெந்தயம் மணக்க அதன் மேற்சாயம் போய்மணக்கும்
உந்துசுவை மாங்காயின் ஊறுகாய்—நைந்திருக்கும்
காடி மிளகாய் கறியோடும் ஊறக்கண்
ணுடியிலே இட்டுமேல் மூடிவைத்தேன்—"

அழகின் சிரிப்பு என்ற தலைப்பில் அமைந்த பாடல்கள் இயற்கைப்பொருள்களில் இக்கவிஞருக்குள்ள ஈடுபாட்டினை

எடுத்துக் காட்டுவன. தென்றலின் குறும்புகளாக அவர் கூறுவனவற்றில் ஒன்று பெண்கள் விலக்காத உடையை அதுபோய் விலக்குகின்றது என்பது. "பெண்கள் விலக்காத இடையை நீ போய் விலக்கினும், விலக்கார் உன்னை" என்று தென்றலை நோக்கிப் பாடினர். புருக்களைப்பற்றிப் பாடியவர் அவற்றின் வாழ்வில் வெட்டு இல்லை, குத்து இல்லை வேறுவேறிருந்து அருந்தும் கட்டு இல்லை என்றார். கீழ்மேல் என்னும் கண்மூடி வழக்கம் இல்லாமற் கூட்டமாய்ப் புருக்கள் கூடி இரையைத் தின்னுகின்ற காட்சியை எடுத்தியம்பும் வகையால் மக்களுக்குப் பாடம் கற்பித்துள்ளார். கிளியைப்பற்றி அவர் பாடியுள்ள பாட்டுக்கள் நவில்தொறும் இன்பம் பயப்பன. கிளிக்குத் தென்னை தான் ஊஞ்சல், வான்தான் வீதி, தின்ன நிறைய பழமும் கொட்டையும் உண்டு, வையம் முழுதும் திருநாடு என்றவாறு அழகுபடப் பாடியுள்ளார்; இருளில் கூட, அழகுகாணும் பெற்றியாளர் பாரதிதாசன். "அடுக்கிதழ்த் தாமரைப் பூவின் இதழ் ஒவ்வொன்றின் அடிப்புறத்தும் ...அடுத்திருக்கும் இருளைப் பார்த்து, எங்கும், அனைத்துள்ளும் அழகு நீயே" என்று கூறி வியந்துள்ளார்.

உலகினில் உழைக்கின்ற மக்கள் வறியராய் இருப்பதையும், அவர் உரிமைகேட்டால் செல்வர்கள் அவர்மீது பாய்வதையும் பகலிற் பார்த்துப்பார்த்துக் கோபங்கொண்டு இரவில் விண்மீனாய்க் கொப்பளித்தது விரிவானம் என்று கூறித் தம் கருத்தினைப் புலப்படுத்தியுள்ளார். இக்கருத்து இவருடைய "புரட்சிக்கவி" என்ற தலைப்பில் அமைந்த பாடல்களிலும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

"சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்
தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?

பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?'

என்ற பாட்டு பலர் அறிந்ததொன்று. குடியானவனைப் பற்றி உள்ள பாடல்களிற் பகலில் எல்லாம் கடுக்கும்படி உழைப்பவனைக் குடியானவன் என்று வெறுத்து ஒதுக்கு தல் ஒவ்வாது என்பதை வற்புறுத்தியுள்ளார்.

"அழகிய நகரை அவன் அறிந்ததில்லை
அறுசுவை உணவுக்கு அவன் வாழ்ந்ததில்லை
அழகிய நகருக்கு உணவை
வழங்குதல் அவனது வழக்கம்: அதனை
விழுங்குதல் மற்றவர் மேன்மை ஒழுக்கம்"

என அமைந்துள்ள பாடல் போன்ற பாடல்கள் நோக்கத் தக்கவை.

பழந்தமிழிற் புதுமை ஏற்றி எழுத்துக்கு எழுத்து இனிப்பு ஏற்றி புதுப்புது நூல்கள் செய்யவேண்டும் என்று அவர் கூறி இருப்பதற்கு ஏற்பச் செய்துவருவது குறிப் பிடத்தக்கது. புதிதாக அவர் பாடிய ஏற்றப்பாட்டில்

"மாத ருக்கும் நீதி — ஆண்
மக்களுக்கும் ஒன்றே
பச்சை விளக் காகும் — உன்
பகுத் தறிவு தம்பி
பச்சை விளக் காலே — நல்ல
பாதை பிடி தம்பி
அச்சமில்லை தம்பி — நல்ல
அறம் இருக்கும் போது
எச்சரிக்கை கண்டாய் — தம்பி
எண்பதுடன் வாழி —"

என்று பாடி இக்காலத்திற்கு வேண்டிய கருத்துக்களை எளிய இனிய தெளிவான தமிழில் பாடியுள்ளார். இவை போன்ற பாடல்கள் தமிழ் மக்கள் அனைவராலும் படித்து இன்புறத் தக்கவை ஆகும்.

# வையாபுரிப் பள்ளு

வையாபுரிப் பள்ளு என்பது பழநியில் உள்ள பள்ளர்கள் செய்தியைக் கூறும் பாட்டு என்று பொருள்படும். பள்ளு ஒருவகைப் பிரபந்தம். இதிற் பள்ளர்களே பெரும் பான்மையாகப் பேசப்படுவார். பள்ளினை 'உழத்திப் பாட்டு, என்றுஞ் சொல்லுவது உண்டு. உழுகின்ற பள்ளப் பெண்களைப்பற்றிய பேச்சு இந்நூலில் அதிகமாக வரும். பள்ளு இயற்பாக்களையும் இசைப்பாக்களையும் உடைய ஒருவகை நாடக அமைப்பு என்று சொல்லத்தக்கது. இதில், பெரும் பான்மையாக மூத்த பள்ளியென்றும், இளைய பள்ளியென்றும் இரண்டு பாத்திரங்கள் வருவர். அவ்விருவரும் பள்ளன் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டவர்களாக இருப்பர். பொதுவாக எதிர்பார்க்கப்படுவதுபோலவே, இளைய பள்ளி பள்ளன் மனத்தைக் கொள்ளைகொண்டு விடுவாள். அதனுல் இளைய பள்ளியிடம் பொறுமை கொண்டவளாய் மூத்த பள்ளி நடந்துகொள்வாள். இருவரும் ஓரளவு சண்டை போட்டுக்கொண்டாலும், இறுதியில் இரண்டு பேரும் ஒத்துப் போவதுபோலவே காட்டப்படுவர். இவ்வாறே முக்கூடற்பள்ளு, சிவசைலப்பள்ளு, கதிரைமலைப் பள்ளு ஆகிய பள்ளுகளிற் கூறப்படுகிறது.

இந்த முறையிலேயே வையாபுரிப்பள்ளுவும் அமைந்திருக்கிறது. வயலிலிருந்து பள்ளியர்கள் பலர் வந்து சேருகிறுர்கள் எனக் கதை தொடங்குகிறது. முதலில் மூத்த பள்ளி வருகிறுள். திங்கள் நுதலில் மஞ்சட் பொட்டும்,

இங்கிதப் பேச்சில் வெகு பகட்டும் உடையவளாய் அவள் வந்து தோன்றுகிருள். அடுத்தபடியாக, இளைய பள்ளி மஞ்சள் மணம் வீசிய மெய்யும், கொஞ்சிப்பேசி ஆடிய கையும் உடையவளாய் வருகிருள். பிறகு, பழனிக் குமர வேளின் பண்ணையாளாகிய பள்ளன் வந்து தோன்றுகிருன். அவன்

"உன்னிப் பேசியே யுலாவி
மின்னிய சந்திர காவி
யுருமால் தலையிற் கட்டி
யோடி யதட்டி"

வருகிருன். பண்ணைக்காரனிடம் பள்ளனும் அவனுடைய இரண்டு மனைவியரும் நாட்டின் வளத்தைப் பற்றிக் கூறு கிருர்கள். பிறகு,

"ஆடுவெட்டிப் பொங்கலிட்டுச்
சாடு நிறைய—இரண்
டாயிரம் பழங்கள் வைத்துக்
கோயிலின் முன்பு
வேடிக்கையாய்ச் சாம்பிராணித் தூபம் போட்டுப்"

பயிர் விளைய நல்ல மழை பெய்யவேண்டும் என்று வேண்டிக் கொள்கிருர்கள். இப்பொழுது மழைக்குறி தோன்றுகிறது. எப்படி?

"கொங்கு மின்னல் ஈழமின்னல்
கூடி மின்னுதே—ஒரு
கோடி வானம்பாடி மழை
தேடி யாடுதே.
எங்கு மேகிழ்க் காற்றடித்துச்
சங்கை யில்லாமல்—இப்போ
ஏற்ற முள்ள கொம்பு சுற்றிக்
காற்ற டிக்குதே."

மழை பெய்துவிட்டது. வெள்ளம் புரளுகிறது. எப்படி?

திரையை மோதிப் பெருகி யேயிரு
கரையை மோதித் திருகியே
'தினைப்பு னத்தையும் நிரவி யேயொளிர்
கனற்பு னத்தையும் நிரவியே''

வெள்ளம் ஆற்றிலே புரளுகிறது.

இப்பொழுது பண்ணைக்காரர் குட்டைக் கழுத்தும், மொட்டை மீசையுமாய் வருகிறார். அவர் முன்னே வட்டமிட்ட ஒரு கோழியையும், ஒரு பெட்டி அவலையும் வரிசையாக வைத்துப் பள்ளர்கள் வந்தனை செய்கிறார்கள், இந்தப் பண்ணைக்காரர் பொல்லாதவர்; "வம்பும் தும்பும் பேசித் தடிக்கம்பினால் அடிப்பார்". "பாக்குத் தாடி" என்று கூறி ஒருத்திமேல் ஓடி வீழ்வார். "உன் குடும்பன் எங்கே?" என்று அதட்டி இன்னொருத்திக்கு இடும்பை செய்வார்.

இச்சமயத்தில், மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் தன் கணவனைக் குறித்து முறையிடத் தொடங்குகிறாள்:—

"வள்ளத்தைப் பனங் கள்ளுக்கு விற்றான்
வளைவைச் சுற்றுவான் உழவைப் பாரான்
கள்ளியி ளைய பள்ளியின் வீட்டைக்
காக்கப் போவான்வ யல்காக்கப் போகான்."

"என்னை ஏறிட்டுப் பாரான் சோறிட்டால் உண்ணான்."
இப்படி இவள் முறையிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே இளையபள்ளி கணவனைத் தனது வீட்டிலே அடைத்து வைத்துவிட்டு "எங்கேயோ போனானே" என்று சொல்லி வருகிறாள். "'உடம்பு நலக்குறைவு' என்று உறங்கிக் கொண்டிருந்த பள்ளனை மூத்தபள்ளி எழுப்பி வயலுக்கு விரட்டினாள். மூன்று நாளாகியும் போன பள்ளன் வரவில்லையே, ஆண்டே!" என்று கதறிக்கொண்டு இளையாள் வருகிறாள்.

பண்ணைக்காரர் "ஒளித்து வைத்துவிட்டு இப்படிப் பேசுகிறாய், கள்ளி! காட்டில் ஓடிப் பள்ளனைக் கூட்டி வா" என்றவுடன், பள்ளன் தானாகவே அங்கே தோன்றிப்

பண்ணைக்காரர் காலில் விழுகிறான். பண்ணைக்காரர் அவனை எழச்சொல்லிக் கொழுந்துவெற்றிலையும் பாக்கும் கொடுக்கிறார். பிறகு "பண்ணைச்சேதி என்ன" என வினவுகிறார். அவன் பண்ணையில் உள்ள நெல்வகை, மாட்டுவகை, கலப்பை, மேழி, நுகம் இவற்றைப் பற்றியெல்லாங் கூறுகிறான்.

பிறகு, பண்ணைக்காரர் நிலத்துக்கெல்லாம் எரு வைக்க வேண்டும் என்று சொன்னவுடன், இடையர் வீட்டைத் தேடிப் பள்ளன் போகிறான். இடையர்கள் வயலில் எரு வைப்பதற்கு ஏகியபிறகு, பள்ளன் மெள்ள இளையாள் வீட்டிற் புகுகிறான். அதனையறிந்த மூத்தபள்ளி பண்ணைக்காரரிடத்தில் முறையிடுகிறாள்.

"அச்சத்தை விடுத்தான்—இளையவள்
குச்சிற் போய்ப் படுத்தான்—நானும்போய்
அழைத்தாலும் வாரான்—வயல்விரை
முளைத்தாலும் பாரான்;
அவன் காலை நான்
பிடித்தாற் கை நெரிப்பான்—இளையவள்
அடித்தாலுஞ் சிரிப்பான்."

"தன்வெகு
மானத்துக் கவளாம்—படுந்துயர்
ஈனத்துக் கிவளாம்."

"அவனைக் கண்டுபிடித்துக் குட்டையிலே போடுங்கள், ஆண்டே" என்கிறாள் அவள். அங்ஙனமே அவனைத் தொழுமரத்தில் மாட்டிவிட்ட பிறகு, இளைய பள்ளி வந்து பேசுகிறாள்:—

"புருசனையுந் தெய்வமென்று
பூசிக்காத தொண்டியளை
ஒருநாளும்மே வைத்திருக்க
ஒண்ணுதென்ப தறியாயோ?"

"என்னத்தையோ பண்ணைக்காரரிடத்திலே கோளுத்திப்

போட்டுவிட்டாள், பார், மூத்த பள்ளி; இவளை மெச்சிக் கொண்டிருந்தாயே" எனச் சொல்கிறாள். பள்ளனும் "என்ன இருந்தாலும் உன் மதிபோல அவட்கு எங்கே உண்டாகப்போகிறது?" என்று அன்புமொழி பேசி அவளை அனுப்புகிறான். பிறகு மூத்த பள்ளி அவனுக்குச் சோறு கொண்டு வருகிறாள். "கொள்ளி கொண்டு தலைசொரிந்தது போல இளைய பள்ளியைக் கொண்டாயல்லவா? துள்ளின மாடு பொதி சுமக்கும் என்றபடிக்குச் சிக்கிக் கொண்டாய் அல்லவா?" எனக் கேட்கிறாள்.

"தப்பிதந்தான் செய்தேன். நீயுந்தான் பொறுக்க வேண்டும்" என்று பள்ளன் வேண்டுகிறான். பள்ளியும் பண்ணைக்காரரிடம் போய் "நான் தப்பிதமாய்ச் சொல்லி விட்டேன், ஆண்டே! எத்தனையானாலும், பெண்புத்தி பின் புத்தி ஆண்டே! அவனுக்கு நான் பிணை ஆண்டே! அவன் குற்றம் பொறுக்கவேண்டும், ஆண்டே" என்று கதறி வேண்டுகிறாள். பள்ளனும் விடுவிக்கப்படுகிறான்.

பின்னர் நாற்று நடப்படுகிறது. நடுகையின்போது, பள்ளரும் பள்ளியரும் கொள்ளும் களிப்பைக் குறித்து ஆசிரியர் சில பாடல்களில் வருணிக்கிறார். நெல் விளைந்து அறுவடையாயிற்று. நெல்லை அளந்து கொடுக்கிறான் பள்ளன். மூத்த பள்ளிக்கு உரிய சுதந்தர நெல்லைக் கொடுக்கவில்லை என்றும், பிள்ளையார் நெல்லைக்கூட இளையாள் கூடையிற் கொட்டிவிட்டானென்றும் மூத்தவள் குற்றஞ் சாட்டுகிறாள்.

இக்காரணத்தினால், இரு பள்ளியரும் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்கிறார்கள். "சிறுக்கி என்று சொல்லாதடி நீயென்னப் போறேன்" என்கிறாள் சின்னவள். "உறுக்கிப் பேசித் துள்ளாதடி! புலியின் முன்னே இப்போ ஊஞ் சலாடி வாராயது ஞாயமல்லடி" என்கிறாள் பெரியவள். இப்படி ஏசிக்கொள்கிற இரண்டுபேரில் மூத்தவள் சைவப் பெண்போலும்! இளையாள் வைணவப் பெண்போலும்! ஆதலால், இருவரும் திருமாலையும் சிவனையும் வேறு

வம்புக்கு இழுக்கிறார்கள். இளையாள் சொல்கிறாள்:-

"பசி பொறுக்க மாட்டாமலே
சோற்றுக்குச் செத்தே — உங்கள்
பரமனார்நஞ் சுண்ட கதை
நானறியேனோ?"

பதிலுக்கு மூத்தவள் சொல்லுகிறாள்:—

"புசித்திடவே சோறுகிடை
யாமல் தானே— யுங்கள்
புங்கவனார் மண்ணையுண்டு
கக்கவில்லையோ?"

பிறகு இரண்டுபேரும் தாமாகவே ஒற்றுமைப்பட்டுக் கடவுளார் இருவரையும் பேதித்துப் பேசுவது குற்றம் என்ற முடிவுக்கு வருகிறார்கள். மற்றும், தாங்கள் இருவரும் ஒத்து வாழவேண்டுமென்றும் முடிவு செய்துகொள்கிறார்கள். மூத்தாளைப் பார்த்து,

"ஒருபானைச் சர்க்கரைபோல் இருவரும் ஒத்து வாழ வேண்டும்"

என்கிறாள் பழநிப்பள்ளி. இளையாளைப் பார்த்து:

"கூடிக் கெட்ட பேர்களும் பிரிந்து வாழ்ந்தோரும்
இக்குவலயத்தே காணேனடி"

என்று கூறுகிறாள் வையாபுரிப் பள்ளி. இங்ஙனம் முடிகிறது இந்தப் பள்ளு.

இதை இயற்றியவர் பழநிச் சமீனைச் சேர்ந்த குமார வேலச்சின்னவையன். இவர் இளவரசராய் இருந்த பொழுது இப்பள்ளினை இயற்றினார் போலும்! இவர் தந்தையைக் குறித்து நூலிற் சிற்சில இடங்களிற் குறிப்பிட்டுள்ளார். மழை மிகுதியாகப் பெய்தது என்று சொல்லுகிற இடத்திலே "சின்னவையன் கொடையைப் போலச் சொரிந்தது" என்று கூறியுள்ளார். நூலினை முடிக்கிற இடத்திலும் "சின்னவையன் நீடூழிகாலம் நாடாண்டு சிலாக்கியம் பெற்று வாழ்க" என்று வாழ்த்தியுள்ளார்.

இந்தச் சின்னேவையன் காலம் 18ஆம் நூற்ருண்டு என்பது தெரிகிறது. எனவே, இந்த நூல் இருநூறு ஆண்டுகட்கு முன்னுல் எழுதப்பட்டதாகும்.

இவ் வாசிரியர் வெறுக்கத்தக்க வகையிலே சில வருணனைகளை இடையிடையே அமைத்திருக்கிருர் என்று சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அவையெல்லாம் அக் காலப்போக்கெனத் தள்ளிவிடத் தக்கன. காட்டாக, 'புவி யில் இச்சித்த பெண்களையும் அனுபவியாதார் சனனம் ஆண் சனனம் ஆகாதே' என்று கூறியு இவர் அக்காலத்து இழிசின மக்கள் கருத்தை ஒட்டி இப்படிக் கூறிஞர் போலும்!

பெரும்பான்மையான பெண்கள் கணவனிடம் கோபங் கொண்டு முதலில் அவனை அல்லல் உறச் செய்வாராயினும் அல்லலுறும் நேரத்திலே தாங்கள் அதனைப் பார்க்கப் பொறுக்காமல் அவனுக்கு நன்மை செய்ய முயல்வது உலக இயல்பு. அவ்வியல்பினையுணர்ந்து இவ்வாசிரியர் கணவனைக் குற்றஞ் சாட்டிய மூத்த பள்ளியே அவனை விடுவிக்க முயலும் முயற்சியில் தன்மீதே பழி சுமத்திக்கொள்கிருள் என்று காட்டியுள்ளார். எரு வைக்க இடையர்கள் புறப் பட்டு வந்த காட்சியை வருணிக்கின்ற இடத்திலே இயல் பான முறையில் அவரை அமைத்துப் பேசியுள்ளார். இடை யர்கள் பட்டை நாமம் போட்டவர்கள்; இருப்புக்கட்டுச் சேர்ந்த தடியை வீசி வருபவர்கள்; முட்டுவதுபோல இருக் கும் நரைத்த மீசையை முறுக்கிவிட்டு வருபவர்கள்; துளசியைச் சட்டமாய் அணிந்து வருபவர்கள் என்பதனை

'பட்டைநா மங்க ளெங்கும் பழுக்கவே போட்டி ருப்புக்
கட்டுசேர் தடியை வீசிக் கையினிற் கடையால் கொண்டு
முட்டவே நரைத்த மீசை முறுக்கியே துளவப் பாசி
சட்டமா யணிந்தே ஆயர் சகலருந் தோன்றிஞரே"

என்றவாறு பாடிஞர். இப்படி, பள்ளர் இயல்புக்கும், நாட்டுப்புற மக்கள் இயல்புக்கும் ஏற்ற வகையில் அமைந்த வர்ணனைகள் பற்பல இப்பள்ளுவில் உண்டு.

# சிறுகதை

தமிழில் "சிறுகதைகள்" அண்மையான காலத்தில் தான் தோன்றின. "சிறுகதை" என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது தமிழ்நாட்டில் இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டுகட்குமுன் வளர்ச்சி அடைந்திலாத ஓர் இலக்கியவகை. தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டிற் கதைகள் சொல்லும் வழக்கமும் கதைகள் எழுதும் வழக்கமும் இருந்தன. ஆனாலும் சிறுகதை என்பதன் இலக்கணத்திற்கு ஒத்த கதைகள் அண்மையில்தான் உருவாயின. பஞ்ச தந்திரக் கதைகள், மதனகாமராசன் கதைகள், விக்கிரமாதிதன் கதை, தென்னாலிராமன் கதை போன்ற கதைகள் தமிழ்நாட்டிற் பல காலம் வழங்கி வந்தனவாயினும், அவையெல்லாம் "சிறுகதை" யல்ல. அக்கதைகளின் அடிப்படையிற் சிறுகதைகள் முளைத்தன என்று சொல்லலாமே அன்றி, அவையே சிறுகதைகள் என்று கருதுவது பொருந்தாது.

"சிறுகதைகள்" நிரம்ப உருவாகி உள்ளமொழி என்று சொல்லப்படும் ஆங்கில மொழியில்தானும், சென்ற நூற்றாண்டில் கடைசிப் பகுதிக்கு முன்னால் அவை உருவாகவில்லை என்பது அறியத்தக்கது. ஆங்கிலச் சிறுகதைகளைப் பற்றி ஆய்ந்து எழுதிய பேரி பெயின் என்பார் நல்ல உயரிய ஆங்கிலச் சிறுகதைகள் பத்துக்கு மேல் இல்லை என்று முப்பது ஆண்டுகட்கு முன் எழுதினார். அவரே எழுதிய பல கதைகள் உண்டு. அவைகூட சிறுகதை இலக்கணத்திற்கு முழுதும் ஒத்திருக்கவில்லை என்பது அவ

ர து கருத்து. அதனால், எழுபது அல்லது எண்பது ஆண்டு களில் ஆங்கிலத்தில் வரையப்பட்ட பல்லாயிரக்கணக்கான கதைகளில் மிகச் சிறந்தவை என மதிக்கத்தக்கவை பத் துக்கு மேல் இல்லை என்றார்.

பேரி பெயின் என்பாரும், ஹென்றி ஹட்சன் என் பாரும் ஆங்கிலச் சிறுகதைகளின் இலக்கணம் எனச் சில பகர்ந்துள்ளார்கள். அவை நம்மாலும் அறியத்தக்கவை ஆகும்.

தமிழுக்குச் சிறுகதை இலக்கிய யாப்பு ஒரு புதுமுறை என நாம் அறிகிறோம் ஆதலாலும், தமிழ்ச் சிறுகதைக் கெனத் தனியான இலக்கணம் இல்லையாதலாலும், ஆங் கிலச் சிறுகதைகளை அடியொற்றியே நம் நாட்டு மரபிற்கு ஏற்பத் தமிழ்நாட்டுச் சிறுகதைகள் அமைக்கப்படுகின்றன ஆதலாலும், சிறுகதை இலக்கணத்தைப்பற்றி ஆங்கில அறிஞர்கள் கருத்து யாது என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் தகும்.

முதலாவதாகச் சிறுகதைகள் எல்லாம் கதைகளா யினும், சில இலக்கணங்களுக்குப் பொருந்தாவிட்டால் அவை சிறுகதைகள் ஆதல் இல்லை என்று அறிஞர் கருது கின்றனர். எல்லாச் சிறுகதைகளும் கதைகளாயினும், எல்லாக் கதைகளும் சிறுகதைகள் ஆகமாட்டா. சிறிய அளவினவாகிய கதைகளே சிறுகதைகள் எனச் சொல்லத் தக்க ஓர் அம்சத்தைப் பெறுகின்றன. அளவு ஒன்றே சிறுகதைக்கு இலக்கணம் அன்றாயினும், அளவும் ஓர் இலக்கணம். இரண்டாயிரம் சொற்கள் முதல் மூவாயிரம் சொற்கள்வரை அமைந்த எல்லையில் சிறுகதைகள் எழுதப் படவேண்டும் என்பது அறிஞர் சிலர் நம்பிக்கை. கால் மணி நேரத்திலோ, அரைமணி நேரத்திலோ ஒரு மூச்சிற் படித்து முடித்துவிடக் கூடியதாகச் சிறுகதை இருத்தல் வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இரண்டாயிரம் சொற்களில் அல்லது மூவா யிரம் சொற்களில் அமைந்துவிடுவதால் ஒரு கதை "சிறு

கதை” ஆகிவிடாது; அரைமணி நேரத்திற்குள்ளாகப் படித்து முடித்துவிடக்கூடிய நிலையில் இருப்பதால் மாத்திரம் ஒரு கதை “சிறுகதை” ஆகிவிடாது; ஐந்து அல்லது ஆறு பக்கத்தில் ஒரு கதை அமைந்துவிட்டால் மாத்திரம் “சிறுகதை” ஆகிவிடாது. கதையில் வருகின்ற பாத்திரங்கள் சில சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள், எவ்வாறு பேசுகிறார்கள், எத்தகைய குண இயல்புகள் உடையவர்களாகக் காட்சி அளிக்கிறார்கள் என்பது சிறப்பாகக் கவனிக்கப்படும். அப்பாத்திரங்கள் உயிருள்ள பாத்திரங்கள் போலவே அடிப்படையில் காட்சியளித்தல் வேண்டும். எலும்பொடும், தோலொடும், தசையொடும், உயிரொடும் கூடி வாழ்கின்ற மக்களைப் பற்றிக் கதை பேசுகிறது என்ற உணர்ச்சி உண்டாகும்படிக் கவர்ச்சியோடும் விறுவிறுப்போடும் எழுதப்படும் “சிறுகதை” சிறந்ததாக மதிக்கப்படும்.

ஒரு பாத்திரத்தின் முழு இயல்புகளை எல்லாம் ஒரு சிறுகதையில் அமைத்துக் காட்டிவிட வேண்டும் என்பது கருத்தாகமாட்டாது; ஒரு பாத்திரத்தின் முழு வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டவேண்டும் என்பது சிறுகதையின் நோக்கமாக மாட்டாது. ஒருவருடைய வாழ்க்கையில் ஒரு கூற்றினைப்பற்றியோ ஒருவருடைய பல இயல்புகளில் ஏதேனும் ஒன்றைப்பற்றியோ எடுத்துச் சிறப்பாகக் காட்டுவதுதான் சிறுகதையின் நோக்கமாய் இருத்தல் வேண்டும்.

ஓவியம் வரைகின்ற ஒருவன் எட்டுநாள், பத்துநாள், நூறுநாள் ஓர் ஓவியத்தை அழகுற வண்ணங்களால் தீட்டுதல் கூடும். அதனைப் போன்றது நாவல் அல்லது புதினம். சிறுசிறு கீறல்கள் சிலவற்றால் ஒருவருடைய முகத்தின் சிறப்பு அம்சங்களை விளக்கிக் காட்டும் நோக்கத்தோடு கையேட்டு ஓவியம் வரைகின்ற ஒருவனுடைய நிலையிற் சிறுகதை ஆசிரியன் உள்ளான். பொருள் நிறைந்த, திட்பநுட்பம் வாய்ந்த சொற்களை ஆளுவதால் ஒருவர் ஒரு பாத்திரத்தின் முழுத் தோற்றத்தை நம் கண் எதிரே

கொண்டுவந்து நிறுத்துதல் இயலும். பற்பல வாக்கியங்களால் பத்தி பத்தியாகப் பாத்திரங்களை வருணிக்க வேண்டுவது சிறுகதையில் அவசியமில்லை. ஊர்களைப்பற்றியோ இயற்கைக் காட்சிகளைப்பற்றியோ சிறுகதையில் நிரம்ப வருணித்துக் கொண்டிருப்பது அவசியமில்லை. சூழ்நிலை இன்னது என்று காட்டுதற்கு வேண்டிய அளவு இவ் வருணனை இருந்துவிடுதல் போதுமானது. புதினங்களில் ஒருவரைப்பற்றியோ ஓர் இடத்தைப் பற்றியோ ஒருவர் வருணிக்கிறபொழுது கூறியதைக் கூறினும் குற்றமாக மாட்டாது. சிறுகதையில் கூறியதைக் கூறின் குற்ற மெனவே மதிக்கப்படும்.

புதினங்களில் பல பாத்திரங்கள் வருணிக்கப்படுவார்கள்; ஒருவரே பல்வேறு வகைப்பட்டவராகவும் காட்டப்படுவார். ஆனால், சிறுகதைகளில் சில ஆட்களே ஒரு சூழ்நிலையில் எவ்வாறு பழகுகிறார்கள், எவ்வாறு பேசுகிறார்கள் என்பது காட்டப்படும்.

சிறுகதை எழுதுதல் என்பது நுண்கலையாகவே மேலை நாடுகளில் மதிக்கப்படுகிறது. அதை எழுதுபவர்களுக்கு ஓய்வும், பொறுமையும், அமைதியும், திறமையும் வேண்டும். அதை எழுதுபவர்கள் நல்ல அனுபவமுடையவர்களாக இருக்கவேண்டும் என்று சொல்வதன் கருத்து அவர்களுக்கு நேரில் தெரியாத செய்திகளைப்பற்றியோ, தொழில் துறைகளைப்பற்றியோ, மக்கள் நிலையைப் பற்றியோ வருணித்தல் எளிதாக இருக்கமாட்டாது என்ற கருத்தினலாகும். தேயிலைத் தோட்டத் தொழிலாளருடைய வாழ்க்கை நிலையைப்பற்றி எழுதுவதாய் இருந்தால், அத்தோட்ட மக்களிடையே சிறுகதை ஆசிரியர் பலநாள் தங்கி அவர்கள் வாழும் முறையை அறிந்துகொள்ளுதல் நல்லதாகும். அதைப்போலவே ஒவ்வொரு திறத்தார் பற்றியும் ஒவ்வொரு ஊரார்பற்றியும் சிறுகதை ஆசிரியர் அறிதல்வேண்டும். இரஷியாவிலும், சீன தேசத்திலும் உள்ள எழுத்தாளர்கள் குறிபிட்ட ஒரு தொழில் துறையில்

வாழ்கின்ற மக்களைப்பற்றிக் கவியோ, கதையோ, கட்டுரையோ எழுத விரும்பினால், நேரில் அவர்கள் அங்குப் போய்த் தங்கிக் கண்டறிதற்கு வேண்டிய வசதிகளையும், வாய்ப்புக்களையும் அந்த நாட்டு அரசாங்கங்கள் செய்து தருகின்றன. அவ்வாறே நம்நாட்டிலும் நேரனுபவம் பெற விழைகின்ற எழுத்தாளர்களுக்கு உதவிகள் செய்துதர அரசாங்கம் முன்வருதல் வேண்டும்.

சிறுகதையின் நடை எளிதாகவும் தெளிவாகவும், பாத்திரங்கள் இயல்பாகப் பேசுவதுபோலவும் இருத்தல் வேண்டும். ஆயினும், ஒவ்வொரு பாத்திரமும் பேசுமாறுபோலவே கட்டாயம் அமைக்கவேண்டும் என்பது கருத்தாகமாட்டாது. பாத்திரத்தின் பேச்சுக்களை மனத்தில் உட்கொண்டு அவற்றைப் புதுப்பித்துப் பதிப்பிக்கவும் செய்யலாம். பாத்திரத்தின் பேச்சுநிலையிலிருந்து மாறுபடாமலே எழுத்திற்கு எழுத்து, சொல்லிற்குச் சொல் ஒத்தவாறே சிறுகதை நடை அமைக்க வேண்டும் என்பதில்லை. சிலவேளைகளில், உரையாடல்களில் வரும் நடை பாத்திரத்தின் உண்மைப் பேச்சு நிலையினின்று மாறுபட்டாலும், அந்த மாறுபாடு தோன்றுதவாறு பேச்சுகளைச் சிறிது கூட்டியோ திருத்தியோ மாற்றியோ அமைப்பது தவறு அன்று. உதாரணமாக, குடியானவர் ஒருவருடைய பேச்சு இவ்வாறு இருக்கும் என்றவாறு கோடி காட்டிவிட்டு, மற்ற இடங்களில் அவர் பேச்சை நல்ல முறையில் மாற்றி அமைத்தல் தக்கதே ஆம்.

சிறுகதையிற் சம்பாஷணை இருப்பது விரும்பத் தக்கது என்றாலும், இருக்கவேண்டும் என்பது கட்டாயமன்று. சில சிறுகதைகளிற் சிறிதளவு உரையாடல் இருக்கும்; சில அறவே உரையாடல் இன்றியும் நிகழ்வதுண்டு; சில சிறுகதைகள் முழுதும் உரையாடலாகவே அமைவதும் உண்டு. இம்முறையில் எதனையும் பின்பற்றலாம்.

சிறுகதையின் முடிவு அமங்களமாக இருப்பதுதான் கலைபழுத்து தருவதாக இருக்குமென்ற தப்பான கருத்

தொன்று சிறுகதை ஆசிரியர் சிலரிடத்தில் உலவிக்கொண்டிருக்கிறது. இது அடிப்படையில் தவறு. ஒரு சிறுகதையின் முடிவு துன்பமாகவோ இன்பமாகவோ அமைந்து விடுகின்ற காரணத்தால் மாத்திரம், அக்கதை கலையழகு உடையதாகிவிடாது. கலையழகிற்கு வேறுபல காரணங்கள் உண்டு என்பதைச் சிறுகதை எழுத்தாளர்களும் வாசகர்களும் நினைத்தல் நல்லது.

சிறுகதை ஆசிரியர்கள் நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் பொழுது கதைத் தலைவனே தலைவியோ தானே பேசுவது போல அமைக்கலாம். அன்றி, கதை ஆசிரியர் எழுதுவது போலப் படர்க்கையில் வைத்து அமைக்கலாம். நாட்குறிப்புக்கள் வழியாகவோ, கடிதங்கள் வழியாகவோ ஒன்றன்பின் ஒன்றாகச் செய்திகள் வெளிப்படுமாறு செய்யலாம். இம்முறைகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்து கொள்ளச் சிறுகதை எழுத்தாளர்களுக்கு உரிமையுண்டு.

ஒரு வீட்டில் சமைக்கத் தெரிந்தவர் பலர் இருந்தாலும், எல்லாரும் வைக்கும்ரசம் ரசமாகி விடாது. யாரோ ஒருவர் வைக்கும் ரசம்தான் மணமுள்ளதாகவும் சுவையுள்ளதாகவும் அமைகிறது. அதனையே ரசம் என்கிறார்கள். ஓர் ஊரிற் பல உணவு விடுதிகள் இருந்தாலும், ஓர் உணவு விடுதிதான் ரசத்திற்குப் பேர்போனதாக இருக்கிறது. அதைப்போலச் சிலர் எழுதும் சிறுகதைகள்தாம் உண்மையிற் சிறுகதைகள் ஆகின்றன. ரசம் வைக்கிறவர்கள் எல்லாம் உப்பு, மிளகு, புளி, மிளகாய், காயம் போன்றவற்றைக் கையாளுகிறார்கள். என்றாலும், சிலர் வைப்பதுதான் ரசமாக இருக்கிறது. அதைப்போல, எழுதுவோர் எல்லாம் ஆளும் திறத்தினால், ஆளும் வகையினால் அவர்களுடைய கதைகள் "சிறுகதைகள்" ஆகின்றன; மற்றவர்களுடையவை அவ்வாறு அமைதலில்லை.

பொதுவாக, ரசம் ஒரு மணமும் சுவையும் உடையதாக இருக்கும் என எதிர்பார்ப்பது இயல்பு. எனினும், ஒரே ரசம் ஒவ்வொருவரது சுவைக்கும் பான்மைக்கேற்ப வேறு

படுதலைப்போல, ஒரே சிறுகதை ஒருவர்க்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும், பிறர்க்கு மகிழ்ச்சி நல்காததாகவும் இருத்தல் கூடும். பொது இலக்கணங்கள் சிலவற்றைத் தழுவியே ஒரு சிறுகதை இயற்றப்பட்டிருந்தாலும், அதனைப் படித்துப் பார்ப்போருடைய திறமைக்கும் இயல்புக்கும் சுவைமைக்கும் ஏற்ப அது வேறுபடும். உலகத்தில் உள்ள தலைசிறந்த சிறுகதைகளுக்கு நிகர்ப்ப வைத்து எண்ணத்தக்க நிலையில், ஆண்டுதோறும் பத்து அல்லது பதினைந்து சிறுகதைகள் தமிழில் வெளியாகலாம். அன்றி, பத்து அல்லது பன்னிரண்டு தமிழ் எழுத்தாளர்களுடைய சிறுகதைகள் தலைசிறந்த இடம்பெறுதல் கூடும். பத்து, பன்னிரண்டு என்ற எண்ணிக்கை ஐம்பது அல்லது நூறு என்ற கருத்தைத் தரும் ஒரு குறியீடே தவிர, பத்து அல்லது பன்னிரண்டு என்ற எண்ணிக்கையையே கூறுவதன்று. உறுதியாகப் பத்து பன்னிரண்டு கதைகள் தேறும் என்று ஒருவர் சொன்னால், வேறு ஒருவர் நூறு அல்லது நூற்றைம்பது தேறும் என்று சொல்லுதல்கூடும். தலைசிறந்த "சிறுகதைகள்" இன்ன என முடிவுசெய்தற்குரிய அளவுகோல்கள், தராசுத்தட்டுகள், உரைகற்கள் இன்னும் நம் மொழியில் அமையவில்லை. உள்ள அளவுகோல் ஒருவருடைய திறத்திற்கேற்ப மாறுகின்றது. அதனால்தான், சில வேளைகளில் ஒரு பத்திரிக்கையில் தள்ளப்படுகின்ற சிறுகதை இன்னொரு பத்திரிகையில் விரும்பி ஏற்கப்படுகின்றது. அதனால்தான், போட்டி நடுவர்களாக நியமிக்கப்படுபவர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிகழ்கின்றன. அவை காரணமாக, பரிசு பெறவேண்டிய நல்ல "சிறுகதை" சில வேளைகளிற் பரிசின் எல்லையை எட்டிப் பாராமலேயே நின்றுவிடுகிறது.

பத்திரிகைகள் நம் நாட்டிற் கதைகளின்கண் மக்களது ஆர்வத்தை நிரம்ப எழுப்பி வளர்த்திருக்கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. பத்திரிகைகள் வாயிலாகச் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் தமிழில் வெளியாகி உள்ள சிறுகதைகளின் எண்ணிக்கை ஐம்பதினாயிரம் இருக்

கலாம். ஆனால் சரியான இலக்கணப்படி அமைந்த சிறு கதைகள் இந்த அளவுதான் வெளியாகி இருக்கின்றன என்ற முடிவிற்கு வரவேண்டியவர்கள் வாசகர்களே ஆவார்கள்.

பத்திரிகைகளில் வெளியாகும் சிறுகதைகள் இருபது பக்கம்வரை செல்லுதல் என்பதோ, ஓர் இதழிலே முடிவு பெறாமல் மறு இதழிலே தொடருதல் என்பதோ பொருந் தாது என்பது என்னுடைய கருத்து. இதைப் போன்ற கருத்துடைய வாசகர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை அறிவேன். அதனால், நான் கூற விழைவது என்ன என் றால், சிறுகதையின் பேரெல்லையை ஐந்து அல்லது ஆறு பக்கத்திற்கு உட்பட்டதாக அமைத்துக் கொள்ளுதல் தக்கது என்பது. சிறுகதைப் போட்டிகள் நடத்துகின்ற பத்திரிகைகள் ஐந்து அல்லது ஆறு பக்கத்திற்கு மிகாமற் சிறுகதைகள் இருக்கவேண்டுமென்று விதிப்பது அல்லது இரண்டாயிரம், மூவாயிரம் சொற்களுக்கு மேற்படாமல் அமையவேண்டுமென்று விதிப்பது பொருத்தமுடைத்து என்று நம்புகின்றேன். அவ்வாறே வாசகர்களும் இந்த எல்லைக்குள் அமைகின்ற சிறுகதைகள் நல்லனவாக அமைந்தாற் போதும் என்ற கருத்துக்கொண்டவர்களாய், நீளமான கதைகளை எதிர்பார்க்காதவர்களாய் இருக்கும்படி தம்மைத் தாமே பழக்கிக் கொள்ளுதல் விரும்பத்தக்கது. அவ்வாறே சிறுகதை ஆசிரியர்களும் நீளமாக எழுதவேண் டும் என்ற கருத்தினை விட்டு, தாம் தாம் எழுதிய கதை களை அச்சிற்கு அனுப்புமுன் ஒரு முறைக்கு மூன்றுமுறை படித்துப்பார்த்து, எந்தெந்தப் பகுதிகளை எந்தெந்த வாக் கியங்களை, எந்தெந்தச் சொற்களைத் திட்பம் காரணமாக வும் செறிவு காரணமாகவும் நீக்கிவிடலாம் என்று முடிவு செய்ய அவற்றைத் தவிர்த்துவிடுதல் தக்கது என மதிக் கிறேன்.

இவ்வாறு பத்திரிகை ஆசிரியர்களும், வாசகர்களும் சிறுகதை ஆசிரியர்களும் ஒத்துழைப்பார்களானல், தமிழ்ச்

"சிறுகதை" நல்ல வளர்ச்சி அடையும் என்பதில் ஐயம் இல்லை. கதையெழுதும் ஆற்றல் படைத்த அருந்திறன் மக்கள் நம் நாட்டில் நம் மொழியில் நிரம்ப உண்டு. அவர்கள் வழியாக ஒவ்வோர் ஆண்டிலும் நூறு நல்ல இனிய மேலான சிறுகதைகள் வெளிவரும் என்றே எதிர்பார்க்கின்றேன். எனக்குச் "சிறுகதை" எழுதும் ஆற்றல் இல்லை என்றாலும், எது நல்ல சிறுகதை என்று அறிய மாத்திரம் தெரியும். இது ரசம் வைக்கத் தெரியாத ஒருவன் ரசம் புளிக்கிறது, ரசம் உப்பாயிருக்கிறது, ரசம் இனிமையாக இருக்கிறது அல்லது ரசம் பக்குவமாக அமைந்திருக்கிறது என்று சொல்வதை ஒக்கும்.

தமிழிற் சிறுகதை வளர்ச்சிக்காக உழைக்கும் நண்பர்கள் அனைவருக்கும் என் வாழ்த்தும் பாராட்டுதலும் உரியனவாகுக.

# மொழிக்கலை

மொழிகள் தாமாக வளர்கின்றன, வளரும் இயல்புடையன. வாழ்வன, இறப்பன, பிறப்பன என்பது போன்ற நம்பிக்கை உடையவர்களாய் இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் மொழிநூற் கொள்கையுடையார் சிலர் இருந்தனர். ஆனால், அக்கருத்து தவறுபட்ட கருத்து என்பதே இக்காலத்திய நம்பிக்கை. மொழிகள் பிறத்தலும் வளர்தலும் இறத்தலும் உருவகங்களே ஒழிய உண்மையல்ல. மொழிகள் நாம் தோன்றுகின்றவாறு தோன்றுவனவல்ல; நாம் இறந்துபடுமாறும் இறப்பனவல்ல. மொழிகளில் ஒன்றினைத் தாய் எனக் கூறுவதும் உருவகமே. ஒரு திசையில் ஒரே விதமாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள் பல்வேறு திசைகளுக்குப் போய்ச் சிலச்சில திரிபுகளோடு பேசத் தலைப்பட்டார்களாக, மூலமொழி போன்றுள்ளதை மற்றவற்றின் "தாய்" என உருவகித்துக் கூறுவது மரபாயிற்று. அன்றியும் ஒருவர்க்கு ஒரு மொழி "தாய்மொழி" என்னும்போது, அம்மொழி அவருடைய தாயினுற் சிறுவயது முதல் பயிற்றுவிக்கப்பட்ட மொழி என்பதே பொருள்.

ஒருவர் தம்மளவில் பேசிக்கொள்ளுதல் பேச்சு என்றும், ஒருவர் பலரோடு தொடர்பு வைத்துக்கொள்ளப் பயன்படுவது மொழி என்றும் சொல்லப்படும். பேச்சு என்பது ஒவ்வொருவர்க்கும் சிறப்பாக அமைந்திருக்கும் ஒவ்வொரு சொற்றெகுதி; இது தனிப்பட்ட ஆளைப் பொறுத்தது. மொழியோ பலர்மாட்டும் அடங்கிக்கிடக்கும்

சொல்லியல்புகளையும் சொல்லாற்றல்களையும் உள்ளடக்கியது. அஃதாவது, ஒரு சமுதாயத்தார் அல்லது ஓர் இனத்தார் தம்முள்ளே வழங்கும் பல்வேறு சொல்வகைகளும், வழங்கக்கூடிய சொல்வகைகளும் எல்லாம் ஒன்றாக மதிக்கப்பட்டு மொழி எனப்படும். எனவே, மொழி என்பது பல பேரைப் பொருத்தது; சமுதாயத்தைப் பொருத்தது. மொழி சமுதாயத்தால் உண்டாக்கிக் கொள்ளப்பட்டது; வரையறை செய்யப்பட்டுள்ளது; சமுதாயத்தின் வாழ்விற் கேற்ப வளர்வது.

இப்பொழுது மொழி மக்களுடைய எண்ணத்தைப் பிறர்க்கு உணர்த்த உதவுவதாயிருந்தாலும், பிறருடைய நடக்கையைத் தொடக்கூடியதாக இருந்தாலும், பழங் காலத்திற் பிறர்க்கு எண்ணங்களை உணர்த்தவே ஏற் பட்டது என்று கூறுதல் பொருந்தாது. மனிதனுடைய பேச்சுக் கருவிகள் ஏதாவது ஒரு செயல் புரியாதிருத்தல் அரிது. மனிதனுடைய நாவும், பல்லும், இதழ்களும் வாளா இருக்கமாட்டாமையினால், அவற்றின் பயிற்சியால் ஒலிகள் பிறந்துவிட்டன. அவ்வாறு பிறந்த ஒலிகளுக்குப் பொருளை உண்டாக்கியவன் மனிதன்; பொருளைக் கற்பித்துக் கொண்டவன் மனிதன்; பொருளை வரையறை செய்துகொண்டவன் மனிதன். ஒரு மொழியில் "போ" என்ற ஒலிக்குப் "போக" என்று பொருளிருந்தால், இன்னொரு மொழியில் "வருக" என்று பொருள் இருத்தல் கூடும்; அல்லது "போ" என்பதற்குக் கட்டை, மரம், பசு போன்ற ஏதேனும் ஒரு பொருள் இருத்தல் கூடும். ஆங்கிலத்திற் செருப்பு என்று பொருள்படும் "சூ" என்ற ஒலிக்குப் பிரெஞ்சு மொழியில் கறிக்கோசு என்பது பொருள்.

மக்கள் கூட்டுறவினால், மக்களது இசைவினால் ஒவ்வோர் ஒலித் தொகுதியும் ஒவ்வொரு பொருள் பெறுவதாயிற்று. வாயினை வாளா வைத்திருக்க மாட்டாத குழந்தை வாயை ஏதாவது ஒருபக்கம் அசைத்து விடுதலைப் போல, ஏதாவது ஓர் ஒலியை எழுப்பிவிடுதலைப் போலப் பழங்கால மனிதன்

ஏவையோ சில ஒலிகளை ஒலித்து விட்டான். அவ்வாறு முதற்கண் எழுப்பப்பட்ட ஒலிகள் பொருள் உணர்த்த எழுந்தவையல்ல என்பது யெஸ்பர்சன் கொள்கை. கேட்டோரும் உடனே பொருள் உண்டாக்கிக் கொள்ளவும் இல்லை; பொருளை அறிந்து விடவும் இல்லை. இன்றுகூட குழந்தையைச் சூழ்ந்துகொண்டு தாயாரும் பிறமகளிரும் "என்னைப் பார், உன்னைப் பார்" என்றும், "என்னைப் பார்த்துச் சிரிக்கிறான் உன்னைப் பார்த்துச் சிரிக்கின்றான்" என்றும், "உன் அப்பா இப்பொழுது வருவார்" என்றும், பலவாறு தமக்குள் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனாலும், குழந்தை அறிவது ஒன்றும் இல்லை. கிளிகள், நாய்கள், பூனைகள் முதலிய விளையாட்டுப் பொருள்களோடு விளையாடுகின்ற மகளிரும் ஆடவரும் அப்பறவைகளோடும் விலங்குகளோடும் பேசுவது போலக் கொஞ்சிக் குலவிப் பேசுகிறார்கள். ஆயினும் அவை ஒன்றும் புரிந்துகொள்ளுதல் இல்லை. அவ்வாறேதான் பழங்கால மனிதர்களும், ஒன்றும் அறிந்துகொள்ளாத மக்களிடையே பேசி இருப்பார்கள். நாளடைவில்தான் பொருள் தோன்றியிருக்கும்.

மொழி என்பது பழக்கத்தினால் ஏற்படுவது. பல்வேறு ஒலிகள் ஒரு பொருளைக் குறிப்பதற்கு இருப்பவும், நாளடைவில் மக்கள் ஏதாவது ஓர் ஒலித்தொகுதியை, ஏதாவது ஒலியினைக் குறிப்பிட்ட ஒரு பொருளில் வழங்கத் தலைப்பட்டிருப்பார்கள். சொற்கள் ஒவ்வொரு பொருளுக்குரியவை என்பதற்குரிய காரணங்களைத் திட்டமாகக் கூறுதல் இயலாது. சொற்கள் தாந்தாம் குறிக்கும் பொருளினைக் குறிப்பதற்கு மக்களாற் பெரும்பாலும் ஏதேச்சாதிகாரமாக இடப்பட்ட குறியீடுகள் என்று கொள்ளுதலே பொருந்தும், சில சொற்களில் மாத்திரமே ஒலியும் பொருளும் ஒத்து இயைந்திருத்தல் கூடும். பல சொற்களில் இத்தகைய இயைபு காண்பது அரிது. "ழ்" ஆகிய ஒலி தமிழில் இனிமையை அல்லது அழகினைக் குறிக்கின்ற ஓர் ஒலி என்றும், அழகு, குழல், யாழ், தமிழ் அமிழ்து என்ற சொற்களில் அது காணப்படுகின்றது என்றும் கூறுவதாயின், அழுகை,

இழிவு, பாழ் முதலிய சொற்களில் வரும் ழகரம் அழகினையோ இனிமையையோ காட்டவில்லை ஆதலால், இக்கருத்து பொருந்தாது என்பதாகிவிடும். ழகரத்தைத் தன் விருப்பம் போல ஒருவன் ஒவ்வோர் இடத்து வழங்கிவிட்டான் என்பதுதான் முடிவாகும்.

சில மொழிகளில் ஒரு பொருளின் வேறுபாடுகள் பலவற்றைக் குறிப்பதற்குப் பல்வேறு சொற்கள் இருத்தல் இயலும். தமிழில் காரி, செகிலை, வெள்ளை முதலிய பல சொற்கள் மாடுகளின் நிறங்களை ஒட்டி எழுந்த பல்வேறு சொற்கள். அவைபோல அராபிய மொழியில் ஓடும் ஒட்டகங்களையும் வெள்ளை ஒட்டகங்களையும் பழுப்பு ஒட்டகங்களையும் குறிக்க வெவ்வேறு தனிச் சொற்கள் இருக்கின்றன. அராபிய பாலைவனத்தில் மக்கள் செயலாற்றுதற்கு ஒட்டகம் பெரிய உதவி செய்வது. அதனைக் குறிப்பிடுதற்கு ஏறத்தாழ இருபது சொற்கள் அம்மொழியில் இருப்பது வியப்பாகாது. குதிரையை முதலிற் கண்டிராத அமெரிக்க காட்டுமிராண்டி மக்கள் குதிரையைப் பெரும் நாயாகக் கண்டார்கள். அவர்கள் அறிந்த மிருகமாகிய நாய்போல வேகமாக ஓடுவதாலும், நாயைக் காட்டிலும் உயரமாக இருப்பதாலும் குதிரையைப் பெருநாய் என்றே அவர்கள் வழங்கினர். இவ்வாறு சில வேளைகளிற் கருத்தினைத் தெரிவிக்கத் தனிச்சொல் ஆக்கப்படாமல் தொகைச் சொல் உண்டாக்கப்படுவதும் உண்டு. வானவில்லிற் காணப்படும் பல்வேறு நிறங்களைக் குறிப்பதற்கு ஆங்கிலத்தில் ஐந்து அல்லது ஆறு நிறப்பெயர்கள் உள்ளன. (பர்ப்பிள், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு). ஆனால், பாசா என்ற லைபீரியா தேசத்து மொழியில் இரண்டே நிறப்பெயர்கள் தாம் உள்ளன. ஹூய், ஸிசா என்பன அவை. பல மொழிகளிற் கருமைக்கும் நீலத்திற்கும் இடையே வேறுபாடு காட்டக்கூடிய வகையில் தனிப் பெயர்கள் உண்டாகவில்லை; வெள்ளை நிறத்திற்கும் மஞ்சள் நிறத்திற்கும் இடையே வேறுபாட்டை உண்டாக்கக் கூடிய தனிப் பெயர்கள் எழவில்லை. எனினும், மொழிகள் மற்ற

மொழிகளிலுள்ள கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளு தற்குத் தொகைச் சொற்களை ஆக்கிக் கொண்டுவிடுகின்றனர்.

மனிதன் பயன்படுத்தும் பல கருவிகளில் மொழி யென்னுங் கருவி அவனாற் பெரிதும் பயன்படுத்தப்படுவ தொன்று. எனினும் அவன் அந்தக் கருவியைப் பயன் படுத்தும் வகையை அறிந்திருக்கிறானே ஒழிய, அக்கருவி யைப்பற்றிய அறிவு நிறைவு பெற்றான் இல்லை. கோடரி யைப் பயன்படுத்தும் விறகுவெட்டி அக்கருவியை ஆளு தற்கு அறிவானே ஒழிய, அது எவ்வாறு ஆக்கப்பட்டிருக் கிறது என்பதை அறிய முற்படுதல் இல்லை. அதைப்போன்ற நிலையில் மொழியை ஆளுகின்ற மக்கள் பலர் இருக்கின் றனர். கைத்தறி உண்டாக்கப்பட்டிருக்கும் வகையையும் அறிந்து, அதன் உள்ளமைப்புகளையும் அறிந்து அதனைப் பயன்படுத்தும் தொழிலர் சிலரைப்போல், மொழியாகிய கருவியின் பல்வேறு கூறுகளையும் அறிந்து அதனைப் பயன் படுத்துகின்ற மக்கள் சிலர் உண்டு. அவரைத்தாம் மொழிக் கலை வல்லுநர் அல்லது மொழி நூற் புலவர்கள் என்று கூறுவது வழக்கம்.

ஒவ்வொரு மொழியும் பலவகைகளில் மாறுதல்கள் அடைவது உண்டு. அம்மாறுதல்களைச் சில தலைப்புக்களின் கீழ் அடக்குதல் மரபு. அவற்றின் பெயர் ஒலியியல் வகை, சொல்லியல்வகை, பொருளியல்வகை, ஒப்புமைவகை, கடன் வாங்கும் வகை என்பன. ஒலியியல்வகை இரண்டு உட் பிரிவுகள் உடையது. ஒரு மொழியின்கண் அமைந்துள்ள ஒலிகளை விளக்குவது ஒலியியல்வகை ஆராய்ச்சி எனப்படும். காட்டாக, தமிழில் உள்ள க், ச், ட், என்பன எங்கெங்கே பிறக்கின்றன என்று வரையறை செய்து காட்டுதல் போன்றவை ஒலியியல் ஆராய்ச்சியில் அடங்கும். க் அடி நாவினால் அடியண்ணத்தைத் தொட உண்டாகின்றது என்பதுபோலச் சொல்வது, ஒலியியல் பற்றிய செய்தி யாகும். ஆனால், ஒலிய இயல்வகை ஆராய்ச்சி என்ற மற்றோர் உட்பிரிவு இதனின் வேறுபட்டது. எல்லா மொழி

கட்கும் உள்ள பொதுவான ஒலிவிதங்களைப் பேசுதல் "ஒலியியல் ஆராய்ச்சி" என்றும், குறிப்பிட்ட ஒரு மொழி ஒலிகளை எவ்வாறு பயன்படுத்திக் கொண்டுள்ளது என்னும் ஆராய்ச்சி "ஒலியவகை" என்றும் கூறப்படும். காட்டாக, க என்பது வெவ்வேறு விதமாகத் தமிழில் உச்சரிக்கப்படுகின்றது. கட்டு என்ற இடத்தில் வருகிற "க"வைப் போலவே, அகம் எனும் பொழுது உச்சரிக்கப்படுதல் இல்லை, அஃகம், அஹம், என்றும் அஃம் என்றும் வெவ்வேறு முறையில் உச்சரிக்கப்படலாம். இவை பொருள் வேறுபாட்டினை உண்டாக்குவன அல்ல. அஃம் என்ருல் வீடு என்றும், அகம் என்ருல் மனைவி என்றும், அஃகம் என்ருல் குழந்தை என்றும் வெவ்வேறு பொருள் இருப்பதாக வைத்துக் கொண்டால், நம்முடைய மொழியில் ஹ, ஃ க, க போன்ற ஒலிகள் எழுத்தில் அவசியமாக எழுதிக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளன என்று ஆகும். அவ்வாறு இருந்தால் அவை ஒலியவகை வேறுபாடு உடையன எனப்படும். அவ்வாறு இல்லை என்பது வெளிப்படை எனவே "க" வை வெவ்வேறு விதமாக உச்சரிப்பதால் ஒலியியல் வகை வேறுபாடு (ஹ, ஃ க, க.) தமிழில் உண்டு. ஆனாலும், ஒலியவகை வேறுபாடு இல்லை என்பது கருத்து.

சொல்லியல் வகை என்பது ஒரு சொல்லின் அடிவேர் பற்றிய ஆராய்ச்சி ஆகும். வாழ்கிருன் என்ற சொல்லில் "வாழ்" என்னும் அடிவேர் இருக்கிறது என்றும், கற்ருர்கள் என்பதில் "கல்" என்ற அடிவேர் இருக்கிறது என்றும் இவைபோலப் பிற சொற்களில் பிற அடிவேர்கள் இருக்கின்றன என்றும் இவ்வகை ஆராய்ச்சியிற் காட்டப்படும்.

பொருளியல் வகை என்பது ஒரு மொழியின்கண் உள்ள சொற்கள் காலந்தோறும் வெவ்வேறு பொருளில் வேறுபட்டு இப்பொழுது எவ்வெந்நிலைகள் அடைந்திருக்கின்றன என்பதைக் காட்டுவதாகும். தொல்காப்பியர் காலத்தில், அதாவது இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் "பாட்டி" என்ற சொல் பெண்நாயினையே குறிக்க

வழங்கிற்று. இப்பொழுது "பாட்டி" என்பதைத் தந்தையின் தாயார் அல்லது தாயின் தாயார் என்ற பொருளில் வழங்குகிறோம். "நாற்றம்" என்ற சொல் முன்னர்ப் பொதுவாக மணத்தைக் காட்டிற்று. இப்பொழுது அது கெட்ட மணத்தைக் குறிப்பதாக உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு மொழியிலும் சொற்கள் பொருளில் உயர்ந்தோ தாழ்ந்தோ மாறுதல் அடைதல் உண்டு. பொருளில் உயர்வு பெறுதல் உயர்பொருள் நியமம் எனப்படும். பொருளில் தாழ்வு பெறுதல் இழிபொருள் நியமம் எனப்படும். அவ்வாறே "களி" என்ற சொல் கள் குடித்தலை முற்காலத்திற் காட்டியது. இப்பொழுது மகிழ்ச்சி என்னும் உயர் பொருளில் களி என்பது வழங்குகிறது. சில வேளைகளில் ஏதாவது ஓர் இனத்திற்கு உரியபொதுச் சொல்லாக வழங்குவதொன்று குறிப்பிட்ட ஒரு பொருளையே தெரிவிக்குஞ் சிறப்புச் சொல்லாக மாறிவிடுதல் உண்டு. "நெய்" என்பது நெய்ப்பு அல்லது பசை உடைய எந்தப் பொருளையும் பொதுவாகக் குறித்துக் கொண்டிருந்தது; இப்பொழுது வெண்ணெயினின்று எடுக்கப்படும் ஒன்றை மாத்திரம் குறிக்கின்றது. இவ்வாறு வழங்குஞ் சொற்களைச் சிறப்புப் படை நியமத்தின் காரணமாக எழுந்தன என்போம். பொதுப்படை நியமம் என்று ஒன்று உண்டு. அதன்படி ஏதாவது ஒரு பொருளையே குறிக்க வழங்கிய சொல் நாளடைவிற் பொருளில் விரிந்து கொடுத்து ஓரினத்தையே தெரிவிப்பதாக அமைதல் உண்டு, எண்ணெய் என்ற சொல் ஒரு காலத்தில் எள்ளினின்று எடுக்கப்பட்ட நெய்யையே குறித்தது. இப்பொழுதோ அவ்வாறன்றி நெய்ப்புடைய பொதுப் பொருளில் வழங்குகிறது. அதனால், அதை ஆமணக்கு எண்ணெய், தேங்காய் எண்ணெய் என்ற இடங்களிற் கூட்டி வழங்குகிறோம். ஆமணக்கு எண்ணெயிலும், தேங்காய் எண்ணெயிலும் எள் என்பது எள்ளளவு கூட கிடையாது. எண்ணெய் என்பது எள்நெய் என்ற சிறப்புப் பொருளைத் தராமல் நெய் என்ற வழக்குக்கூட சில இடங்களில் தோன்றி விட்டது. இவ்வாறு உண்டாகும் சொற்கள்

எல்லாம் பொதுப்படை நியமம் என்பதனுள் அடங்கும். அன்றியும், சில வேளைகளில் மக்கள் உடம்பின் உறுப்புகள் சிலவற்றை ஒன்றினுக்கொன்ருக வழங்குதலை நாம் காண்டல் இயலும். அவ்வாறு நெற்றி என்பதற்குப் பதில் தலை என்றோ, கொங்கை என்பதற்குப் பதில் மார்பு என்றோ அடி என்பதற்குப் பதில் கால் என்றோ வழங்குவோம். அவ் விடங்களில் இடம்பெயர்தல் என்ற நியமம் உள்ளதாகக் கருதுவோம். இவைபோல்வன எல்லாம் பொருளியல்வகை பற்றிய ஆராய்ச்சிகளாகும்.

ஒப்புமைவகை என்பது மக்கள் ஏதாவது அறிந்த ஒரு விதத்தின் கீழே ஏனைய விதங்களையும் ஒப்புமை காரண மாகக் கொண்டுவந்து சேர்க்க முயலுதல் என்ற காரணத் தால் ஏற்படுவது. ஒருவன், ஒருத்தி என்ற சொற்கள் தாம் இலக்கண மரபொடு ஒட்டியன என்று கூறப்படுகின்றன. ஆயினும், ஒரு என்ற பகுதியின் அடியும் அன் என்ற விகுதியுஞ் சேர்ந்து ஒருவன் ஆதல்போல, ஒரு என்ற பகுதி யின் அடியும் அள் என்ற விகுதியுஞ் சேர்ந்து ஒருவள் என்றும் வழங்குவது பிழையில்லை என்பது புலப்படும். அதனுல், ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளத்தில் ஒருவன் என்பதற்கு ஏற்பப் பெண்பாலில் ஒருவள் என்ற சொல் தோன்றிவிடுகிறது. ஒருத்தி என்பதுதான் ஒப்புக் கொள்ளக் கூடியது என்பது வரையறை செய்யப்பட்டாலும் ஒப்புமை வகைக் காரணமாக மக்கள் ஒருவள் என்பதையும் உண்டாக்கிவிடுகிருர்கள். இவ்வாறு உண்டாக்கப்படுபவை ஒப்பியல்வகைக் காரணமாக ஏற்படும் மாறுதல்கள் எனச் சொல்லப்படும். பெறுதி என்ருல் இலாபம் என்றும், இறுதி என்ருல் நஷ்டம் என்றும் பொருள்படும் சொற்கள் பழங் காலத்தில் பெறு என்பதன் அடியாகவும், இறு என்பதன் அடியாகவும் பிறந்தன. வானோர் எனப்படுபவர்கள் வானுல கத்தில் உள்ளவர்கள் என்ற பொருளில் தோன்ற அதற்கு எதிரே ஈனோர் என்ற சொல் இவ்விடத்தில் உள்ளவர்கள் என்ற பொருளிற் கிளைத்து விட்டது. இவ்வாறு தோன்றுஞ்

சொற்கள் ஒப்புமை காரணமாகத் தோன்றுபவை எனப்படும்.

இவையல்லாமல், சில வேளைகளில் ஒருவர் ஒரு மொழியினின்றோ, வேறு பல மொழிகளில் இருந்தோ கடன் வாங்குதல் உண்டு. மொழிக்கலை ஆராய்ச்சிக்கு இவ்வறிவும் வேண்டும். அதாவது எவ்வெச் சொற்கள் குறிப்பிட்ட மொழியின்கண் தொன்றுதொட்டுத் தோன்றியுள்ளன வென்றும், எவ்வெச் சொற்கள் பிற பிற மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டுள்ளன என்றும் ஒருவர் அறிதல் வேண்டும். மேலே குறிப்பிட்ட ஒலியியல்வகை, ஒலியவகை, பொருளியல்வகை, ஒப்பியல்வகை ஆகிய இவற்றை ஒருவர் தமது மொழியறிவு கொண்டே விளக்கிவிடலாம். ஆனால் இன்னின்ன சொற்கள் பிறமொழியிலிருந்து கடன் வாங்கப் பட்டன என்பதை அறியப் பிறமொழியறிவும் வேண்டும்.

மொழிகள் மேலே கூறிய ஐந்து வகைகளில் மாறுதல் அடைகின்றன என்பதை மனத்திற்கொண்டு மொழியாராய்ச்சிகள் செய்யப்படுவதால் மொழிக்கலை வளர்ந்து வருகிறது.

# சொல் ஆக்கம்

சொல் ஆக்கம் என்பது சொற்களை உண்டாக்குகின்ற முறையைப் பற்றிய செய்தி. சொற்கள் பழங்காலத்தில் புதுவன புதுவனவாகப் படைக்கப்பட்டு இருக்கலாம். ஆனால், இந்த இந்தச் சொல்லை இன்னவர் இன்னவர்தாம் முதலில் உண்டாக்குகிறார் என்று கூறுதல் இயலாது. இந்த இந்தச் சொல் நாம் அறிந்தவரையில் இவ்விவ் விலக்கியத்தில் முதன்முதலாக வழங்கி இருக்கிறது என்பதை ஒருவேளை ஆராய்ச்சியினால் கூறுதல் இயலும். சொற்கள் பலகாலம் பேச்சு வழக்கில் இருந்து பிறகுதான் எழுத்து வழக்கு அடைந்திருக்கும். பின்னரே இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் வழங்கப்பட்டு இருக்கும். ஒவ்வொரு கருத்தினைத் தெரிவிப்பதற்கு ஒவ்வொரு மகனும் மகளும் பலவாறு முயன்று ஏதாவது ஓசை எழுப்பிய அடிப்படையில் சொற்கள் எழுந்திருத்தல் வேண்டும். தனி அசையோ பல அசைகளோ உடைய சொற்களை ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு பொருளில் வழங்க, நாளடைவில் பலர் தம்முள்ளே ஏற்பட்ட இயல்பான இயைபினால் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளைக் குறிப்பதாக வரையறை செய்யப்பட்டு இன்றைய நிலை அடைந்திருக்கிறது. அதனால், "சொல் ஆக்கம்" என்றால், பழங்காலத்தில் சொற்கள் உண்டாக்கப்பட்டன, படைக்கப்பட்டன என்பது கருத்து.

சில சில வேளைகளில் குழந்தைகள் புதுப் புதுச் சொற்களை அமைத்தல் உண்டு, "பப்பப்" (Puff-Puff) என்று

சொல்லிக் குழந்தைகள் ரயில்வண்டியைச் சில வேளைகளிற் குறிப்பிட்டிருக்கின்றன. "பப்பப்" என்று ரயில் போவதாக அவர்கள் சொல்லுதல் இல்லை. "பப்பப்" என்பது ரயிலின் பெயராகி விட்டால், "பப்பப்" போகிறது, "பப்பப்பில் ஏறுவேன்" என்பதுபோல பேசுகின்ற குழந்தைகள் இங்கிலாந்தில் இருத்தலை அறிகிறோம். எங்கள் வீட்டுக் குழந்தை ஒருவன் பத்து ஆண்டுகளுக்கு முன்னுற் சென்னைக்கு முதன்முறை சென்றபொழுது, டிராம் வண்டியைப் பார்த்துவிட்டு அம்மா "பாதி ரயில் போகிறது" என்றான். "பாதி ரயில்" என்பது அவன் டிராம் வண்டிக்குக் கொடுத்த பெயர். ரயிலை அவன் முன்னாலேயே பார்த்து இருக்கிறான்; அதனோடு இதனை ஒப்பிட்டு நீளக் குறைவாக இருக்கிறதினாலேயே "பாதி ரயில்" என்று கூறிவிட்டான். இம்மாதிரி சொற்களைப் புதியனவாக அமைத்துக் கொள்ளக் கூடிய திறமை மனிதர் எல்லோரிடத்திலும் உண்டு. இன்னொரு குழந்தை திராட்சைப் பழத்திற்குத் தானாக ஒரு பெயர் இட்டு விட்டான். அதை முதலிற் கண்டவுடன் அவன் அதற்குக் கூறிய பெயர் "புளுப்புலாப் பழம்" என்பது. மற்ற பழங்களினின்று வேறுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் அவனைத் தூண்டிவிட "புளுபுலா" என்பதை அவன் வேறு எங்கேயோ கேட்டு இருக்க, இவ்விரண்டு சொற்களையும் சேர்த்து ஒரு புதுச்சொல்லை அவன் உண்டாக்கி விட்டான். இம்மாதிரி எழுகின்ற சொற்களைச் "சொல் ஆக்கம்" (Word-Coinage) என்று சொல்வதைக் காட்டிலும் "சொல் அமைப்பு" (Word-Building) என்று கூறுவது பொருந்தும்.

ஒரு பொருளைக் குறிப்பதற்கு என்று ஒரு மொழியில் உரிய சொல் இல்லை என்றால், நேரே அந்தப் பொருளுடைய மொழியினரிடமிருந்து அச்சொல்லை வேறு மொழிகள் கடன் வாங்கிக் கொண்டு விடுகின்றன. உதாரணமாக "டீ" என்ற சொல் அந்தப் பொருளோடு சீனத்தேசத்திலிருந்து பல தேசங்களுக்கும் பரவிவிட்டது. சாக்லெட் என்பது மெக்சிகோவிற்கு உரிய சொல். அந்தத் தின்பண்டத்தோடு

அச்சொல் வேறு பல நாடுகளுக்கும் பரவிவிட்டது. டொமட்டோ என்பதும் மெக்சிகோவில் தோன்றிய சொல். கொயினு (Quinine) என்பது தென் அமெரிக்கச் சொல்லும் பொருளும் ஆகும். அதைப் போல ஜிலேபி, லட்டு, ஜாங்கிரி, சர்பத் போன்ற சொற்கள் பர்சியன் மொழியிலிருந்து இங்கே தமிழில் வந்து வழங்குகின்றன. இவ்வாறு ஒரு மொழி தன்னுடைய குறைவுகளை நிறைத்துக் கொள்வதற்குப் பல வகைகளிலும் வாய்ப்புகள் இருக்கிற காரணத்தால், அது புதியனவாகச் சொற்களைப் படைக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. ஒரு மொழி சில வகைகளிற் குறையுடையதாய் இருந்தால் அதனிடத்தில் முன்னரே உள்ள பகுதிகளை வெவ்வேறு விதமாக மாற்றிக் கூட்டிச் சேர்த்துக் கொள்ளுகின்ற வகையினுலே புதுப்புதுச் சொற்களை அமைத்துக் கொண்டு விடுகிறது. காட்டாக, தமிழில் தல், அல், அம், ஐ, கை, வை முதலிய தொழிற்பெயர் விகுதிகள் இருக்கின்றன. நாடுதல், ஆடல், தூக்கம், விலை, நடக்கை, போர்வை போன்ற தொழிற்பெயர்கள் உண்டானதைப் போலப் புதுப்புதுத் தொழிற்பெயர்கள் அவற்றின் அடியாக நாம் எப்பொழுதும் அமைத்துக்கொள்ளுதல் இயலும். பண்புப் பெயர் விகுதிகளாக உள்ள மை, ஐ, சி, பு போன்ற இவற்றை ஒட்டி நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு ஆகிய சொற்களை அமைத்துக் கொள்ளுதல் இயலும். "அல்" விகுதியைச் சேர்த்து, வறுவல், துவையல், படையல், அவியல், நொறுவல், புரட்டல் முதலான எத்தனைச் சொற்கள் அமைக்கப்பட்டுள? அவ்வாறே நீர், கால், தீ ஆகிய இந்தப் பகுதிகளை வைத்துக்கொண்டு நீரகம் (Hydrogen), காலகம் (Ogygen), தீயகம் (Nitrogen) என்ற சொற்கள் அமைக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். "காரன்" என்ற ஒரு சொல் ஈற்றை வைத்துக்கொண்டு எத்தனை எத்தனைச் சொற்கள் தமிழில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்தக் 'காரன்' என்பது எவ்வாறு வந்தது என்பது விளங்கவில்லை. இருந்தாலும், காரன் என்பதற்குச் "செய்கிறவன்" என்ற பொருள் சமஸ்கிருத அடிப்படையிலிருந்து தமிழில்

வந்திருக்குமோ என்பது ஐயப்பாடு. சமஸ்கிருதத்தில் "கும்பகாரா" என்றால், கும்பத்தை அல்லது பானையைச் செய்கிறவன் என்பது பொருள். தையற்காரன், பால்காரன் எனுஞ் சொற்கள் ஒருவேளை தைத்தலைச் செய்கிறவன், பால் உண்டாக்குகிறவன் என்ற பொருளில் எழுந்திருத்தல் இயலும். ஆனால், மாட்டுக்காரன், சட்டைக்காரன், கடைக்காரி, பழக்காரி, தயிர்க்காரி என்ற இடங்களில், இவர்கள் மாட்டையோ, சட்டையையோ, பழத்தையோ உண்டாக்குபவர் அல்லர் என அறிகிறோம். மாட்டை விற்கிறவன், மாட்டை உடையவன், மாட்டுக்காரன் ஆகிவிடுகிறான். சட்டையை உடையவன் சட்டைக்காரன் ஆகிவிடுகிறான். சட்டை போட்டு இருக்கின்ற ஒரு பெண்மகள் சட்டைக்காரி ஆகிவிட்டாள். இவ்வாறெல்லாம் காரன், காரி, காரர் என்ற சொல் ஈற்றினாலே பலப்பல சொற்கள் புதியனவாக அமைக்கப்படுதலை அறிகிறோம். "குளறிபிகேஷன்" என்ற சொல்லில் பாதி தமிழ் பாதி ஆங்கிலம் இருக்கக் காண்கிறோம். குழப்பம் என்ற பொருளுடைய குளறல் என்னும் தமிழ்ச் சொல்லும் "பிகேஷன்" என்ற ஆங்கிலக் கூறும் சேர்ந்து குளறிபிகேஷன் என்பது புதுத் தேவைக்கேற்ப அமைக்கப்படுகிறது.

ஆர் என்ற விகுதி ஊரார், நாட்டார், பேரார் முதலிய பலப்பல சொற்களை அமைக்க உதவுவதை அறிகிறோம். அர் என்ற ஈறு சீனர், அமெரிக்கர் போன்ற பல்வேறு சொற்களை அமைக்க உதவுவதைக் காண்கிறோம். "அம்" ஈறு வள்ளுவம் என்பது போன்ற புதுச் சொற்களை அமைக்க உதவுகின்றது. வள்ளுவர் கொள்கையை விளக்க ஓர் அறிஞர் எழுதிய நூலினை "வள்ளுவம்" எனவே பெயரிட்டு எழுதியமை அறியப்படும். தகுதி வழக்கினால் சிலச்சில சொற்கள் சிலச்சில புதுப் பொருளில் வழங்கத் தலைப்பட்டு விடுகின்றன.

புதுப்புதுத் தேவைகளுக்கு ஏற்ப புதுப்புதுச் சொற்கள் மொழியில் அமைக்கப்பட்டு விடுகின்றன. இசை

அரங்கு மிடற்றிசை (வாய்ப்பாட்டு), நரம்பிசை (வயலின்), முழவிசை (மத்தளம்) ஆகிய சொற்கள் இப்பொழுது தமிழ் நாட்டிற் பெருவழக்கில் உள்ளன. பிரேரேபித்தல், ஆமோதித்தல் ஆகிய சொற்கள், முன்மொழிதல், பின்மொழிதல் என்றவகையில் வழங்குவதைக் காண்கிறோம். மின்சாரம், மின்விளக்குகள், கலைக்களஞ்சியம், கவிதைக் களஞ்சியம், கதைக் களஞ்சியம் முதலிய சொற்கள் வேண்டிய வேண்டிய அளவில் அமைக்கப்பட்டு விட்டன. ரேடியோ என்பதை வானொலி எனவும், பிரபாத் என்பதை இசைக்கதிர் எனவும், "லைட்மியூசிக்" (Light music) என்பதை "மெல்லிசை" எனவும் வழங்க நாம் கற்றுக்கொண்டு விட்டோம். மாதந்தோறும் அல்லது சில மாதங்களுக்கு ஒருமுறை வருகின்ற பத்திரிகைகளை "இதழ்" எனவும், "மலர்" எனவும் பெயரிட்டு வழங்கக் கற்றுக்கொண்டிருக்கிறோம்.

வரிகளில் விலங்குவரி, வருமானவரி, விளக்குவரி என்ற பெயர்கள் வழக்குக்கு வந்துவிட்டன. "காண்டிராக்ட்" (contract) என்பதை ஒப்பந்தம் என்றும், "டெண்டர்" என்பதை ஒப்பந்தப் புள்ளி என்றும், "கொட்டேசன்" (quotation) என்பதை விலைப்புள்ளி என்றும் சொல்லும் வகை அறிந்துவிட்டோம். "அஜண்டா" என்பது நிகழ்ச்சி நிரல், "மினிட்ஸ்" என்பது நிகழ்ச்சிக் குறிப்பு, ஜி. ஓ. என்பன அரசாங்க ஆணைகள், "எக்சிடிராக்ட்" (Extract) என்பது எடுகுறிப்பு, "காபி" (Copy) என்பது படி அல்லது பிரதி, ஜெனரல் மீட்டிங் என்பது இயல்புக் கூட்டம். "அர்ஜண்ட் மீட்டிங்" என்பது சிறப்புக் கூட்டம் என்றவாறெல்லாம் வழங்கத் தலைப்பட்டுவிட்டன., 'எஞ்சினியர்' பொறியர் எனப்படுகிறார். "இனிஷியல்" என்பது தலைப்பு எழுத்துக்கள் என்ற வகையில் வழங்குகிறது.

கலைத்துறையிலும் அதிர்வெண் (Frequency) முதல் அதிர்வு எண் (Fundamental frequency) இயற்கை அதிர்வெண் (Natural frequency) சுழற்சி அதிர்வெண் (Frequency

of rotation) போன்ற சொற்கள் நிறைய உண்டாகிவிட்டன. ரிலேடிவிட்டி (Relativity) என்பது கார்க்சி தத்துவம் என வழங்குகிறது. மின்கலம், மின் ஓட்டம், மின்விசிறி, மின் அமைப்பு, மின் அளவி, மின் அலகு என்று பல சொற்கள் அமைத்து விட்டோம். இவை Electric cell, current, fan, installation, meter, unit என்ற ஆங்கிலச் சொற்களுக்குப் பதில் அமைக்கப்பட்டுள்ளன. இவை போன்ற பல சொற்கள் தேசத்தில் கலைத்துறை எல்லாவற்றிலும் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

1939-இல் சென்னை மாகாணத்தில் தமிழ்ச் சங்கம் கலைச் சொற்கள் என்ற தலைப்பில் ஒரு நல்ல புத்தகத்தை வெளியிட்டது. சென்னை அரசாங்கம் 1947-இல் பல்கலைச் சொற்களை வெளியிட்டது. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் குழுவின் ஆதரவில் வெளியாகிக் கொண்டு இருக்கும் கலைக் களஞ்சியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் புதுபுதுக் கலைச் சொற்களை அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இலங்கை அரசாங்கம் கலைச்சொற்கள் சிலவற்றை நூலளவில் வெளியிட்டுள்ளது. திரு கி. இராமலிங்கனார் இயற்றிய "நகராட்சி முறை" என்ற நூலினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்டுள்ளது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் இயற்றிய தமிழ் ஆட்சி சொற்களைச் சென்னை அரசாங்கம் ஆராய்ந்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. ஆங்கிலத்தில் உள்ள பெரும்பான்மையான கலைச் சொற்கள் பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், லத்தின் ஆகிய மொழிகளிலிருந்து கடன்வாங்கி அமைக்கப்பட்டவை என்பது அறிஞர்கள் கண்ட முடிவு. எனவே, தொழில் நுட்பக் கலைச்சொற்கள் ஒரு நாட்டிற்கோ ஒரு மொழிக்கோ உரியன ஆகிவிடுதல் இல்லை. உலகப் பொதுச் சொற்களாக (International terminology) வழங்குகின்ற சில சொற்களை நேரே தமிழ் எழுத்துக்களில் அமைத்துக் கொள்வது தவறாகமாட்டாது. அவ்வாறு அச்சொற்களை வழக்கிற்குக் கொண்டுவருவதற்கு முன்னால், தமிழில் அவற்றைப் போன்ற சொற்கள் இல்லையா என்று முதலில் ஆய்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒத்த கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடிய சொற்கள் தமிழில் இல்லையென்றால், அக்கலைச் சொற்களை நேரே ஆங்கிலத்திலிருந்து அல்லது உலகப் பொதுக்கலைச் சொற்றொகையில் இருந்து எடுத்துக் கொள்ளுதல் கூடும். பொதுமக்கள் தொழில் நுட்பக் கலைச்சொற்களைப்பற்றி அவ்வளவு கவலைப் படுதல் இல்லை. ஆங்கிலம் நன்கு கற்ற அறிஞர் எல்லோருக்கும் ஆங்கிலத்தில் உள்ள கலைச்சொற்கள் விளங்கும் என்பது உண்மையன்று. அந்த அந்தத் துறையில் உள்ள கலைச் சொற்கள் அந்த அந்தத் துறையில் உள்ள ஒருவர் ஒருவருக்குத் தான் பொருள் விளங்கும். பொறியர் ஒருவருக்கு மருத்துவக் கலைச் சொற்கள் எல்லாம் விளங்க வேண்டும் என்பது கருத்தாக மாட்டாது. மருத்துவர் ஒருவருக்குப் பொறியர்க்கு உரிய கலைச் சொற்கள் எல்லாம் தெரிந்திருத்தல் வேண்டும் என்பதும் நியாயமாகாது. ஆயினும், ஏதாவது ஒரு பேரகராதியை எடுத்துப் புரட்டினால் யாவரும் அறிந்துக் கொள்ளக்கூடிய வகையில் தொழில் நுட்பக் கலைச் சொற்களும் பொருளோடு இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்று வேண்டுமானால் ஒருவர் சொல்லலாம்.

நான் ஒரு கதை கேட்டு இருக்கிறேன். ஒருநாள் வான நூல் வல்லாரைப்பற்றி ஓர் அறிஞர் ஒரு வினா கேட்டாராம். "வான நூல் வல்லவர்கள் ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களின் தூரம், வடிவம், பருமன், அசைவு, செலவு முதலியன பற்றி அறிந்து இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேனானாலும் அந்த அந்த நட்சத்திரங்களுக்கு அது அதுதான் பெயர் என்று அவர்கள் சொல்லுவது எவ்வாறு உண்மையாக முடியும்?" என்பது அக்கேள்வி. அவர் நினைத்துக்கொண்டு இருக்கிறார், நாம் இடும் பெயர்கள் இந்த உலகப் பொருள்களுக்கு உண்மையில் உண்டு என்று. அது அடிப்படையில் தவறு. அவற்றை நாம் அறிந்து கொள்ளுதற்கு, அவற்றைப்பற்றி நாம் பேசுவதற்கு, அவையன்றிப் பிறவற்றிற்குப் பெயர்கள் சென்றுவிடாமல் இருப்பதற்கு ஒரு வரையறை செய்து அவற்றிற்கு அது அது பெயர் என்று சொல்லி ஒரு மரபினை நாட்டி உள்ளோமே தவிர,

உண்மையில் அவ்வப்பொருள் அவ்வப்பெயர்கள் உடையன அல்ல ஆதலால், நட்சத்திரங்கள் போன்றவற்றிற்கு ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு பெயர் இருத்தல் தவறு ஒன்றும் இல்லை. அந்த அந்தப் பெயர்கள் அவ்வப் பொருளின் மறுபெயர்களாக இருக்கின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

பிரெஞ்சு விகுதி "இஇ" (ee) என்பதை ஆங்கிலச் சொல்லோடு சேர்த்துப் பல சொற்கள் ஆங்கிலத்தில் உண்டாக்கப்பட்டு விட்டன. டிரஸ்டி (Trustee) ரெப்ரி (Referee), எவேக்குவி (Evacuee) போன்ற சொற்களைக் கார்லைல் (Carlyl) அமைத்தார். அண்மையில், மிஸஸ் ரூஸ்வல்ட் (Mrs. Roosevelt) ரிடர்னீ (Returnee) எக்ஸ்பெல்லி (Expellee) போன்ற சொற்களை அமைத்துவிட, அவற்றை அமெரிக்கர்கள் வழங்குகிறார்கள். நம் நாட்டில் அவ்வளவு வேகத்தில் சொற்கள் வழக்கத்திற்குக் கொண்டுவரப்படுதல் இல்லையாயினும், சொல்லை அமைக்கும் ஆற்றல் நமக்கும் உண்டு என்பது உறுதி.

# ஆங்கில அகராதிகளில் தமிழ்ச்சொற்கள்

ஆங்கில மொழி உலகிலுள்ள பல்வேறு மொழிகளில் வழங்கும் சொற்கள் பலவற்றைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது என்பது பலர் அறிந்த உண்மை. உலக மக்கள் தொடர்பு காரணமாக உலக மொழிகள் பலவற்றிலிருந்து அப்பொழுதைக்கப்பொழுது ஆங்கில மொழி கடன் வாங்கிப் பயன்படுத்திய சொற்கள் உண்டு. சிலவேளைகளில் கருதிய அவ்வப்பொருளைக் குறிப்பதற்குரிய துல்லியமான சொற்கள் ஆங்கிலத்தில் இல்லாத காரணத்தால், அவ்வப் பொருளைக் குறிப்பதற்கு அந்தந்த மொழிச்சொற்களையே ஆங்கிலம் கடன் வாங்கிக்கொண்டிருக்கிறது. சிலவேளைகளில், பிற நாடுகளுக்குச் சென்ற ஆங்கிலேயர்கள் தமது நாட்டிற்குத் திரும்பிச்சென்ற பிற்பாடு தமது பேச்சிலும் எழுத்திலும் பிறநாட்டுச் சொற்கள் சிலவற்றை வழங்கிய காரணத்தால் ஆங்கில அகராதிகள் இடம் பெற்றவையும் உண்டு. ஆங்கில எழுத்தாளர்கள் சிலர் தேக்கரே, சௌத்தே, ருடியார்டு கிப்ளிங்கு, தாம்புசன் முதலியவர்கள் இயற்றிய பனுவல்களில் இந்தியச்சொற்கள் சிலவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். கி. பி. 16–வது நூற்றுண்டு முதல் 19, 20ஆம் நூற்றுண்டு ஆங்கிலேயர்களுக்கு இந்தியா தேசத்தோடு ஏற்பட்ட வாணிகத் தொடர்பினுலும், அரசியல் தொடர்பினுலும் ஆங்கில மொழியிற் சென்றேறி வழங்கிய சொற்கள் ஆங்கில அகராதிகளில் இடம்பெற்றுள்ளன. அத்தகைய

சொற்களுள் தமிழ்ச் சொற்கள் சில இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்படும்,

"அணைக்கட்டு" என்ற சொல் 1784இலேயே ஆங்கிலத்தில் வழங்கியுள்ளது. "இஞ்சி" என்ற சொல்லும் ஆங்கிலத்திற்குச் சென்று 'ஜிஞ்சர்' என்று வழங்குகிறது. ஜிஞ்சர் என்பது சமஸ்கிருத 'சிருங்கவேரா' என்ற சொல்லின் திரிபு எனச் சிலர் கூறுவர். 'சிருங்கா' என்பது கொம்பு என்னும் பொருளுடையது என்றும், 'வேரா' என்பது உடம்பு என்னும் பொருளுடையது என்றும், சிருங்கவேரா என்னுஞ் சொல் கொம்பு போன்ற வடிவுடைய பொருளைக் குறித்தது என்றும் அவர் பகர்வர். மலையாள மொழியிலுள்ள 'இஞ்சிவேர்" என்பதன் திரிபாகச் "சிருங்கவேரா" என்பது இருத்தல் கூடுமெனக் கர்னல் யூல் என்பார் கருதுகிறார். மலையாள "இஞ்சிவேர்" ஒருகாலத்தில் தமிழ் "இஞ்சிவேர்" தான் என்பது தெளிவு.

"ஓலை" என்னுந் தமிழ்ச்சொல் "ஓல" என மலையாளத்தில் காணப்படுகிறது. இதுவே போர்ச்சுக்கீசிய மொழியில் "ஓல்லா" என வழங்கத் தொடங்கி, போர்ச்சுக்கீசிய - ஆங்கிலேய தொடர்பினால் ஆங்கிலத்திலும் "ஓல்லா" என 1622 இலேயே வழங்கத் தலைப்பட்டதாகத் தெரிய வருகிறது. ஓலையோடு தொடர்புடைய 'இலை' என்னும் சொல் தொகைச்சொல்லாக ஆங்கிலத்திற் சேர்ந்திருக்கிறது. தமிழ்ப் "பச்சிலை" ஆங்கிலத்தில் "பட்சோலை" என 1845இல் போய் வழங்கத் தலைப்பட்டதாகத் தெரிகிறது. மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் காணப்படும் "பச்சிலை" மணமுடைய சாற்றினைத்தரும் ஓர் இலையாக ஆங்கிலத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. முப்பத்திருவகை ஓமாலிகைகளில் ஒன்றாகப் பச்சிலை மதிக்கப்பட்டதென்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது.

"கஞ்சி" என்னும் சொல் 1698 முதல் ஆங்கிலத்தில் வழங்கலுற்றமை தெரியவருகிறது. இராணுவச் சிறைக்குப் பெயராகக் "கஞ்சி வீடு" என ஆங்கிலத்தில் வழங்கியுள்ள

னர். சிறையகத்தே சோறு போடாமல் கஞ்சியே வார்க்கப் பட்டமையால் "கஞ்சி வீடு" என்பது சிறைக்குரிய பெயராக மதிக்கப்பட்டது.

தமிழ்க் "கட்டு மரம்" 1697இல் ஆங்கிலத்தில் வழங்கத் தலைப்பட்டது. "கட்டமரான்" என்ற வடிவில் ஆங்கிலத்திற் சென்றேறி வழங்கிய இச்சொல் தோணியைக் குறித்து, பிறகு தாக்குந் தோணியைக் குறிக்கத் தலைப்பட்டது; நாளடைவில் ஏட்டிக்குப்போட்டி செய்யும் பெண்டிரைக் குறிக்கத் தலைப்பட்டது. வம்புக்காரி என்ற பொருளிற் "கட்டமரான்" என்னுஞ் சொல் வழங்கத் தலைப்பட்ட ஆண்டு 1833.

"கணக்குப் பிள்ளை" என்னுந் தமிழ்ச் சொல் 1680இல் ஆங்கிலத்தில் "கணக்கப் பொருளை" என்ற வழக்கின தாயிற்று.

"கயிறு" என்பது திருக்குறளில் 'திருவினைத் தீராமை ஆர்க்குங் கயிறு' என முன்னரே ஆளப்பட்டுள்ளது. கயிற் றினாற் பிணிக்கப்பட்டுச் செல்லும் மிடா "கயிறு பிணித்துக் காடி வைத்த கலன்" எனப் பெரும்பாணாற்றுப் படையிற் பேசப்பட்டுளது. இது மலையாளத்திற் 'கயறு' என வழங்கு வது உண்டு; அங்குத் தேங்காய் நாரிலிருந்து திரிக்கப்படும் கயறு இதனாற் குறிக்கப்படும். இது 1582இல் "காயர்" என ஆங்கிலத்தில் வழங்கலுற்றது.

"கறி" என்னுந் தமிழ்ச்சொல் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் வழங்கி வருவதொன்று. சோறுங் கறியும் அடிப்படைத் தமிழ்ச்சொற்கள். கறிக்கப்படுவது கறி. இது இக்காலத்தில் கடிக்கப்படுவதெனக் கூறப்பட்டு வருகிறது. விலங்குகள் இலைகளைக் கடித்துத் தின்றன என்று குறிக்க வேண்டிய இடங்களிற் சங்ককால இலக்கியங்களுட் கறித் தன எனவே குறிப்பிட்டுள்ளனர். "மடப்பிணை - வேளை வெண்பூ கறிக்கும் ஆளில் அத்தம் ஆகிய காடே" எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்றனுள் வந்துள்ளது. "திரு

மருப்பு இரலை......செழும்பயறு கறிக்கும் புன்பன் மாலை" எனப் பெருங்குன்றூர் கிழார் பாடிய குறுந்தொகைப் பாடலில் வந்துளது. இவ்விடங்களில் கறித்தல் பொருளில் அமைந்துள்ளது. "கறி" என்னுந் தமிழ்ச்சொல் கன்னடத்தில் "கரில்" என வழங்கிப் போர்ச்சுக்கீசிய வழக்கிலும் "கரில்" என்று ஆகி, ஆங்கிலத்தில் "கர்ரி" என்று 1898 முதல் வழங்கிவருவது அறியப்படுகிறது. ஐரோப்பிய உணவு விடுதிகளில் "கர்ரி" இடம்பெற்றுள்ளது.

"காசு" என்னுந் தமிழ்ச்சொல் சின்ன நாணயத்தைக் குறிப்பதற்காக 1598இல் ஆங்கிலத்தில் எடுத்து வழங்கப்பட்டது. "வாசி தீரவே காசு நல்குவீர்" என்ற திருஞான சம்பந்தர் வாக்கு 7ஆம் நூற்றுண்டில் எழுந்தது.

"குயில்" என்னுந் தமிழ்ப் பறவைப் பெயர் "கோயல்" என்று ஆங்கிலத்தில் 1826இல் வழங்கத் தலைப்பட்டதாகத் தெரிகிறது. சமஸ்கிருதத்தில் 'கோகிலா' என்று இருந்தாலும், அதனுடைய திரிபாக இதனைக் கொள்ளாமல், குயிலுவது குயில் என்ற தமிழ் அடிவேர்ப் பொருளிலிருந்து கொள்ளுவதுதான் பொருந்தும்; குயிலுதல் என்றால் கூவியழைத்தல் என்பது பொருள். இப்பொருளில் இச்சொல் பழைய தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளது. "கொடியிடை சோலைக் குயிலோன் என்னும் படையுட் படுவோன் பணிமொழி கூற" என்ற சிலப்பதிகார வேனிற் காதைப் பகுதி சிறந்த எடுத்துக்காட்டு. "கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந்து திரித்த புதுப்பூஞ் செம்மல் சூடி" என நந்தத்தனார் சிறுபாணாற்றுப்படையிற் பாடினார்.

"குருந்தம்" என்னுந் தமிழ்ச்சொல் ஒன்பது வகை மணிகளில் ஒன்றாக மதிக்கப்படுவது. இது "குருவிந்தம்" என்றும், "விந்தம்" என்றுந் தமிழில் வழங்கியுள்ளது. சிலப்பதிகாரத்தில் "பதுமமும் நீலமும் விந்தமும் படிதமும்" என்றவிடத்தில் விந்தம் எனப் பேசப்பட்டுள்ளது குருவிந்தம் அல்லது குருந்தம் ஆகும். குருந்தம் என்னுஞ் சொல் ஆங்கிலத்

தில் "கொருந்தம்" என 1728இல் வழங்கலுற்றதாகத் தெரிகிறது.

"கூலி" என்னுஞ் சொல் தமிழில் "தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்" என்ற திருக்குறள் காலத்திற்கு முன்னாலேயே வழங்கியதொன்று. உழைப்பிற்கொத்த ஊதியம் கூலி எனப்பட்டது. உழைப் பாளரைக் கூலிகள் என்றனர் பிறமொழியினர்கள். போர்ச் சுக்கீசிய மொழிவழியாக ஆங்கிலத்தில் இச்சொல் 1598இல் வேலையாள் என்ற பொருளிற் சென்றேறி உள்ளது.

"தயிர்" என்ற சொல் சங்க காலத் தமிழிலக்கியங்களிற் பெருவரவிற்றாய் வழங்கியதொரு சொல். குறுந்தொகையில் "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்" என வந்துள் ளது. பெரும்பாணாற்றுப்படையில் "கம்புமுகிழ் உறை யமை தீந்தயிர் கலக்கி" என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறியுள்ளார். மலைபடுகடாத்தில் "கானிலை எருமை கழைபெய் தீந்தயிர்" என வந்துள்ளது. இச்சொல் மலையாளத்திலும் இதே வடிவத்தில் வழங்குகிறது. 1613இல் ஆங்கிலத்தில் இச்சொல் 'தயிர்' எனச் சென்று வழங்கத் தலைப்பட்டது. ஆக்ஸ்போர்டு அகராதியில் இது இடம்பெற்றுள்ளது. சமஸ்கிருதத்திலுள்ள 'தக்ரா' என்ற சொல் தண்ணீரோடு கலந்த தயிரை அதாவது மோரினைக் குறிக்கும் என்றும், தமிழ்ச்சொல் "தயிர்" சமஸ்கிருதச் சொல்லினின்று வந்தது என்றும் சிலர் கூறுவர். ஆயினும், இது பொருந்தாது. சமஸ்கிருதத்தோடு தொடர்புடைய ஏனைய இந்திய - ஐரோப்பிய மொழிகளில் இவ்வடிவம் காணப்படவில்லையாதலாலும், தமிழொடு தொடர்புடைய திராவிட மொழிகளில் இவ்வடிவம் வழங்குவதாலும், இச் சொல் முதலில் தமிழிலேயே வழங்கிற்று எனக் கொள்ளு தலே பொருந்துவது.

"தேக்கு" என்பது தமிழகத்திலும், கேரளத்திலும் பெருவரவிற்றாய் வழங்கும் ஒரு சொல். தமிழில் தேக்கு

எனப்படுவது மலையாளத்தில் 'தேக்கு' என வழங்குகிறது. "தெய்வமடையில் தேக்கிலைக் குவைஇறும் பைதீர் கடும் பொடு பதமிகப் பெறுகுவிர்" எனப் பெரும்பாணாற்றுப் படையில் வந்துள்ளது. "வேக்கின் அகவிலை" என்பது அகநானூற்றிற் காணப்படுகிறது. போர்ச்சுக்கீசிய மொழி வழியாக ஆங்கில மொழிக்கு 1698-இல் இச்சொல் சென் றுள்ளது. அழுத்தமான நல்ல மரத்தைக் குறிப்பதற்குத் தேக்கு என்னுஞ்சொல் இந்த மொழிகளிற் பயன்பட்டுள் ளது. 1842-ஐ ஒட்டிய ஆண்டுகளில் "ஆப்பிரிக்கன் டீக் என்றும் ,,நியூசிலாந்து டீக்" என்றும் மரவகைகள் சில ஆங்கிலத்திற் பெயர்பெற்று வழங்கத் தலைப்பட்டன.

"தோப்பு" என்னுஞ் சொல் 1698-இல் ஆங்கில மொழி யில் வழங்கப்பட்டிருக்கிறது. மரங்கள் நிரம்பியுள்ள இடம் தொகுப்பு அல்லது தோப்பு எனப்பட்டது. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய மொழி களில் தோப்பு என்ற வழக்கு உண்டு. இதனைச் சில ஆங்கில அதிகாரிகளும் பயணிகளும் எடுத்து வழங்கத் தலைப்பட்டார்கள்.

"பிண்ணாக்கு" என்பது தமிழில் 'பிழி' அல்லது 'பிள்' என்ற அடியிலிருந்து பிறந்துள்ள சொல். எண்ணெயைப் பிழிந்த பிறகு கட்டியாக அமையும் பொருள் பிண்ணாக்கு எனப்பட்டது. இது ஆங்கிலத்தில் 1890-ஐ ஒட்டிய ஆண்டு களில் "பூனாக்" என வழங்கத் தலைப்பட்டு அகராதிகளில் இடம் பெற்றுள்ளது.

"புங்கம்" என்னும் மரப்பெயர் பொருநராற்றுப்படை, சிலப்பதிகாரம் போன்ற பழைய நூல்களிற் காணப்படு கிறது. புன்க மரத்து எண்ணெய் விளக்கு எரிப்பதற் கும், தோல்நோய்களைப் போக்குவதற்கும் பயன்படும் ஒரு வகை நெய். இந்த நெய்யைப் பற்றிய பேச்சு 1866-இல் ஆங்கிலத்தில் "புங்கா ஆயில்" என எழுந்தது.

"பூசை" என்னுஞ் சொல் பழைய திராவிட மொழிச் சொல் என்பது மார்க் காலின்ஸ், டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி ஆகிய அறிஞர்களது கருத்து. பூவினால் செய்யப்படுவது "பூசெய்" என முதலில் வழங்கிப் பிறகு "பூசை" எனத் திரிந்திருத்தல் வேண்டுமென இவர்கள் கருதுகிறார்கள். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய மொழிகளில் "பூ" என்பது மலர் என்னும் பொருளில் மிகுதியாக வழங்குகிறது. திருத்தம்பெறாத திராவிட மொழிகளாகிய தோடர் கோடர் மொழிகளிலும், கூவர் கோண்டர் மொழிகளிலும் இச்சொல் வழங்குகிறது என்பதைப் பேராசிரியர் பர்ரோ அவர்களும் எடுத்து விளக்கிக் காட்டியுள்ளார். பூசை என்பது சமஸ்கிருத 'பூஜா' என்ற சொல்லிலிருந்து திரிந்து வந்தது எனக் கருதுவார் சிலர் உளராயின், புராதன திராவிட அடிவேரினின்று இது பிறந்தது என மதித்தற்குரிய சான்றுகள் உள. இது ஆங்கிலத்தில் 1806இலிருந்து வழங்குகிறது.

"மாங்காய்" என்ற தமிழ் - மலையாளச் சொல் போர்ச்சுக்கீசிய மொழியிலும், ஸ்பேனிஷ் மொழியிலும் வழங்கலுற்றுப் பிறகு ஆங்கிலத்திற் சென்று சேர்ந்துள்ளது. 1665இல் சர். டி. ஹெர்பர்ட்டு என்பார் எழுதிய பயண நூலில் ஆங்கிலத்தில் இச்சொல் 'மேங்கோ' என வழங்கியுள்ளது. அவ்வடிவத்தில் ஆங்கில அகராதிகளில் இது இடம்பெற்றுள்ளது. 'மா' என்ற மரப்பெயரடியாக 'மாங்கனி', 'மாங்காய்', 'மாந்தளிர்' போன்ற பல்வேறு சொற்கள் தமிழில் எழுந்துள்ளன, எடுத்துக்காக "மாவின் கனியொடு வாழைத் தீங்கனி" எனச் சிலப்பதிகாரத்தில் வந்திருப்பதைக் குறிப்பிடலாம். "மாவின் தளிர் ஏரென்ன மேனி" என மதுரைக் காஞ்சியில் வந்துள்ளது. "கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்" என்று ஆலங்குடிவங்கனார் குறுந்தொகையிற் கூறியுள்ளார். ஐயை கோயிலிற் சேமரமும் மாமரமும் நிரம்பியிருந்தன என்பதைச் 'சேவும் மாவும் செறிந்தன' என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

'வெட்டி வேர்' என்ற தமிழ்ச்சொல் 1858இல் ஆங்கிலத்திற் சென்று சேர்ந்து அவ்வடிவில் அகராதிகளில் எடுத்து அமைக்கப்பட்டுள்ளது.

'வெற்றிலை' என்பது தமிழ் மலையாள மொழிகளிலிருந்து போர்ச்சுக்கீசிய மொழிக்குச் சென்று 'பெட்டெல்' என்ற வடிவில் ஆங்கில மொழியில் 1553இலேயே வழங்கத் தலைப்பட்டது. 1681 இல் ஒருவகை மிளகைக் குறிக்க 'பெட்டெல்' என்பது வழங்கியுள்ளது. விறுவிறுப்புள்ள ஒருவகை இலை என்ற கருத்தில் இச்சொல் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். வெற்றிலையொடு கலந்து பாக்கு தின்னப்பட்டதால் கொட்டைப்பாக்கு ஆங்கிலத்தில் 'பெட்டல்நட்' என்று கூட வழங்கப்பட்டுவிட்டது.

இவ்வாறு அப்பொழுதைக்கப்பொழுது சில தேவைகளை நிரப்புதற்காக ஆங்கிலத்திற் சென்று சேர்ந்து வழங்கிய தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கில அகராதிகள் சிலவற்றில் இடம் தந்துள்ளனர்.

# பழமொழிகள்

பழமொழிகள் என்ருல் பழமை வாய்ந்த மொழிகள் என்று பொருள். இவற்றை முதுசொற்கள் என்றும் சொல்லுவார்கள். பழமொழிகள் என்ற மாத்திரையானே அவைகள் பழங்காலந்தொட்டு வழங்கிவருகின்றன என்பது பெறப்படும். பழங்காலந்தொட்டென்ருல். எக்காலந்தொட்டு என்று திட்டமாய்ச் சொல்ல முடியாது; இடைக்காலத்து வந்த சில சொற்களும் பழமொழிகளாய் இன்று வழக்காற்றில் உள்ளன. இப்பொழுது பிறக்கும் சில மொழிகளும் பழமொழிகளாதல் கூடும்.

பழமொழிகள் எப்படி எழுந்திருக்கக்கூடும்? முற்காலத்திலே ஒருசிலர் சிற்சில அனுபவங்களை அடைந்தார்களாகவும். அவ்வனுபவங்களின் பயனை உடனிருப்போரும் அறியும்பொருட்டு அடிக்கடி அவர்கள் பலரிடை அவற்றைக் கூறி இருத்தல்வேண்டும். இத்தகைய மொழிகளைக் கேட்டுக் கேட்டுப் பலர் காது தொளைக்கப்பட்டிருக்கும். அதன்பின் அப்பலரும் வேறு பலரிடையே, சமயம் வாய்ப்புழியெல்லாம் அவற்றைச் சொல்லிச் சொல்லி வந்திருக்கவேண்டும். இவ்வாறு கேட்ட மொழிகளைப் பெரியோர் சிறியோர்க்கும், பெற்ருேர் மக்களுக்கும், ஆசிரியர் மாணவர்க்குமாக அடிக்கடி அறிவுறுத்தி வந்திருக்கவேண்டும். அறிவிக்க அறிந்த சிறியோரும், மக்களும், மாணவரும் நாளடைவில் அம்மொழிகளைத் தம்முள்ளேயும் அறிவித்தவர்களிடையேயும் வழங்கி வந்திருக்கவேண்டும். இங்ஙனமாகத்தான் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவரது அனுபவத்தின் பயனாய் எழுந்த ஒவ்

வொரு மொழியும் காது செவிடுபடப் பிறர்க்குச் சொல்லப் பட்டு, நாளடைவில் பழமொழி என்ற பெருமையை அடைந் திருக்கவேண்டும்.

இதனுனே அறியப்படுவது என்ன ? பழமொழிகளெல் லாம் நம்போலியரது அனுபவத்தால் முற்காலத்து எழுந்தன என்பது. ஆதலால் அவற்றை உள்ளவாறே கொள்ள வேண்டும் எப்பொழுதும், எக்காலத்தும், எவ்விடத்தும் என்பது ஆகாது. ஏனெனில், பழங்காலத்திற்கு ஏற்ற சில மொழிகள் இக்காலத்திற்கு ஏற்காமல் இருக்கலாம் ; அக் காலத்திற்கு முற்றும் ஏற்றவை தற்காலத்திற்குச் சற்றே ஏற்கலாம். அதனுல் பழையனவெல்லாம் நல்லவை என் றும் புதியனவெல்லாம் தீயவை என்றும் கொள்ளுவது ஏற் காது. பழையவற்றில் உண்மையும் நன்மையும் இருப்பிற் கொள்ளவும், இன்றேல் தள்ளவும் நமக்கு உரிமையுண்டு; அங்ஙனஞ் செய்வதுதான் அறிவுடைமையாகும்.

ஆதலால், பழமொழிகள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து எவை உண்மையை யுரைப்பதால் இக்காலத்துக் கும் ஏற்றவை என்றும், எவை முற்றுமுண்மை உரைக்காது பாதியுண்மையே உரைக்கின்றன என்றும், எவை எவை ஸ்வார்த்தமாகக் (literal) கொள்ளப்படாமல் பிறிதொரு பொருளை விளக்குவதாகக் கொள்ளப்படவேண்டும் என்றும், எவை உண்மை யுரைக்கவில்லை யென்றும் ஆராய்தல் அமை வுடைத்தே. அவ்வாறு எல்லாப் பழமொழிகளையும் ஆராய்ந்து காட்டுவது இக்கட்டுரையில் இயலாது. ஒரு சிலவற்றை எடுத்துக்காட்டும் முகத்தான், பிறரையும் இதைப்போல் ஆராய்ந்து உண்மை காணும்படி தூண்டக்கூடும் என்ற ஒரே நோக்கத்தாற்றான் இஃது எழுகின்றது.

முதற்கண் எப்பழமொழிகள் நம்மறிவிற்கும் ஆராய்ச் சிக்கும் அதீதமாக நின்று உண்மையென ஒப்புக்கொள்ள வேண்டியனவாய் உள்ளன என்று பார்ப்போம். இவை பெரும்பாலும் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்டவொண்ணு இறைவனைப்பற்றியவும்,

நாம் இங்கிருந்து காணவொண்ணு மறுமையுலகத்தைப் பற்றியவுமாம். " அகதிக்குத் தெய்வமே துணை " என்ற பழமொழியை ஆராய்ந்து நம்பத்தான் வேண்டியிருக்கின்றது. "அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்" என்பதை 'அரசன் அன்று கேட்பான், தெய்வமோ அன்றுங் கேட்கும்; அன்றி நின்றும் கேட்கும்' என்பதாக மாற்றிக்கொள்ளக் கூடும். ' அவனன்றி அணுவும் அசையாது' என்பதையும் நம்பத்தான் வேண்டியிருக்கிறது. அப்படியே ' இடுவது பிச்சை, பெறுவது மோட்சம் ', 'இட்டாருக்கு இட்ட பலன் ' என்பனவும் 'உள்ளக் கருத்து வள்ளலுக்குத் தெரியும்' என்பதும் உண்மையாய்த்தான் இருத்தல்வேண்டும். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதன் கருத்து ' உண்மையாக உள்ளத்தால் நம்பினோர் கைவிடப்படார் ' என்பதாயின் உண்மையே. 'முன்னவனே முன்னின்ருல் முடியாத பொருள் உளதோ' என்பதை உன்னிப் பார்க்கவும் நாம் அருகரேயோ?

இன்னுஞ் சில பழமொழிகள் அனேகமாக உண்மையானவை என்று கொள்ளக்கூடியனவாய் உள்ளன. அவற்றுள் ஒன்று 'அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை', 'அதிக ஆசை அதிக நஷ்டம்', 'அதிர்ஷ்டமும் ஐசுவரியமும் ஒருவர் பங்கல்ல', 'அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்', 'வாழ்வும் தாழ்வும் ஒருவழி நில்லா' என்பனவும் இவ்வர்க்கத்தனவே. ' நிழலருமை வெயிலுக்குப் போனுல் தெரியும் ' என்பதும் அனேகமாக உண்மைதான். 'அழுதழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்' என்பதும் ஸ்வார்த்தமாக முற்றிலுமுண்மையாகவும் பிறிதொரு பொருளைக் குறிக்குமிடத்து ஒரோவொரிடத்து உண்மையாகவும் இருக்கின்றது. " பணமில்லாதவன் பிணம் " என்பது பெரும்பாலும் மெய்யே. "ஆரால் கேடு, வாயால் கேடு" என்பதும், "உலகம் பலவிதம் " என்பதும் இத்தகைத்தே. ' உட்கார்ந்தல்லவோ படுக்கவேண்டும் ' என்பதும் சாதாரணமாக சகஜந்தான். " எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம் " என்பதும், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்பதும் அனேகமாக

'மெய்யேயன்றோ? 'ஒரு காசு பேணின் இரு காசு தேறும்' என்பதும் 'ஓரூர்ப் பேச்சு ஓரூர்க்கு ஏச்சு' என்பதும் அனேகமாக உண்மையே. 'கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு போதும்', 'கல்வி அழகே அழகு' என்பன மக்களின் குறிக்கோளையன்றோ காட்டுகின்றன? இவற்றையனேகமாக உண்மை என்று கொள்வதால் வரும் இழுக்கும் உளதோ? "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்", "தன்னெஞ்சு அறியாத பொய்யில்லை" என்பன மெய்யேயன்றோ? "கேட்டதெல்லாம் நம்பாதே, நம்பினதெல்லாம் சொல்லாதே" என்பது உண்மையறிவு கொளுத்துவதல்லவா? "சாட்சிக்காரன் காலில் விழுவதைப்பார்க்கிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்" என்பது பெரும்பாலும் கொள்ளத்தக்கதன்றோ? 'தான் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பதும் பெரும்பாலும் உண்மையேயன்றோ? "நாட்சென்றீவது நடைக் கூலியாகாது" என்பது மெய்யென்பது நாம் அறியாததேயோ? "பகுத்தறியாமல் துணியாதே, படபடப்பாகச் செய்யாதே" என்பது பழமொழி விஷயத்திலும் உண்மையே அன்றோ? 'பல துளி பெரு வெள்ளம்' என்பதை மறுக்க, வலிந்து முயன்றாலும், முடியுமோ? 'புலி அடிக்கும் முன்னே கிலி அடிக்கும்', 'பெண்டாட்டி கால்கட்டு பிள்ளை வாய்க்கட்டு' என்பன முற்றிலு முண்மையாகாது சிற்சில சமயங்களில் மாத்திரமே யுண்மையாம்.

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்", "வாய் நல்லதானால் ஊர் நல்லது", "வெள்ளம் வருமுன்னே அணை கோல வேண்டும்" என்ற இப்பழமொழிகள் உண்மை என நம்பிக் கெடுவாரும் உண்டோ? எனவே இப்பகுதியில் கூறிய மொழிகளை வாயாளுவதால் வரும் இழுக்கு ஒன்றும் ஏற்படாதென்பது எனதெண்ணம். இவற்றைக் கூட்டியோ குறைத்தோ உரைத்துக்கொள்ள எல்லோர்க்கும் உரிமை யுண்டென நான் சொல்லின் "உங்கள் தேங்காயை உடைத்துக்கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு" என்று சொல்வது போலிருக்கும்.